KALKI 8.9.2002
ரூ. 6.00

# கல்கி

வீரப்பன்
வேட்டை!





கொஞ்சம்
சிரிப்பு;
கொஞ்சம்
நடிப்பு!


உங்கள் இல்லங்களில் செல்வம் செழித்திட,
எடுத்துச் செல்லுங்கள் சத்யா ஃபர்னிச்சர்களை.
ESTABLISHED
1968
தரமான இந்திய ஃபர்னிச்சர்களையே வாங்குவோம்! இந்தியாவை வளமாக்குவோம்!
Sathya
ஃபர்னிச்சர் உலகம்
LIFETIME INVESTMENT
Major Credit Cards accepted
மாபெரும் ஃபர்னிச்சர் ஷோரூம்கள்
மைலாப்பூர் : சத்யா கார்ப்பரேஷன் (20,000 சதுர அடி) 69 & 70, இராயப்பேட்டை ஹைரோடு
(வள்ளுவர் சிலை அருகில்) சென்னை - 4. ∴போன்- 498 2930 / 31, 498 3929
அண்ணாநகர் மேற்கு - DABC Bldg., 6, M T H Rd, (TVS - பாடி எதிரில்),
சென்னை - 50. ∴போன் - 6544929/ 6545029
கோயம்புத்தூர் – 266, மேட்டுப்பாளையம் ரோடு, (சாயிபாபா கோயில் பஸ் ஸ்டாப்), ∴போன் : 452929, 452930, 98422 42929
திருச்சி - 23, நந்தி கோயில் தெரு, தெப்பக்குளம், ∴போன் - 704414

# கார்மேகம்



வழக்கமான பண்ணையார் பாணி மண் வாசனைப் படம்தானே என்று அலட்சியத்தோடு உட்கார்ந்தால் அமைதியாகத் தொடங்கி, மெல்ல மெல்ல அசத்தி விடுகிறது கார்மேகக் கூட்டணி.

ஒரு கிராமத்தையே, கிட்டத்தட்ட கொத்தடிமை போல தமது கட்டுபாட்டில் வைத்திருக்கிறார் பண்ணையார் ராதாரவி. இராணுவத்திலிருந்து திரும்பும் இவரது மூத்த மகன் மம்முட்டி, அதை அடியோடு மாற்றுகிறார்.

கதையின் தயாரிப்புத் தேதி பழசாக இருந்தாலும், குன்றுமணி அளவுகூட குழப்பமில்லாத திரைக் கதையால் படம் வழுக்கிக் கொண்டு ஓடுகிறது.

காவிரி நதிநீர்ப் பிரச்னையை, இரு ஊர் ஏரி நீர்ப் பிரச்னையாக்கி, நெற்றிப் பொட்டில் அடித்த மாதிரி எளிமையாகச் சொல்லியிருக்கும் இயக்குனர் எஸ்.பி. ராஜ்குமாரின் இயக்கத்தில் நிஜ மண் வாசனை.

தமது தந்தையையோ, தம்பியையோ இருத்துவதற்கு மம்முட்டி பெரிதாக முயற்சிகள் எடுக்காதது நெருடுகிறது. ஆனால், அவரது பாத்திரப்படைப்பு எக்ஸ்ட்ரீம், ஹீரோயிசம் இல்லாமல் கொஞ்சம் யதார்த்தத்தோடு இருப்பது பெரிய ஆறுதல்.

மற்றொரு நெருடல் சீனியர் மம்முட்டி, தோற்றத்தில் தங்கை போலிருக்கும் அபிராமியோடு துளியும் பொருத்தமில்லாமல் டூயட் பாடுவது..

தனி டிராக் உணர்வைத் தந்தாலும் சலவைத் தொழிலாளியாக வ்டிவேலு அடிக்கும் லூட்டிகளால் வயிறு நரம்புகள் வலியெடுத்து விடுகின்றன. குறிப்பாக, பாம்புச் சட்டையை அயர்ன் செய்துவிட்டு அவர் படும் பாடு உயர்தர காமெடி.


பசுமை அழகோடு படம் பிடித்திருக்கும் ஒளிப்பதிவாளர் ராம் நாத் ஷெட்டி கவனிக்க வைக்கிறார்.

மேகம் திரண்டு, பின் காற்றடித்துக் கலைந்து போய் ஏமாற்றி விடாமல் நிஜமாகவே பொழிந்து விடுகிறது!

— விஷுவல்தாசன்

- அபவ் ஆவெரஜ்

# மனோகரம் அழகிதான்!



கடந்த வாரம் தான் சுதந்திர தினத்தையொட்டி எல்லோருமே 'எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு..' என்று கர்வமாகப் பாடினோம். பலன்? சுதந்திர மாகக் காட்டில் திரிந்து கொண்டிருந்த வீரப்பன், கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பாவை தடாலடியாகக் கடத்தி விட்டான். முன்னாள் அமைச்சர் வீரப்பனின் லிஸ்டில் தன் பெயர் இருக்கக் கண்டு செக்யூரிடிக் காக மன்றாடினாராம். ஆனால் அரசு செவி சாய்க்கவில்லை என்பது தெரி கிறது. அமைச்சரின் தலையில் குறி பார்த்து துப்பாக்கியை வைத்து "என்னு டன் வா" என தமிழில் ஆர்டர் போட்டிருக்கிறான். அமைச்சரின் மனைவி பரிமளா கதறி வீரப்பனின் காலில் விழுந்து கெஞ்சியதாகவும், அவன் 'சர்த் தான் போமே' என்று அலட்சியமாகத் தள்ளியதாகவும் தகவல். வழக்கம் போல் காட்டில் ஹாயாக யானை மான் வேட்டையாடிக் கொண்டே காஸெட் மேல் காஸெட்டாக தன்னுடைய நிபந்தனைகளை அள்ளி வீசிக் கொண்டிருக்கிறான். போன முறை உதவிய டாக்டர் பானுவும், கையை விரித்து விட்டார். ராஜ்குமாரும் அவரது மனைவியும் கை குவித்து "வீரப்பா... அவரை விட்டுவிடப்பா" என்று உருக்கமாக வேண்டிக் கொண்டனர். கர்நாடகா மற்றும் தமிழ் நாடு முதல்வர்கள் அமைச்சர்கள், காவல்துறையினர், அப்பாவி மக்கள் என இனி எல்லோருக்குமே தலைவேதனைதான்!

தற்கொலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருவது கவலை தரும் செய்தி. கடந்த ஒரு வாரத்தில் மட்டுமே பெங்களூரில் ஆறு தற்கொலைகள். ஹெட் கான்ஸ்டபிள் நீலப்பா தமது மனைவி இரு மகள்கள் சகிதம் தற்கொலை. நீலப்பாவின் மகளான பதினான்கு வயதான ராஜ ராஜேஸ்வரி கடந்த மே மாதம் கடும் வயிற்று வலியால் பாதிக்கப்பட்டு வலி பொறுக்காமல் தற்கொலை செய்து கொண்டாளாம். "நாங்களும் அவளி டமே போய்ச் சேருகிறோம்" என சீட்டு எழுதி வைத்து விட்டு இறந்து போனார்கள். இன்னொரு கேஸில் பிரதீப், அம்மு என்ற காதல் ஜோடி, திருமணத்திற்குத் தடை விதித்த பெற் றோரை மீறி, வீட்டை விட்டு ஓடி, யெலஹங்காவில் நண்பனின்

**அரவாணிகள் மீது ஒட்டு மொத்தமாக எப்படிப் பழி போடலாம்?**

வீட்டில் அடைக்கலம் புகுந்தனர். வேலைக்குப் போன, நண்பனும் அவன் மனைவியும் மாலை வீடு திரும்பினால், காதல் ஜோடி தற்கொலை செய்து கொண்டு வேறு உலகில் சந்தோஷமாகக் குடும்பம் நடத்தப் போய்விட்டது தெரிந்தது. பெங்களூரில் மட்டுமே வருடந்தோறும் எழுநூறு தற்கொலைகள் நடக்கின்றனவாம். நகர வாழ்க்கை தந்த பரிசு இவ்வளவு கொடூரமா?

**பெ**ங்களூரில் அரவாணிகளுக்கென 'ஹிஜ்ரா ஹப்பா' சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினர்களாக வந்து சிறப்பித்த போலீஸ் கமிஷனர் சங்கிலியானாவிற்கும் அழகி நந்திதா தாஸுக்குமிடையே சிறு விவாதம் சூடாகக் கிளம்பி, நிகழ்ச்சியை மேலும் சுவாரசியமாக்கியது.

நகரத்தில் நடக்கும் பல திருட்டு மற்றும் கிரிமினல் குற்றங்களுக்கு அரவாணிகளே காரணம் என்று சங்கிலியானா குற்றம் சாட்ட, கொதித்தெழுந்து விட்டார் அழகி.

"சமூகத்தில் பல தரப்பினர் இருக்கிறார்கள். எத்தனையோ குற்றங்கள் நடக்கின்றன. பரிதாபத்திற்குரிய அரவாணிகள் மீது ஒட்டு மொத்தமாக எப்படிப் பழி போடலாம்? அவர்களுடைய குறைபாடு அப்பட்டமாக வெளியில் தெரிவதாலா?'' என்று பதிலடி கொடுத்தார் நந்திதா தாஸ். பிறகு அரவாணிகளின் ஆடல், பாடல், ஃபேஷன் ஷோ நடந்தது. சங்கிலியானா எழுந்து போய் விட்டார் பாதியிலேயே (வேலைப் பளு?) "நம்மில் ஒருவராகத்தான் இவர்களைப் பார்க்கிறேன். நமக்கிருக்கும் எல்லா மனித உரிமைகளும் இவர்களுக்கும் இருக்க வேண்டும்'' என உருகிக் கேட்டுக் கொண்டார் நந்திதா தாஸ். அழகிய முகம்; அதை விட அழகிய மனம்!



அண்டை வீட்டு வம்பு

**1949**ம் வருடம் நாகப்பா என்பவர் ஜெய நகரில் முந்நூற்றி நாற்பது ரூபாய் செலவில் சின்னஞ்சிறு ப்ளாட் ஒன்று வாங்கிப் போட்டார். ஆனால் இதைப் பற்றி தமது பிள்ளைகளிடம் சொல்லவேயில்லை. அந்த இடத்தில் வேறொருவர் வீடு கட்டி நிம்மதியாக இருந்து வந்திருக்கிறார். சுமார் ஐம்பது வருடங்களுக்குப் பிறகு பிடிஏ (BDA) கமிஷனர் ஜெயகர் ஜெயராம் தலைமையில் ஒரு குழு செயல்பட்டு இந்த தில்லுமுல்லுவைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். நாகப்பாவின் மருமகள், பேரனிடம் ப்ளாட்டை ஒப்படைத்திருக்கிறார்கள். கமிஷனர் ஜெயகருக்கு ஒரு வழக்கமாம். தினசரியில் 'காலமானவர்கள்' பகுதியில் வரும் பெயர், முகவரியைக் குறித்துக் கொள்வாராம். அவர்கள் பெயரில் ஏதேனும் ப்ளாட் இருக்கிறதா, அதில் யார் தற்சமயம் இருக்கிறார்கள் என்று தீவிரமாக விசாரணையைத் தொடங்கி விடுவாராம். ஜெயகருக்கு ஒரு ஜே!

– லதா சேகர்

# கொஞ்சம் சிரிப்பு; கொஞ்சம் நடிப்பு!



ஜெயா டி.வியில் 'கவுண்ட் டவுன்' ஷோவில் கலக்கிக் கொண்டிருக்கும் கலகல காம்ப்பியர் உஷாவிடம், ''உங்களுக்கு ரொம்ப பிடிச்ச பத்து விஷயத்தை, 'கவுண்ட் டவுன்' பண்ணுங்க'' என்று கேட்டோம்:

*''சினிமாவில் நடிக்கச் சொன்னால் அலர்ஜி. மணிரத்னம், ஷங்கர், பார்த்திபன், தங்கர் பச்சான் என நிறைய பேர் அழைத்தும் 'ஸாரி' சொல்லிட்டேன்.''*

* *ரொம்ப பிடிச்ச விஷயம் கார் ஓட்டறதுதான். அதென்னவோ தெரியலை. என்னோட ஆல்டோ போலஸ் கார், நான் ஓட்ட ஆரம்பிச்சதும் ஜெட் விமானம் போல பறக்க ஆரம்பிச்சுடுது. இன்னும் பதினெட்டு வயசு ஆகலைங்கிறதனாலே, டிரைவிங் லைசென்ஸ் இல்லை. ஒருமுறை எக்கச்சக்கமா மாட்டிக்கிட்டேன். "ஓடிவிலே வர்ற பொண்ணா...? பார்த்துப் போங்கம்மா" என்று அட்வைஸ்*

செய்து அனுப்பிவிட்டார் அந்தப் போலீஸ்காரர்.

• சிங்காரச் சென்னையிலே, எங்கெங்க ஐஸ்க்ரீம் பார்லர் இருக்குது, அதுலே என்னென்ன வெரைட்டி இருக்குது போன்ற விஷயத்தில் நான் பி.எச்.டியே வாங்கிடலாம்... அதிலும் கலந்து கட்டி, லெமனேட் எல்லாம் கலந்து சாப்பிடறதுதான் என்னோட ஸ்டைல்!

• மூணாவதா பிடிச்சது, சண்டை போடறதுதான். அதுவும் என் தம்பி கார்த்திக்குடன் சண்டை போடறதுன்னா செம ஜாலி. அம்மாகூட யார் படுத்துக்கிறதுன்னுதான் சண்டை. "தம்பி, சின்னப் பையனாச்சே விட்டுத் தரக் கூடாதா?"னு ஏகப்பட்ட சிபாரிசு வரும். ஆனா, உரிமைப் போர்ன்னு வந்துட்டா, உஷாவின் கொடிதான் பட்டொளி வீசிப் பறக்கும்.

• 'ஹைடி' கார்டூன் பார்த்து விசித்து விசித்து அழ பிடிக்கும். ஹைடிக்கு அம்மா அப்பா கிடையாது. முரட்டுத் தாத்தா மட்டுமே. அவள் அழும்போதெல்லாம் நானும் அழுவேன்.

• ஒருமுறை ஒரு ஜோடி முயல் வாங்கி வளர்த்தேன். வெள்ளையும், வெளிர் சிவப்புமா ரொம்ப அழகா இருந்ததுங்க. ஆனால், யாரோ வைச்ச எலி மருந்தை இதுங்க சாப்பிட்டுட்டு, பரிதாபமா செத்துப் போச்சு. பத்துநாள் அழுதேன். இப்பவும் எங்கேயாவது முயல் பார்த்தா ஆசையா தூக்கி வைச்சுக்கப் பிடிக்கும்.

• அடுத்ததா பிடிச்ச விஷயம் ரகம் ரகமா டிரஸ் வாங்கிக் குவிக்கிறதுதான். லேட்டஸ்டா என்ன ஃபேஷன் வந்தாலும், 'உஷா'ராயிடுவேன். அப்பாக்கிட்டே கிரெடிட் கார்டு இருக்கு. அப்புறம் என்ன? புதுசு புதுசா அணிந்து தோழிகள் பாராட்டை வாங்கி, பைக்குள்ளே போட்டுக்க வேண்டியதுதானே!

• சமைக்கப் பிடிக்கும். என்னோட ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் சேர்ந்தா, சமையலறையை கார்கில் மாதிரி ஆக்கி விடுவோம். ஒருமுறை கேக் செய்தேன். வெனிலா கேக் 'புஸ்'னு ரொம்ப அழகா உப்பலா வந்துச்சு. 'ஆஹா...'னு பாராட்டிக்கிட்டே வாயிலே போட்டவங்க எல்லாரும் 'தூ'னு துப்பிட்டாங்க. அப்புறம்தான் தெரிந்தது. ஆறு சிட்டிகை பேக்கிங் சோடாவுக்குப் பதிலா ஆறு ஸ்பூன் போட்டுவிட்டது. அந்தக் கேக்கைச் சாப்பிட்ட என் தோழி ஒருத்திக்கு ஒரு வாரம் வயிற்று வலி...

• ஏரோபிக்ஸ் செய்யப் பிடிக்கும். "நீ காம்பியர் பண்றதே ஏரோபிக்ஸ் மாதிரிதான் இருக்கு"னு ஃப்ரெண்ட்ஸ் கிண்டல் பண்றதுண்டு. ஜாலிப் பிசாசுகள்!

• காம்பியரிங் மாடலிங் செய்யப் பிடிக்கும். 'கலகலப்பா காம்பியரிங் செய்யறீங்களே?'னு கேக்குறாங்க. அது ஒண்ணும் பெரிய விஷயமே கிடையாது. கொஞ்சம் சிரிப்பு, கொஞ்சம் நடிப்பு இரண்டையும் கலந்து பேசினா, 'கிளிக்' ஆயிடும். ரொம்ப டீஸன்ட் ஆன விளம்பரங்கள் மட்டுமே ஒப்புக்கொள்கிறேன். மன்னா ஹெல்த் டிரிங்க், கோல்ட் வின்னர், திரிபுவனம் புடைவை... இப்படி ஹோம்லியா இருந்தாதான் அம்மா 'ஓகே' பண்ணுவாங்க.

• நல்ல சினிமா பார்க்கப் பிடிக்கும். ஆனால் சினிமாவில் நடிக்கச் சொன்னால் அலர்ஜி. மணிரத்னம், ஷங்கர், பார்த்திபன், தங்கர் பச்சான் என நிறைய பேர் அழைத்தும் 'ஸாரி' சொல்லிவிட்டேன். டீ.வியில் நிகழ்ச்சி செய்து, ஏதோ கொஞ்சம் பாப்புலராகி, பாக்கெட் மணிக்குப் பணம் சேர்த்தால் போதாதா? அப்புறம் என் இன்ஜினியரிங் கனவு என்ன ஆவது?

சந்திப்பு: **சானல் சாப்ளின்**

அட்டைப்படம், படங்கள்: ஸ்ரீஹரி



# இசையில் மயங்கும் தூரிகை!



இசையைக் கேட்டபடி, ஏதாவது வேலையில் ஈடுபடுவது சகஜமான விஷயம்தான். ஆனால் ஆர்ட் டைரக்டர் தோட்டாதரணி புதுமை செய்திருக்கிறார். ஆமாம்! இசைக்கே ஓவிய வடிவம் கொடுத்திருக்கிறார். இப்படி வரையப்பட்ட தோட்டா தரணியின் ஓவியங்கள் 'சிம்ஃபனி' என்ற தலைப்பில் ஒரு கண்காட்சியாக சென்னையில் வைக்கப்பட்டிருந்தன.

ஏவி.எம். ஸ்டுடியோ வளாகத்தில் உள்ள குடில் போன்ற சூழல் கொண்ட தோட்டாதரணியின் அலுவலகத்தில் அவரைச் சந்தித்துப் பேசினோம்.

"எப்போதுமே எனக்கு இசை ஒலித்துக் கொண்டே இருக்கும் சூழ்நிலையில்தான் சிந்திக்கப் பிடிக்கும், பேசப் பிடிக்கும், தூரிகை பிடிக்கப் பிடிக்கும். மென்மையான இசை, எனக்கு உற்சாகமூட்டி, சுறுசுறுப்பாக வைக்கும். ஆனால், சிம்ஃபனி முயற்சி சற்றே வித்தியாசமானது.

"ஓவியம் வரையும் முன்பு, பீதோவன் தொடங்கி, நம் ஊர் இசைக் கலைஞர்கள் வரை யாராவது ஒருவருடைய, சிடியை ஓடவிட்டு, கண்களை மூடிக் கொண்டு, உள்வாங்கிக் கொள்வேன். அதன்பின் ஓவியம் தீட்டத் தயாராகிவிடுவேன். மறுபடி அதே இசை ஒலிக்கத் தொடங்கும். இசைக்கு ஏற்ப, என் மனத்தில் ஏற்படும் உணர்வுகள், என் கைகளை இயக்க, அவ்வுணர்வுகள் வண்ணத்தில் பதிவாகும். இசையின் நெளிவு சுளிவுகள், நகாசு வேலைகள், கோடுகளாகவும், கீற்றுகளாகவும் இடம் பெறும். இது ஒரு புதிய முயற்சி" என்கிறார் தோட்டா தரணி.

இந்தக் கண்காட்சியில் இடம் பெற்றுள்ள ஓவியங்களின் விற்பனை மூலம் கிடைக்கும் நிதி, 'டாங்கர் பவுண்டேஷன்' என்ற அமைப்புக்குத் தரப்படுகிறது.

— எஸ். சந்திரமௌலி

# "இந்த முறை விட மாட்டோம் வீரப்பனை!"




**வீ**ரப்பன் ஏரியாவில் உலா வரும் தமிழக அதிரடிப் படை வீரர்களிடம் உற்சாகமும் ஆவேசமும் ஒரு சேரப் பொங்கி வழிகின்றன. உற்சாகத்திற்குக் காரணம் கூட்டு அதிரடிப் படைத் தலைவர் தேவாரம். அதிரடிப் படை வீரர்களோடு தோளோடு தோள் நின்று காட்டுக்குள் ஊடுருவி, அவர்களது உடல் நலம் மற்றும் தேவைகளை அறிந்து ஊக்கம் காட்டிச் செயல்படுகிறார். ஆவேசத்திற்குக் காரணம், "இந்த முறை எப்படியேனும் வீரப்பனை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடிக்க வேண்டும்" என்ற வெறி.

ஆறாயிரம் சதுர கி.மீ. காட்டில் தமிழக அதிரடிப் படையின் முகாம்கள் பன்னிரண்டு உள்ளன. தேவாரம் தினசரி ஏதாவது ஒரு முகாமுக்கு விஜயம் செய்கிறார். அங்குள்ள வீரர்களோடு உணவு உண்டு, அவர்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார். அந்த அனுபவங்களின் அடிப்படையில் புதிய யுக்திகளை வகுக்கிறார். "தமிழ்நாடு மற்றும் கர்நாடக அதிரடிப் படைக்கிடையே மிகச் சிறப்பாக ஒருங்கிணைப்பு இருக்கிறது. பின் பலமாக இரு மாநில அரசுகளும் இருக்கின்றன. எப்படியும் இந்த முறை அவனை விட மாட்டோம். பிடித்தே தீருவோம்" என்று உறுதியான குரலில் சொல்கிறார் தேவாரம்.

"எப்படி இவ்வளவு உறுதியாகச் சொல்கிறீர்கள்?

'1993ல் அதிரடிப் படை அமைக்கப்பட்டது. அடுத்த இரண்டு, மூன்று வருட காலங்களில் வீரப்பன் கும்பலோடு நடந்த மோதல்களில் கிட்டத்தட்ட நாற்பத்தெட்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதற்கெல்லாம் போலீஸ் ரிகார்டு உண்டு. அவனது கும்பலின் எண்ணிக்கை ஐந்தாகக் குறைக்கப்பட்டது. வனத்துறை அதிகாரி சிதம்பரநாதன் கடத்தப்பட்டபோது அவரை மீட்டது அதிரடிப் படைதான். 1996க்குப் பிறகு அடுத்த ஐந்து வருட காலத்தில் அவனைப் பிடிக்க எடுக்கப்பட்ட முயற்சி பற்றிச் சொல்

**''எங்களுக்கு எந்தவிதமான தடைகளும் இல்லை. முழு மூச்சாக இறங்கிவிட்டோம்.''**

வதற்கு ஒன்றுமில்லை. ராஜ்குமார் கடத்தப்பட்டது இந்த காலகட்டத்தில்தான். தமிழ்த் தீவிரவாதிகளும் வீரப்பன் பக்கம் இருப்பது தெரிய வந்தது அப்போதுதான். தனித் தமிழ்நாடு கோஷம் காட்டிற்குள் எதிரொலித்ததும் அப்போதுதான். ஆனால் கடந்த பதினெட்டு மாதங்களில் வீரப்பன் வேட்டையில் எவ்வளவோ முன்னேற்றம். கடந்த ஒரு வருட காலத்தில் மலைவாழ் மக்களிடமிருந்து அதிரடிப்படை பற்றி எந்தக் குற்றச்சாட்டும் கிடையாது. மாறாக, பல்வேறு நலப்பணிகளைச் செய்து வருகிறோம். சாலை வசதி, மருத்துவ வசதி என்று அதிரடிப்படை மக்கள் சேவை செய்து வருகிறது. அதிரடிப்படை முகாமில் மலைவாழ் இளைஞர்களுக்குப் போலீஸ் வேலை தேர்ச்சிக்கான பயிற்சி கொடுக்கப்படுகிறது. வீரப்பன் கும்பலுக்குச் சென்ற உணவு சப்ளை வெட்டப்பட்டிருக்கிறது. தற்போது மலைவாழ் மக்கள், விஷயங்களைப் பரிமாறிக் கொள்ள முன் வந்திருக்கிறார்கள். இப்போது நடந்திருக்கிற இந்தக் கடத்தலே அவனது வாழ்வில் இறுதியாக இருக்கும். நாகப்பா உயிருக்கு எந்தவித ஆபத்துமில்லாமல் அவரை மீட்போம்."



* கர்நாடக டி.ஜி.பி. பால்கர்

"முன்பு ஒரு முறை, வீரப்பன் கும்பலில் மூன்று பேர்தான். அதுவும் வீரப்பன் ஒரு நோயாளி; அவனால்

# வரிந்து கட்டுகிறார் தேவாரம்!



* சத்தியமங்கலம் அதிரடிப்படை முகாம்



* அமர்க்களப்படும் ஆசனூர் முகாம்



* தேவாரம்

சரியாக இயங்க முடியாது என்று சொன்னீர்கள். இப்போது எட்டு பேருடன் வந்து கடத்திக் கொண்டு போய்விட்டானே!

"வீரப்பன், சேத்துக்குளி கோவிந்தன், சந்திரா கவுண்டர் ஆகிய மூன்று பேர்தான் இப்போது கும்பலில் உள்ளனர். அதில் மாறுதலில்லை. ஆனால் வீரப்பன் இயங்க முடியாத நிலையில் உள்ளான் என்று ஒரு போதும் நான்



* அதிரடிப்படை தலைவர் நடராஜ்

சொன்னதில்லை. நான் என்ன முட்டாளா அதுபோலச் சொல்வதற்கு. வீரப்பனை நான் நேருக்கு நேர் பார்த்திருந்தால்தான் அப்படிச் சொல்ல முடியும். நான் போய் பார்க்காத போது எப்படிச் சொல்ல முடியும்? நான் அது போல சொன்னேன் என்பதற்கு ஏதாவது ஆதாரம் காட்டினால் நான் ராஜினாமா செய்து விடுகிறேன். மேலும் அவனிடம் பணம் இருக்கிறது. எனவே அவ்வப்போது கூடுதலாக ஆட்களைச் சேர்த்துக் கொள்ளும் சாத்தியம் உண்டு.

"காட்டுக்குள் அதிரடிப் படை சந்திக்கும் சவால்கள் என்ன?"

''அட்டை மற்றும் விஷப் பூச்சிகள் தொல்லை காரணமாக வீரர்கள் பெரும்பாலும் உடல் நிலை சரியில்லாமல் இருக்கிறார்கள். ஆனாலும் அவர்களிடமும் உறுதியும் வேகமும் இருக்கின்றன. இதில் மிகக் குறிப்பிடத்தக்க விஷயம், வீரர்கள் எல்லோரும் தாமாகவே விரும்பித்தான் இந்தப் பணிக்கு வந்திருக்கிறார்கள்.



• அதிரடிப்படை பாதுகாப்பு

சென்ற மாதம் முதல்வர் காவல் துறையினரைச் சந்தித்தபோது கூட, நிறைய காவலர்கள் அதிரடிப் படையில் சேருவதற்கு விருப்பம் தெரிவித்தார்கள். இப்போதிருக்கும் படையில் ஒருவர் கூட என்னை வேறு பணிக்கு போடுங்கள் என்று கேட்கவில்லை என்றால் அவர்கள் ஆர்வத்தை எடை போடுங்கள்.

"கடந்த சில மாதங்களில் அதிரடிப் படை வீரர்கள் எண்ணிக்கை குறைக்கப்பட்டு அவர்கள் வேறு பணிக்கு அனுப்பப்பட்டதாகச் சொல்லப்படுகிறதே."

"அது தவறான தகவல். வீரர்கள் எண்ணிக்கை குறைக்கப்படவில்லை. இதுதவிர இந்தப் படையில் ஏற்கெனவே பணியாற்றிய அதிகாரிகள் அவசரத் தேவைக்குப் பயன்படும் விதமாகக் காட்டை ஒட்டியுள்ள மாவட்டங்களில்தான் கண்காணிப்பாளர்களாகப் போடப்பட்டுள்ளனர்.

## திக்குத் தெரியாத காட்டில்!

• அதிரடிப் படையின் தலைமை முகாம் சத்திய மங்கலத்தில் ஒரு கல்யாண மண்டபத்தில் உள்ளது. மிக நவீன வசதிகள், தொலைத் தொடர்பு கருவிகள் என்று லேட்டஸ்டாக இருக்கிறார்கள். வீரர்களுக்கு பொழுது போக்க விளையாட்டுச் சாதனங்கள், ஜிம் முதலியனவும் உண்டு. சமையலறையும் நவீனம்தான்.

• ''இருப்பத்தியேழு வருடங்களுக்கு முன்னர் ஒரு கொலை விஷயமாக துப்புத் துலக்க சத்தியமங்கலம் வந்தேன். அப்போது வனத் துறையின் உதவியுடன் காட்டையே சலித்தோம். இப்போது மீண்டும் வந்திருக்கிறேன்'' என்றார் டி.ஜி.பி. நைல்வால்.

• நாகப்பா கடத்தப்பட்டது சரியாக இரவு பத்து மணிக்கு. பத்தரை மணிக்கு தமிழ்நாடு அதிரடிப் படைக்கு தகவல் வந்துவிட்டது. பதினொரு மணிக்கு அதிரடிப்படை எஸ்.பி. செந்தாமரைக் கண்ணன் படைகளுடன் சம்பவம் நடந்த இடத்தையொட்டி உள்ள தமிழக பகுதியை கண்காணிக்க விரைந்து விட்டார்.

• ''மலை மேல் 147 கிராமங்கள் உள்ளன. ஆனால் மக்கள் யாரும் வீரப்பனுக்கு உதவுவதாக இல்லை. அவனது உறவினர்கள் உள்ள ஒரு சில கிராமங்களை நம்பித்தான் அவர் இருக்கிறார்'' என்று சொன்னார் அதிரடிப் படை அதிகாரி ஒருவர்.

• ''எங்கள் ஆட்களுக்கு உள்ள மைனஸ் பாயிண்ட் சப்தம்'' தான். காட்டில் நடக்கும்போது எவ்வளவுக்கெவ்வளவு, எந்தவித ஒலியும் எழுப்பாமல் நடக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு வீரப்பனைப் பிடிப்பதற்கான வாய்ப்புகள் அதி

கரிக்கும். வீரப்பனின் ப்ளஸ் பாயிண்ட், சப்தம் காட்டாமல் நடமாடுவதும், சப்தநாடியும் ஒடுக்கியபடி ஒரே இடத்தில் மணிக்கணக்காக உட்கார்ந்திருப்பதும் தான். "சில இடங்களில் காடு அடர்த்தியாக இருப்பதால், பக்கத்திலேயே அவன் அமர்ந்திருந்தால்கூட எங்களால் பார்க்க முடியாத வகையில் அவனால் இருக்க முடியும் என்கிறார்கள் அதிரடிப் படையினர்.



* அடர்ந்த காட்டுக்குள்ளே...

* "வீரப்பன் விரும்பி வேட்டையாடிச் சாப்பிடுவது கருங்குரங்கு மாமிசம். எனவே கருங்குரங்குகளை வேட்டையாடிப் பிடித்து அவற்றின் உடலில் மறைவான இடத்தில் லேசர் கருவிகளை வைத்து மீண்டும் காட்டிற்குள் அவற்றை விட்டுவிட வேண்டும். இதன் மூலம், வீரப்பன் நடமாட்டத்தைப் பற்றி தெரிய வரும் வாய்ப்பும் உண்டு" என்கிறார் தகவல் தொடர்பு அறிஞர் ஒருவர்.

* மிகுந்த சிரமத்துடன் பணி செய்வதால் தங்களுக்குக் கூடுதல் அலவன்ஸ் தர வேண்டுமென்று அதிரடிப் படை வீரர்கள் விரும்புகிறார்கள். அதிரடிப் படையின் ரகசிய சேவைக்கென லட்சக் கணக்கில் ரூபாய் செலவாகிறது. பல்வேறு கிராமங்களில் அதிரடிப் படையைச் சேர்ந்த வீரர்கள் மக்களோடு மக்களாக வாழ்ந்து வருகிறார்கள். வீரப்பன் நடமாட்டத்தைத் தெரிந்து கொள்ளவே இந்த ஏற்பாடு.

* "அரசாங்க அதிகாரிகள் மற்றும் வி.ஐ.பி.களை கடத்தும்போதுதான் விஷயம் பெரிதாகிறது. மற்றபடி வீரப்பன பண்ணையார்கள் மற்றும் கல்குவாரி அதிபர்களை அடிக்கடி கடத்துவதும் பணம் பறிப்பதும் ரகசியமாகவே நடக்கிறது என்கிறார்கள்.

* முன்னாள் அமைச்சர் நாகப்பா கடத்தல் விவகாரம் எந்த நேரமும் ஒரு அதிரடியான முடிவுக்கு வரக் கூடும் என்ற எதிர்பார்ப்பு அதிரடிப்படை வட்டாரத்தில் நிலவுகிறது. மலைப் பகுதியில் தொடர்ந்து மழை பெய்வதால், தேடுதல் வேட்டை பல சங்கடங்களைச் சந்தித்து வருகிறது. உடல் நலமில்லாத நாகப்பாவை வீரப்பன் விட்டு விடும் வாய்ப்பும் இருக்கிறதாம். "வீரப்பன் ஒரு கோழை. அதிரடிப் படையுடன் அவன் என்றுமே நேரிடையாக மோதியதில்லை. அது போன்ற சமயங்களில் தப்பியோடவே முயல்வான்" என்கிறார்கள் அதிகாரிகள்.

*"நாகப்பாவை மீட்டு வீரப்பனைப் பிடிப்பதற்கான யுக்தி தான் என்ன?"*

*"அதை உங்களிடம் சொல்ல முடியுமா? எங்களுக்கு எந்தவிதமான தடைகளும் இல்லை. முழு மூச்சாக இறங்கிவிட்டோம். தமிழக அதிரடிப்படையும் கர்நாடக அதிரடிப்படையும் தனித்தனியாகவும் கூட்டாகவும் தேடுதல் வேட்டை நடத்துகின்றன.*

*"மத்திய அரசு, கண்காணிப்பு விமானம் மற்றும் ஆள் நடமாட்டத்தைக் கண்டு பிடிக்க ரகசியக் கருவிகள் ஆகியவற்றைக் கொடுக்கப் போவதாக தகவல் வந்துள்ளதே!*

"படை வீரர்களோ, மற்ற உதவியோ எது வந்தாலும் கூடுதலாக அவற்றையும் பயன்படுத்த நாங்கள் தயார். அதே சமயம் இப்போது எழுந்துள்ள நிலையைச் சமாளிக்க, சந்திக்க நமது படையும் தகுதியாகத்தான் இருக்கிறது.

*"வீரப்பன் இரண்டு வருடமாக ஓசையில்லாமல் இருந்தான். இப்போது மீண்டும் அதிரடியாகச் செயல்பட்டதற்கு ரஜினி, ராமதாஸ் ஆகியோரின் பேச்சும் காரணமாக அமைந்திருக்குமோ?*

*'நீங்க அதையெல்லாம் சம்பந்தப்பட்டவங்ககிட்டே போய்க் கேட்கலாமே!" (சிரிக்கிறார்)*

**— கௌசி**

படங்கள் : **ராஜன்**






# கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
- பாரதியார்.

## வீரப்பன் வெறியாட்டம்;
## தமிழக அரசின் திண்டாட்டம்!

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கன்னட நடிகர் ராஜ்குமார் வீரப்பனால் கடத்தப்பட்ட போது, 'கருணாநிதி ராஜினாமா செய்ய வேண்டும்' என்று அடித்துப் பேசினார் ஜெயலலிதா.

ஆனால், இப்போது – கர்னாடக முன்னாள் அமைச்சர் நாகப்பா கடத்தப்பட்டுள்ள நிலையில் – கர்நாடக அரசின் அலட்சியம் காரணமாகவே இது நிகழ்ந்துள்ளதாகக் கூறுகிறார் தமிழக முதல்வர்!


வீரப்பனைப் பிடிப்பது சுலபமல்ல என்பது மீண்டும் மீண்டும் நிரூபணமாகி வருகிற விஷயம்.

'ராஜ்குமார் விடுதலையான சமயத்தில், வீரப்பன் இந்தியாவை விட்டே ஓடிச் செல்ல அனுமதிக்கப்பட்டுவிட்டான்' என்று வாதாடியவர்தான் ஜெ.

அதன் பிறகு அவரே தமிழக முதல்வராகி,



2002 செப்டெம்பர் 8
சித்ரபானு ஆவணி 23
மலர் : 61
இதழ் : 6




பணியிலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரி தேவாரத்தை, சிறப்புக் காவல்படைத் தலைவராக மீண்டும் நியமித்தார். அந்த நியமனம் குறித்து கடும் விமர்சனங்கள் எழுந்ததையும் அவர் பொருட்படுத்தவில்லை. வீரப்பன் வேட்டையில் கோடிக்கணக்கான ரூபாய் செலவாகி வருகிறது. தேவாரத்தின் மாதச் சம்பளம் மட்டுமே 25,000 ரூபாய்!

'நாட்டை விட்டே ஓடிவிட்டான் வீரப்பன்' என்று சொன்னவர்தான் அவனைப் பிடிக்க இத்தனை தூரம் மக்களின் வரிப் பணத்தைச் செலவு செய்யத் தயாராயிருக்கிறார்.


கோடிக் கணக்கில் செலவு செய்த பின்னரும் அவனைத் தம்மால் பிடிக்க முடியவில்லை என்பதை மறைத்து, நாகப்பா கடத்தலுக்கு கர்நாடக அரசு மீது அவர் பழிபோடுவது அநியாயம் மட்டுமல்ல; அநாகரிகமும்கூட.

கர்நாடகாவின் சிறப்புக் காவல்படைப் பிரிவுத் தலைவர் கெம்பையா பணிமாற்றம் செய்யப்பட்டதனால் அக் காவல் துறையின் பிடி தளர்ந்துவிட்டது என்றும் தமிழகத்திலிருந்து கர்நாடகம் சென்ற பத்திரிகையாளர் குழு முறையிட்டதன் பின்விளைவுதான் இது என்றும் ஜெயலலிதா இத்தருணத்தில் கூறுவது அபாண்டமானது; மிக அபாயகரமானது.

தமிழ்நாட்டுப் பத்திரிகையாளர் குழு, எஸ்.எம். கிருஷ்ணாவைச் சந்தித்தது, நக்கீரன் நிருபர் சிவசுப்ரமண்யம் வழக்கில் நிகழ்ந்து வரும் மனித உரிமை மீறல்களைச் சுட்டிக் காட்டத்தான். அக் குழு கூறியதை முறையான கவனத்துடன் கேட்டுக் கொண்ட எஸ்.எம். கிருஷ்ணா, அவ்வாறு கேட்டுக் கொள்வது தமது கடமையும்கூட என்று இப்போதும் கூறுகிறார்.

காவல்துறை அதிகாரியை மாற்றியதற்காக கர்நாடக முதல்வரை விமர்சிக்கும் ஜெ, தாமும் 'நிர்வாக காரணங்கள்' கருதி கொத்துக் கொத்தாக அதிகாரிகளை மாற்றியதை மட்டும் மறந்து போகிறார்.

இக்கட்டான ஒரு சந்தர்ப்பத்தில் அண்டை மாநில முதல்வருக்கு உதவுவதற்குப் பதில்




உபத்திரவம் இழைக்கிறது இப்பேச்சு. தமிழ்நாட்டுக்கும் கர்நாடகாவுக்கும் இடையே இவ் விஷயத்தில் ஒற்றுமை இல்லை என்கிற செய்தியைத்தான் இது வீரப்பனுக்குத் தெரிவிக்கும். அவனது கொட்டமும் வெறியாட்டமும் வஞ்சகமும் அதிகரிக்கத்தான் இது உதவும்.

'கடத்தப்பட்டவரின் குடும்பத்துக்கு அனுதாபம், ஆதரவு; கர்நாடக அரசுக்கு அயராத ஒத்துழைப்பு' என்கிற ரீதியில், சம்பவம் நடந்த உடனேயே ஜெ. பேசியிருப்பாரேயானால், அது கௌரவமாக இருந்திருக்கும்.

இப்போதேனும் கர்நாடக அரசுடன் ஒத்துழைப்பதாக அவர் கூறியிருக்கிறாரே என்று மகிழ்ச்சி கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்! இதற்கும்கூட எஸ்.எம். கிருஷ்ணாவின் கர்வமற்ற அணுகுமுறையே காரணம். இதற்கும்மேல், கர்நாடக அரசு கௌரவம் பாராமல், கெம்பையாவை மீண்டும் அழைத்து, தேடல் பணியில் ஈடுபடுத்தியிருக்கிறது.

கர்நாடக முதலமைச்சர் தமது காவல் துறையினருடன் கலந்தாலோசித்து திட்டம் வகுத்தது போல், தமிழக முதலமைச்சரும் செய்தாக வேண்டும். மத்திய அரசு அனுப்பும் துருப்புகளை எவ்வாறு பயனுள்ள வகையில் ஈடுபடுத்தலாம் என இரு மாநிலங்களும் இணைந்து திட்டமிட வேண்டும்.

வீரப்பன் பிரச்னை கர்நாடகாவின் பிரச்னையோ தமிழ்நாட்டின் பிரச்னையோ மட்டும் அல்ல; சமூக விரோத, மானுட விரோதப் பிரச்னை என்கிற முறையில் அணுகி, வேறுபாடு களைக் களைந்து, விரைவாகவும் அதே சமயம் மிக கவனமாகவும் செயல்படவேண் டும்.

தமிழ்நாட்டின் இதர தலைவர்களும் 'ரஜினியைத் தூது அனுப்புங்கள்' என்பது போன்ற அபத்த அறிக்கைகளை வெளியிடாமல் மௌனம் காக்க வேண்டும். கட்சி எல்லைகளையும் அரசியல் வேறுபாடுகளையும் கடந்த தார்மிக ஆதரவை இந்தத் தேடுதல் முயற்சிக்கு அனைவரும் வழங்க வேண்டும். ○

# இரட்டை வேடம் ஏனய்யா?

வட்டமேஜை




நீங்கள் கேட்டவை'யில் கூந்தலூர் சி.ஜெயராமன் வினாவில், "மங்கையராகப் பிறப்பதற்கே மாதவம் செய்திட வேண்டும் என்றார் பாரதியார்" என்கிறார். அப்படிச் சொன்னவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. நீங்களாவது திருத்தியிருக்கலாம்.
திருக்கழுக்குன்றம், வ.சிவசங்கரன்

'மாயமான் வேட்டை' பரிசுக் கதை, வருங்கால மாணவ சமுதாயத்தைச் சிந்திக்க வைக்கும் சீரிய படைப்பு!
விழுப்புரம், ஆர்.ராஜகோபால்

எழில்மிகு சென்னை ஹெராயின் எனும் போதைப் பொருளுக்கு அடிமையாகிவருவதைப் படித்து அதிர்ந்தேன். இனியாவது அரசு விழித்துக் கொண்டு கடுமையான சட்டம் இயற்றி, போதை வஸ்துக்களை ஒழிக்க வேண்டும். இல்லையெனில் 'எதிர்கால இந்தியா இளைஞர்கள் கையில்' எனும் நமது கலாமின் கனவு தகர்ந்துவிடும்.
திருவாரூர், எஸ்.பாலச்சந்தர்

உண்மையைப் பொய்யாக்கும் 'ஜெ'. அரசை நோக்கி நீங்கள் எழுப்பியிருக்கும் பதினோரு கேள்விகளுக்கும் உண்மையான உறுதியான பதிலைத் தந்தாலொழிய 'பத்திரிகை விரோத அரசு' என்று களங்கத்திலிருந்து தப்பிக்க முடியாது. கஞ்சித் தொட்டியை மட்டுமல்ல; ஒட்டு மொத்த தமிழகத்தையுமே கவிழ்க்கப் பார்க்கிறார் ஜெ... என்பதுதான் நிகழ்கால உண்மை.
திருவாரூர், ஆர். ராமசுப்ரமணி

அட்டையில் பாபாவின் அசத்தல் போஸ்! ஆனால் விமர்சனத்தில் மட்டும் விளாசல்!! உமக்கு ஏனய்யா இந்த இரட்டைவேடம்?
கும்பகோணம், எஸ்.கே.மூர்த்தி

96ம் பக்கம் - நகைச்சுவை திங்கள்
17ம் பக்கம் - காதல் செவ்வாய்
78, 79ம் பக்கங்கள் - காவிய புதன்
1, 2, 3ம் பக்கங்கள் - அதிரடி வியாழன்
25, 26ம் பக்கங்கள்-சூப்பர்ஹிட் வெள்ளி
தோட்டப்பாளையம்,
கவிதா வெங்கடேசன்

விநாயகப் பெருமானுக்குரிய அறுபடை வீடுகளைத் தொகுத்தளித்தவர் ஒரு முஸ்லீம் சகோதரர். மதநல்லிணக்கத்துக்கும் சகோதரத்துவத்திற்கும் தமிழ்நாட்டில் பஞ்சமேயில்லை என்று தெரிகிறதல்லவா?
திருப்பரங்குன்றம், டி.கே.சுப்பிரமணியம்

ஆறுதல் பரிசு பெற்ற ப்ரணாவின் தமாஷ் ஹைகூ சிந்திக்கவும், சிரிக்கவும் செய்தது.
தஞ்சாவூர், இரா. ஆதிநாராயணன்

சினி பூ

# ஊர்வசி கலகலப்பு!



• கணவர் மனோஜ், குழந்தையுடன் ஊர்வசி

**நா**ங்க அப்ப அசோக்நகர் வீட்டுல குடியிருந்தோம். மொத்தம் முப்பத்தைந்து பேர்! கூட்டுக் குடும்பமா இருந்தோம். என்கூட பிறந்தவங்க, கல்பனா, கலா, கமல், பிரின்ஸ்னு நாலே பேருதான். மத்தவங்க எல்லாம் நாங்க வளர்த்த செல்லப் பிராணிகள்.

அணில், மர நாய், பச்சைக்கிளி, நாய், பூனை, புறா, மைனா, வெள்ளெலி, பசு, முயல், வாத்து, கோழி, லவ்பேர்ட்ஸ்னு வீடே மினி ஜூ மாதிரி இருக்கும். எங்க அம்மா விஜயலட்சுமிக்கு இந்தப் பிராணிகள் மேலே உயிர். "என் பசங்க"னு பெருமையாச் சொல்வாங்க.

அதுலே பேசும் கிளியும் இருந்தது. அதோட பேரு லக்ஷ்மி. அந்தக் கிளி, அசைவ அயிட்டம்னா ஒரு பிடி பிடிக்கும். ஆறிப் போனா, முகத்தைத் தூக்கிட்டுப் போயிடும். சுடச்சுட அடுப்பிலே இருந்து எடுத்துத் தரணும். ரொம்ப கர்வம்! எங்க மேலே ரொம்ப பாசம். நாங்க ஷூட்டிங் முடிச்சுட்டு வீட்டுக்குள்ளே வந்தா, எங்க அம்மா கூப்பிடுற மாதிரியே 'மக்களே'னு செல்லமாக் கூப்பிடும்.

தனிக்குடித்தனம் போனப்போ எங்க அம்மாக்கிட்டே ஆசையாக் கேட்டது, இந்தக் கிளியைத்தான். ஆனால் அவங்க மறுத்துட்டாங்க.

"நீங்க இரண்டு பேருமே ஷூட்டிங், அது இதுனு பிஸியா இருக்கிறவங்க. சரியா கவனிச்சுக்க மாட்டீங்க"னு சொல்லிட்டாங்க.

இந்த ஃப்ளாட்டில் செட்டிலாகி இரண்டு மாசத்துக்கு ரொம்ப 'ஹோம் சிக்' ஆயிட்டேன். எப்பவும் 'பசங்க' ஞாபகம்தான். அம்மா வீட்டுலே கலகலப்பா இருந்துட்டு, இங்கே படு பயங்கர அமைதி. என்னவோ போல இருந்தது!

அப்புறம் என் மகள் தேஜாலக்ஷ்மி பிறந்தா. அவ வளர, வளர, எங்க வீடு மறுபடியும் கலகலப்பா ஆயிடுச்சு. அந்தச் செல்லப் பிள்ளைகள் மொத்தமா அடிக்கிற லூட்டியை, இவ ஒருத்தியே அடிக்கிறதாலே, போதும் போதும்னு ஆயிடுது. அப்புறம் நாயாவது... பூனையாவது... இரட்டை (ச)வால் தேஜு போதுமே!

சந்திப்பு: அனு

# காயா பழமா?



• பாசுமதி நெல் வயல்

முளை கட்டிய கொத்துக் கடலையை, கோதுமையுடன் சேர்த்து, மாவாக அரைத்து சப்பாத்தி, பூரி செய்தால் மிகவும் சத்துள்ளதாகவும், சுவையாகவும் இருக்கும்.

- கே. விஜயலட்சுமி,

அமெரிக்க உச்சநீதிமன்றம் 1893ம் ஆண்டு தக்காளி பற்றி ஒரு தீர்ப்பு கூறியது. இதன்படி தாவரவியல் வல்லுனர்கள் தக்காளியை ஒரு கனியாகவும், வணிகர்களும் பொதுமக்களும் தக்காளியை ஒரு காயாகவும் கருத வேண்டும்.

- தெ. இராமன்.

வெற்றிலை போடுவதற்கு முன்பு வெற்றிலையின் காம்பையும் நுனியையும் கிள்ளி எறிந்து விடுகிறோம். ஏன் தெரியுமா? இலைகளில் முதலில் நுனியும் காம்பும்தான் அழுக ஆரம்பிக்கும்.

- தேனி முருகேசன்.

மழைக் காலங்களில் உப்பு ஜாடியில் இரண்டு பச்சை மிளகாய் போட்டு வைத்தால் உப்பு கசியாது.

- ஆர். பிரகாசம்

தஞ்சாவூரில் நெற்பயிர்கள் வாடிக் கொண்டிருக்கும் நிலையில், பாசுமதி அரிசி பற்றி துணுக்கு வருவது அடுக்குமா என்று தெரியவில்லை. 'அரிசியின் அரசி' என்று பெயர் பெற்றுள்ள பாசுமதியின் ஸ்பெஷாலிடியே, 'கமகம' வாசனையும், குழையாத இயல்பும்தான். 'அமிலோஸ்', அமிலோபெக்டைன்' என்ற மாவுச்சத்து வகையில் இருக்கும் விகிதாசாரம் மிகச் சரியாக இருப்பதால், பாசுமதி அரிசி குழைவதில்லை. அஸிடைல் - 2, பைரோலைன் - 1 என்ற விகிதத்தில் இயற்கை சத்து இருப்பதால் வாசனையாகவும் இருக்கிறது. பஞ்சாப், ஹரியானா, ஹிமாசல பிரதேஷ், டேராடூன் போன்ற இடங்களில் விளையும் பாசுமதி மிக மிக ஒரிஜினல் என்பதால், இந்த விளைநிலங்களில் மட்டும் ஏற்றுமதி சங்கதி அமர்க்களமாக நடக்கிறது.

உலக அளவில் மிக அதிகமாகப் பயன்படுத்தப்படும் உணவுப் பொருள் உருளைக் கிழங்கு. அடுத்த மூன்று இடங்களை முறையே வெங்காயம், பூண்டு, தக்காளி பிடிக்கின்றன.

- அப்ஸரா

பலன் தரும் பண்ணை நிலம் – பழத்தோட்டம் – சொந்தமாக வாங்குதல் – செய்தி

## முதலீட்டிற்கு ஏற்ற இலாபமும் கிடைக்கும் "கல்கி வார இதழ் தொடர்ந்து இலவசமாகப் பெற நல்ல திட்டம்

அன்புடையீர், வணக்கம். வைர விழா கொண்டாடிவரும் **"கல்கி"** பத்திரிகையின் நிரந்தர வாசகரான தங்களுக்கு ஓர் அரிய செய்தியைத் தெரிவிக்க இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

சென்னையிலிருந்து 65 கி.மீட்டர் தொலைவில் காஞ்சிபுரம் போகும் பாதையில் வாலாஜாபாத் அருகே பாலாற்றங்கரையில் அமைந்துள்ளது, நாங்கள் பராமரிக்கும் **அன்னை ஆர்ச்சர்ட்ஸ்** பண்ணை நிலங்கள்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட, மாமரங்கள் பயிரிடும் திட்டத்தின் முதல் கட்ட அமைப்பில் நூற்றுக்கணக்கானோர் பண்ணை நிலம் வாங்கியுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் ஜனவரி 1999, நவம்பர் 2000 ஆகிய மாதங்களில் உயர்ரக ஏற்றுமதித் தரம் வாய்ந்த மாங்கன்றுகள் நடப்பட்டுவிட்டன. சிறந்த விவசாய நிபுணர்கள் அவ்வப்போது கூறும் ஆலோசனைகளின்படி பண்ணை நிலங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு கட்டத்திலும் பூச்சி மருந்து அடித்து, கவனமாக மாங்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. பண்ணை நிலம் வாங்கிய அனைவர்க்கும் ஐந்தாவது ஆண்டிலிருந்து காய்க்கும் பழங்களைச் சந்தையில் விற்பனை செய்வதன் மூலம் கணிசமான வருமானம் கிடைக்கும். உயர்ரகப் பழங்கள் விற்பனை விலை குறையச் சாத்தியமில்லை. எந்தக் காலத்திலும் மாம்பழங்களுக்கு நல்ல விலை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மற்ற முதலீடுகளில் உள்ள ஏற்றத் தாழ்வுகள் இழப்புகள் சொந்தமான பண்ணை நிலத்தில் இல்லை.

இப்போது தொடங்கப்பட்டுள்ள இரண்டாவது கட்ட அமைப்பில், முழு அளவில் மாங்கன்றுகள் நடப்படவிருக்கின்றன.

**<u>மிக முக்கியமான செய்தி</u> :** இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பண்ணை நிலத்தை வாங்கச் சிலர் யோசித்தனர், போலியான நிறுவனங்களின் விளம்பரங்களால் முதலீடு செய்து ஏமாந்தவர்கள், நஷ்டமடைந்தவர்கள், உண்மையான பயனுள்ளவற்றைக் கண்டு வாங்கத் தயங்குவது உலக இயற்கைதானே! ஆனால் 1200 சதுர அடி நிலத்தை, உடனே வாங்குபவர்கள் பெயரில், எங்கள் செலவில், பத்திரப் பதிவு செய்து அளிக்கிறோம். மாங்கன்றுகளைக் குழந்தைபோல் வளர்த்து, பூத்து பிஞ்சாகி, காய்த்து, நல்ல மாங்கனிகள் பழுக்கும் வரை காப்பாற்றி நல்ல விலையில் விற்பனை செய்ய திட்டம் வகுத்துள்ளோம்.

*1200 சதுர அடியுள்ள பண்ணை நிலம் ஐந்தாண்டு பராமரிப்புச் செலவுடன் ரூ.20,000/ மட்டுமே.* முழுத் தொகையும் செலுத்த வசதியில்லாதவர்கள் மாதம் ரூ.500/- வீதம் 40 மாதாந்தரத் தவணைகளில் செலுத்தலாம்.

முழுத் தொகையையும் உடனே செலுத்துபவர்களுக்குச் சிறப்புச் சலுகை விலையில் ரூ.18,000/- மட்டும். அவர்களுக்குப் பத்திரப்பதிவு எங்கள் செலவிலேயே செய்து தருகிறோம்.


மாதத் தவணை முறையில் செலுத்துபவர்களுக்குத் தவணை முறை முடிந்தபிறகு அவர்கள் செலவில் பத்திரம் பதிவு செய்து தரப்படும். ஆனால் முதல் தவணை பெற்றவுடனேயே அவர்களுக்கும் பண்ணை நிலம் ஒதுக்கப்பட்டு, மாங்கன்றுகள் நடப்படும். பராமரிப்பு வேலைகள் தொடங்கப்பட்டுவிடும்.

**<u>புதிய சலுகைகள் :</u>** இந்த இரண்டாவது கட்ட அமைப்பில் அன்னை ஆர்ச்சர்ட்ஸ் (பி) லிட்., பராமரிக்கும் பண்ணை நிலங்கள் வாங்கும் அனைவருக்கும் ஐந்து ஆண்டுகளுக்கு வைர விழா காணும் **"கல்கி"** வார இதழ்கள் அன்பளிப்பாக அனுப்பப்படும்.

மேலும் **கலைமாமணி விக்கிரமன்** ஆசிரியராகத் திகழும் **"இலக்கியப் பீடம்"** எனும் உயர்தர காலாண்டிதழ் ஐந்து ஆண்டுகளுக்குத் தொடர்ந்து அன்பளிப்பாகக் கிடைக்கும்.

தொடர்பு கொள்க : அன்னை ஆர்ச்சர்ட்ஸ் (பி) லிட்.,
3 ஜெயசங்கர் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை–600 033.
தொலைபேசி : 371 2485 E-mail : manivikraman@yahoo.com
இப்படிக்கு வி.வி.எஸ். மணியன்,
இயக்குநர், அன்னை ஆர்ச்சர்ட்ஸ் (பி) லிட்.,

# அதிகம் மேலே!



**கை**யில் இனிப்புப் பெட்டியுடன் வீட்டை நெருங்கியபோது தாமுவுக்கு மனசு முழுக்க சந்தோஷம் நிரம்பித் தளும்பியது. அவன் வேலைக்காக நேர்முக பேட்டிக்குச் செல்வது இது எத்தனாவது முறை?

ஒவ்வொரு முறையும் அப்பா அம்மா காலில் விழுந்து வணங்கிவிட்டு அவன் கிளம்பும்போதும் ''இந்த முறையாவது கிடைக்கணும்'' என்று அப்பா ஆதங்கத்தோடு ஆசீர்வதிப்பார்.

அம்மா விபூதியை நெற்றியில் இட வருவாள்.

"இருக்கட்டும் அம்மா. நம்ம பக்தியைப் போகிற இடத்தில் இப்படி வெளிப் படையாகக் காண்பிக்க முடியாது. கிளம்பறேன்."

"இது ரட்சைடா! இன்டர்வ்யூ ரூமுக்குள்ளே போகும்போது வேணும்னா அழிச்சிடு."

அவனுக்கு வேலை கிடைக்க வேண்டுமே என்கிற கவலை அவள் முகத்திலும் பிரதிபலிக்கும்.

அக்கா நர்மதா கைக்காரியத்தை விட்டுவிட்டு வந்து அவனுக்கு 'பெஸ்ட் ஆஃப் லக்' சொல்வாள்.

இன்று அவனுக்கு வேலை கிடைத்துவிட்டது. அதுவும் பெரிய கம்பெனி. நல்ல வேலை.

**எ**த்தனை பெரிய சந்தோஷம்.

வீடு நெருங்க நெருங்க, தாமுவுக்குப் பதற்றம் அதிகரித்தது. எல்லோரும் அவனைச் சூழ்ந்து நின்று கொண்டு 'என்ன கேள்வி கேட்டாங்க?' என்று குடைவார்கள். அதற்கு அவன் எப்படி பதில் சொன்னான் என்றும் தெரிந்து கொள்ள ஆசைப்படுவார்கள்.

எத்தனை பெரிய சந்தோஷம். வீடு நெருங்க நெருங்க, தாமுவுக்குப் பதற்றம் அதிகரித்தது.

அவனுடைய நியமன உத்தரவைக் காட்டச் சொல்லி அதைப் பார்த்து மகிழ்ந்து போவார்

கள். அம்மா, பூஜையறைக்குள் ஓடிப் போய் நமஸ்கரிப்பாள். அக்காவின் முகம் சந்தோஷத்தில் பூரிக்கும். அப்பா பெருமையோடு, முதுகில் தட்டிக் கொடுப்பார்.

வீட்டுக்குள் நுழைந்ததுமே தாமுவைப் பார்த்த அப்பா "காமாட்சி! ஸ்வீட் கொண்டு வா" என்று உற்சாகமானக் குரலில் வரவேற்றார்.

"இதோ வந்துட்டேங்க."

அம்மா சின்னக் கிண்ணத்தில் நெய் மணக்கும் ரவா கேசரியை ஸ்பூன் போட்டுக் கொண்டு வந்தாள்.

இதென்ன அதிசயம்? எனக்கு வேலை கிடைத்த விஷயம் இவர்களுக்கு எப்படித் தெரிந்தது?

தாமு ஆச்சரியப்பட்டான்.

"என்னம்மா ஸ்வீட்டெல்லாம்?"

அம்மா முகமெல்லாம் சிரிப்பாக அப்பாவைப் பார்த்தாள்.

"என்ன அப்படிக் கேட்டுட்டே. செய்தி அப்படிப்பட்டது."

"என்ன சொல்றீங்க?"



லக்ஷ்மி ரமணன்

"உங்கக்காவை திடீர்னு மதுரையிலேருந்து பொண்ணு பார்க்க பிள்ளை வீட்டுக்காரங்க வந்துட்டாங்க. நர்மதா ஜாதகம் தெரிஞ்சவாதான். நல்லபடியா சேர்ந்திருக்காம். பெண் பிடிச்சு வர்ற வெள்ளிக்கிழமை நிச்சயதார்த்தம். அம்மாதான் கேசரி எக்ஸ்பர்ட்டாச்சே. சட்டுனு வந்தவங்களுக்கு பஜ்ஜி, சொஜ்ஜி, காபி எல்லாம் கொடுத்து ஜமாய்ச்சுட்டா. ரொம்ப நல்ல வரன் தாமு. நர்மதா அதிர்ஷ்டக்காரி. அதுசரி, உன் கையிலே என்ன பாக்கெட்?"

"எனக்கு வேலை கிடைச்சுடுச்சுப்பா. ஸ்வீட் வாங்கிட்டு வந்தேன்."


"அப்படியா? குட்!" அப்பா பாக்கெட்டைத் திறந்து மைசூர் பாவை விண்டு வாயில் போட்டுக் கொண்டார்.

தாமுவுக்குச் சின்ன ஏமாற்றமாக இருந்தாலும் சட்டென்று தன்னை மீட்டுக் கொண்டான்.

செவ்வாய் தோஷ ஜாதகம் என்பதால் கடந்த பத்து வருஷங்களாக அலையாய் அலைந்து வரன் தேடி, அக்கா நர்மதாவுக்கு முப்பதாவது வயதில் கல்யாணம் நிச்சயமாகியிருக்கிறது. தனக்கு வேலை கிடைத்ததைவிட அதிக சந்தோஷமான செய்திதான் என்று தோன்றியது.

அக்காவின் சந்தோஷத்தைக் காண உள்ளே போனான், ரவாகேசரியை ருசித்தபடி!

# வெற்றி தந்த வெற்றிலை!



• சக்கரவர்த்தி, ரனில் விக்கிரமசிங்கே, மைத்ரீ, ஜானகி சக்கரவர்த்தி

இலங்கையில், எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரனில் விக்ரமசிங்கே, தேர்தலில் வெற்றி பெற்று, ஸ்ரீலங்கா பிரதமரானதும், உடனே ஒரு வி.ஐ.பியை எண்ணி "கோடி நமஸ்காரம் சுவாமி" என்று மனமுருகினார்.

நன்றியை மனசுக்குள்ளேயே வைத்துக் கொள்ள முடியுமா? சில நாட்களில் மனைவி மைத்ரீயுடன், தமிழ்நாட்டுக்குப் பறந்து வந்து, அந்த வி.ஐ.பிக்கு நேர்த்திக் கடன் செலுத்தினார்.

அந்த வி.ஐ.பி? நல்லாட்டூர் வீரமங்கள ஆஞ்சநேயஸ்வாமிதான்!

ம்ருத்யுஞ்சய ஹோமம் செய்து, பத்துகிலோ வெண்ணெய் சார்த்தி, பன்னிரண்டு கிலோ வெற்றிலைமாலை அணிவித்து, செக்யூரிட்டி தடபுடலோடு நல்லாட்டூர் ஆஞ்சநேயரைத் தரிசனம் செய்து விட்டுப் போனார்.

திருத்தணி அருகில், குசஸ்தலை ஆற்றங்கரையில் சின்னஞ்சிறு கோயில். ஸ்ரீ கிருஷ்ண தேவராயர் காலத்தில், ஸ்ரீவியாசராஜரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட இந்தக் கோயில் ஐந்நூறு ஆண்டுகள் பழைமை வாய்ந்தது. பராமரிப்பு இன்றி இருண்டு கிடந்த இக்கோயிலின் மகிமை உணர்ந்து, பிரபல தொழிலதிபரும் சவேரா, அமராவதி ஓட்டல் நிர்வாக அதிகாரியுமான சக்கரவர்த்தி, பல லட்ச செலவில் மிக அழகாக புதுப்பித்து, கும்பாபிஷேகம் நடத்தினார். கோயில் வெகு பிரபலமாகி நித்ய பூஜைகளும், விழாக்களும் விமரிசையாக நடக்க, கூட்டம் திரள்கிறது

**"யார் யாருக்கோ முறைவாசல் செஞ்சேன். அதனால் கண்ட பலன் ஒண்ணுமில்லை."**

ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் செலவில் வாடிப்பட்டி வெள்ளை வெற்றிலை மாலையை, மதுரையிலிருந்து ஸ்பெஷலாகக் கொண்டு வந்தவர் முன்னாள் எம்.எல்.ஏ. தேனி பன்னீர்செல்வம்.

"அரசியலில் யார் யாருக்கோ முறைவாசல் செஞ்சேன். அதனால் கண்ட பலன் ஒண்ணுமில்லை. ஆஞ்சநேயருக்குக் காணிக்கை செலுத்தறது புண்ணியம்க" என்றார் பன்னீர்செல்வம், தங்க ஃப்ரேம் மின்ன...



அன்னமே பிரம்மா!   அன்னமே விஷ்ணு!   அன்னமே சிவன்!

# புண்ணியக்ஷேத்ரம் இராமேஸ்வரத்தில் மாதந்தோறும் அமாவாஸை திதியில் அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

அன்புடையீர், அனேக நமஸ்காரம். தலம், தீர்த்தம், மூர்த்தி இவற்றால் சிறப்புக்குரிய பல க்ஷேத்ரங்களில் இராமேஸ்வரம் பெருமைமிக்க புண்ணிய ஸ்தலமாகும். ராமஸேது என்றும், ஸேது ஸ்தலம் என்றும் போற்றப்படும் இராமேஸ்வரம் புகழ்மிக்க புண்ணிய க்ஷேத்ரமாகும். இராமேஸ்வரத்தில் அன்னதானம் செய்வதும் ஜபம், ஹோமம், தானம் செய்வதும் அழியாத புண்ணியப் பலன் கிடைக்கும்.

இராமேஸ்வரத்தில் அமாவாஸை தினத்தில் அன்னதானம் செய்தால் மனித குலம் மாபெரும் புண்ணியத்தை பெறும். புத்திரப்பேறு உண்டாகும். நாகதோஷம் முதலியன நீங்கும். அனைவரும் நலம் பெறுவர். இராமேஸ்வரத்தில் அமாவாஸை அன்று அன்னமளிப்பவன் ப்ராணனளிப்பவன் ஆகிறான். அன்னமளிப்பது அமிர்தமளிப்பதற்கு சமம். இந்த புண்ணிய பூமியில் அன்னமளிப்பவன் மிக்க செல்வந்தராய் பிறப்பான். வறுமை நீங்கி, பெரும் பணக்காரனாவான். அன்னதானம் செய்பவனுக்கு போகமும், ஆயுளும், அழகும் பெருகும். பலம், புகழ், கீர்த்தி இவை உண்டாகும்.

★ தடைபட்ட திருமணம், புத்திர பாக்யம் இவை உண்டாகும் ★ வறுமை அகல ★ கொடிய நோய்கள் நீங்க ★ தொழில் மந்தம் நீங்கி முன்னேற்றம் காண ★ பிரிந்தவர்கள் ஒன்றுசேர ★ நீண்ட ஆயுள், கடன் தொல்லையிலிருந்து விடுதலை ★ மனநிம்மதி பெற ★ பெற்றோர், மூதாதையர் நினைவு நாளில் ★ ஆக நீங்கள் நினைத்த காரியம் நிறைவேற நாங்கள் உங்கள் சார்பாக அன்னதானமளித்து, பிரஸாதம் அனுப்பி வைக்கிறோம்.

★ சிறியதொகை மற்றும் அரிசி போன்ற உணவு பொருட்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.
★ ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.10,000 அனுப்பும் அன்பர்களுக்கு ஆயுள்காலம் முழுவதும் கோபுர தரிசனம் மாத இதழ் அனுப்பி வைக்கப்படும்.

ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு கந்தபுராணம் அல்லது பகவத்கீதை புத்தகம் அனுப்பி வைக்கப்படும். ரூ. 5,000 மற்றும் ரூ. 10,000 அளிக்கும் அன்பர்களுக்கு கவி-ந்யாய-மீமாம்ஸ சிரோமணி ஸ்ரீமான் திருவெண்காடு டி.கே. முத்துஸ்வாமி சாஸ்திரிகளால் தயாரிக்கப்பட்டு பூஜையில் வைத்த யந்திரம் அன்பர்களின் விருப்பத்திற்கேற்ப எந்த யந்திரம் தேவையோ அந்த யந்திரம் இலவசமாக வழங்கப்படும். மேலும் பகவத்கீதை புத்தகம் அல்லது கந்தபுராணம் புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். ரூ. 10,000 அனுப்பும் அன்பர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு மாதந்தோறும் பிரசாதம் அனுப்பிவைக்கப்படும். ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்திக்கு அணில் செய்த ஸேவை போல் இந்த லோகக்ஷேமத்திற்கு நம்மால் இயன்றளவில் உபகாரம் செய்திடுவோம். நேரில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

நன்கொடை அனுப்பும் அன்பர்கள் **GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST, CHENNAI-41** என்ற பெயரில் **CHEQUE/D.D./M.O.** மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். என்றென்றும் புனித ஸேவையில் மனப்பூர்வமாக செயலாற்றும் எமது பணிக்கு உங்களது மேலான ஒத்துழைப்பை என்றென்றும் நாடுகிறோம்.

*CHEQUE/D.D./M.O. அனுப்ப வேண்டிய முகவரி :*

## கோபுர தரிசனம் அன்னதான அறக்கட்டளை

## GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST

**M-11/F-4, TNHB FLATS, I MAIN ROAD, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041. SOUTH INDIA**

☎: 4900303, 4900603 Fax: (044) 4916316 E-mail: gopuradarisanam@yahoo.com

★ நீங்கள் தேடும் மனநிம்மதி அன்னதானத்தில் கிடைக்கிறது ★ ஸர்வேஜனா: - ஸுகினோபவந்து

# வாதம் கதம்... கதம்!

## தேவமருந்து – 6



**‘மை**ண்ட் பாடி டைப்’ என்பதை ஆயுர்வேத சாஸ்திரம் என்னவென்று குறிக்கிறது என்று கேட்டிருந்தோம். ‘பிரக்ருதி’ என்பதே சரியான விடை.

சென்ற இதழிலே தரப்பட்ட வாக்குப்படி, வாத ப்ரக்ருதி பற்றி விரிவாகச் சொல்கிறேன்.

(வாதம், வாயு இரண்டும் ஆயுர்வேதத்தில் ஒரே பொருள் உள்ள சொற்களே)

வாயு என்பது எப்படியிருக்கும்? லகு (லைட்)வாக இருக்குமில்லையா? அது போலவே, வாத பிரக்ருதி உடையவர்கள் மெலிந்த உருவம் கொண்டவராயிருப்பர் இவர்கள் பேச்சில் வறட்சியும், தளர்ச்சியும் காணப்படும். கண்கள் சிறியனவாக இருக்கும். ஆழ்ந்த உறக்கம் இவர்களுக்குக் கிடைக்காது. எப்போதுமே டிஸ்டர்ப்ட் ஸ்லீப்தான். உறங்கும் போது வாய் மற்றும் கண் சற்றே திறந்திருக்கும். உறக்கத்தில் பற்களைக் கடிப்பார்கள். சருமம் வறண்டிருக்கும். கால் வெடிப்பு அதிகமாக இருக்கும். அதிகம் வியர்க்காது. தலைமுடி சுருண்டு, சொரசொரப்பாக இருக்கும்.

வாதபிரக்ருதிகளின் உணவும், ஆசையும் ஒவ்வொரு நாளும் வேறுபடும். நண்பர்கள் குறைவாகவே இருப்பர். நண்பர்களை அடிக்கடி மாற்றிக் கொள்ளும் தன்மை கொண்டவர்கள். இவர்களின் பேச்சும், தடுமாற்றத்துடன் கடுமையாக இருக்கும். நடக்கும் போது சப்தம் கேட்கும். காப்பி, சாக்லேட், இனிப்பு பிரியர்களாக இருப்பார்கள்.

நாய், ஒட்டகம், கழுகு. எலி, காகம், நரி போன்றவை வாதத் தன்மை உள்ளவையே!

**வா**தபிரக்ருதி பெண்களுக்கு மாதவிடாய் ஒழுங்காக இருக்காது. வலி அதிகமாகக் காணப்படும்.

வாதபிரக்ருதிகள் செயல்களில் திறமில்லாமல் இருப்பார்கள். வாயுவின் வேகத் தன்மையால், எந்த

ஒரு காரியத்தையும் சீக்கிரமாகவே தொடங்கி விடுவார்கள். ஐம்புலன்களைக் கட்டுப்படுத்தும் திறம் அற்றவர். மனத்தில் விருப்பும் வெறுப்புமாக, உணர்ச்சிகள் மாறி மாறித் தோன்றி தளர்ச்சியை உருவாக்கிக் கொண்டிருக்கும்.

இவர்கள் வெப்பமான காலநிலையை விரும்புபவர். உடல் உறவைப் பற்றி விதவிதமான எண்ணங்கள் கொண்டிருப்பர். ஆனால் விரைவில் தளர்ந்து விடுவர். அதனால் இவர்களுடைய நாடித் துடிப்பும் வேகமாக இருக்கும்.

சீரான வாழ்க்கையை மேற்கொள்ள முடியாததால், வாத பிரக்ருதி உடையவர்களின் நடைமுறை வாழ்க்கை ஒழுங்காக அமையாது. தங்களையும், தங்களைச் சுற்றியுள்ளவர்களையும் அலைகழித்து விடுவார்கள்.

சத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களில் இவர்களது நிலையற்ற தன்மையினால், ரஜோ குணத்தைப் பிரதானமாகக் கொண்டவர்கள். நாய், ஒட்டகம், கழுகு, எலி, காகம், நரி போன்றவை வாதத் தன்மை உள்ளவைகளே!

வாத தேகிகளுக்கு, குளிர்ச்சியான காற்று, குளிர்ப்பிரதேசம் எதுவும் ஒத்துக் கொள்ளாது. அதிகமான குளிர்ச்சி சேர்ந்து விட்டால், உடலில் வலியும், விறைப்பும் ஏற்பட்டு அவதிப்படுவார்கள். பொதுவாக மலச்சிக்கல் பிரச்னை உள்ளவர்கள். மற்றவர்களைப் போல வலியைத் தாங்கும் சக்தி இவர்களிடம் இருக்காது. உரத்த சப்தத்தைக் கூட பொறுத்துக் கொள்ள மாட்டார்கள்.

**வாத பிரக்ருதி என்னென்ன சாப்பிடலாம்?**

* இனிப்பு, புளிப்பு, உப்பு சுவையுள்ள ஆகாரம்.
* அரிசி, கோதுமை, பாசிப் பயறு
* காரட், பீன்ஸ், தக்காளி, வெண்டை, வெள்ளரி, பூண்டு, கத்தரி, முள்ளங்கி, முட்டைக்கோஸ், காலிஃப்ளவர், பூசணி, வாழைப் பழம், தேங்காய், பேரிச்சை, திராட்சை, எலுமிச்சை, மாம்பழம், ஆரஞ்சு, பலா, மாதுளை, பப்பாளி, அத்தி, வேகவைத்த ஆப்பிள், ஊறவைத்த பாதாம்.
* மஞ்சள், கொத்துமல்லி, சீரகம், இஞ்சி, காயம், சோம்பு, மிளகு போன்றவற்றைத் தாராளமாகச் சேர்க்கவும்.
* நல்லெண்ணெய், நெய், பால், வெண்ணெய் அளவோடு பயன்படுத்தலாம்.




டாக்டர் எல். மகாதேவன்

**தவிர்க்க வேண்டியவை :**

* துவர்ப்பு, கசப்பு, கார உணவு.
* அதிக உடற்பயிற்சி, அதிகமான பேச்சு, அதிக சிற்றின்பம், குளிர்பானம், மது அருந்துதல், இரவு நெடுநேரம் விழித்திருத்தல்.

**வா**த பிரக்ருதிக்காரர்களுக்கு, நரம்புத் தளர்ச்சி, மூட்டுவாதம், இருதயக்

## பெறுபவர்கள்:

## இந்த வாரம் பரிசு

### தேவமருந்து – 4

**வி**னா : எந்தக் காலத்திலே, எந்தத் தோஷத்தினால் எலும்பு சம்பந்தப்பட்ட வியாதிகள் அதிகமாக வருகின்றன?

விடை: வாத காலத்திலே, வாயு தோஷத்தினால்...

சரியான விடையை விரைவாக எழுதி, அமரர் கல்கி புத்தகங்களைப் பரிசாகப் பெறுகிறவர்கள்:

கோட்டை உமேஷ்,
6-7CI, குறிஞ்சித் தெரு, கமல்நகர், தோவாளை அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம் - 629 302

ப. சிவராமகிருஷ்ணன்,
சுசி இல்லம் 821, பி.ஏ. பிள்ளைநகர், திருநெல்வேலி - 11

ஆர். லக்ஷ்மி,
எண் 9, சேது தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093

மு. லோகநாதன்,
T.B. 10. புதிய வீட்டு வசதி வாரியம், இராயக்கோட்டை ரோடு,
கிருஷ்ணகிரி - 635 001

பானு ரங்கநாதன்,
15, 7வது தெரு, ராம் நகர், நங்கநல்லூர், சென்னை - 600 061

கோனாறு, மூச்சு முட்டு, மலச்சிக்கல், மனத்தளர்ச்சி, உடல் நடுக்கம், சரும உலர்வு போன்றவை வர வாய்ப்புண்டு.

### என்ன செய்தால் நோய்களைத் தவிர்க்கலாம்?

வாயுவைக் கண்டிக்கும் பொருட்களில் எண்ணெய் சிறந்தது. இவர்களால் அதிக வீரியமுள்ள மருந்துகளை உட்கொள்ள முடியாது. எண்ணெய் மசாஜ் இவர்களுக்குப் பிடித்தமானது. இதைப் பற்றி பின்னால் விரிவாக எழுதுகிறேன். முறுக்கேறிய நரம்புகளைச் சமனப்படுத்தும் என்பதும் ஒரு காரணம். அது நரம்புகளின் உணர்வாற்றலைக் குறைப்பதால், உடல், மனவலிகளை ஓரளவு மட்டுப்படுத்தவும் செய்கிறது. மன அமைதியும், நற்சிந்தனையும் கொண்டிருப்பது நன்மை பயக்கும். ஆசனமும், தியானமும் செய்வது சிறப்பு தரும்.

**வா**த பிரக்ருதி உடையவர்களுக்குச் சொல்லப்படும் குணங்கள் அனைத்தும் ஒருவரிடம் அப்படியே இருக்கும் என்று சொல்ல முடியாது. எல்லோரிடமும் மற்ற இரு தோஷங்களான பித்த, கப தோஷங்களும் கலந்தே இருக்கும் என்பதால், உடல் கூறு, மன இயல்பு, செய்திறன் அந்த காம்பினேஷனில் அமைந்திருக்கும்.

Type A personality என்று நவீன மருத்துவத்தில் கூறுகிறார்கள். இவர்களுக்குச் சலனத் தன்மை (restlessness) அதிகம் உண்டு. இருதய நோய் வர வாய்ப்புண்டு. இது வாதப் பிரக்ருதியே.

அடுத்த வாரம் பித்தப் பிரக்ருதி பற்றிப் பார்ப்போம்.

இனி வரும் வாரங்களில் மருத்துவக் கேள்விகளை நீங்கள் கேட்க வேண்டும். தேர்ந்தெடுத்த கேள்விகளுக்கு நான் பதில் சொல்வேன். மிகச் சிறந்த ஒரு கேள்விக்குப் பரிசு உண்டு.

# இதுவும் உதவிதான்!



ஒவ்வொரு நாளும் பல மனிதர்கள் நம் கண்ணில் பட்டு, கடந்து செல்கின்றனர். சில முகங்கள், உருவங்கள், நம்மை ஒருமுறைக்கு, இருமுறையாகப் பார்க்கச் சொல்லும்படி இருக்கின்றன. அழகான முகமாக, தோற்றமாக இருந்தால் பரவாயில்லை. ஆனால் அழகில் குறைந்தவர்களாகவோ, வித்தியாசமான தோற்றம் உடையவர்களாகவோ அல்லது ஊனமுற்றவர்களாகவோ இருக்கும் பட்சத்தில், திரும்பிப் பார்க்காதீர்கள். உற்றுப் பார்க்காதீர்கள். அவர்களுடைய குறைகளை அறிந்து விட்டீர்கள் என்பதை, உங்களுடைய முகபாவனைகளாலோ அல்லது சொற்கள் மூலமாகவோ வெளிப்படுத்தாதீர்கள்.

மிகவும் தெரிந்தவர்களின் வீடாக இருந்தாலும்கூட, அவர்கள் அழைக்காமலேயே, நாமாக அடுக்களை வரையிலோ, தனியறைக்குள்ளேயோச் செல்ல வேண்டாம். சில சமயம், அவ்வறைகள் சுத்தப் படுத்தப்படாமல் அலங்கோலமாக இருக்கக்கூடும். அவர்களுக்கு என்ன கஷ்டமோ, என்ன வேலைப் பளுவோ; யார் கண்டது? திடுதிப் பென்று போய் நின்று அவர்களை தர்ம சங்கடத்தில் ஆழ்த்த வேண்டாம்.

முன்பின் அறியாதவர்களிடம் பேசக் கூடிய சந்தர்ப்பங்களில், "கல்யாணம் ஆயிடுச்சா? ஏன் முடியலை? குழந்தை இருக்கா? ஏன் இல்லை?" என்பது போன்ற கேள்விகள் அனாவசியமானவை. 'நீ நன்றாக இருக்கிறாயா? நான் நன்றாக இருக்கிறேன்." இது போதும்.

முதுமைப் பிராயத்திலகூட எவ்வளவோ பேர் 'டை' அடித்துக்கொண்டு கருவண்ணத் தலையர்களாக நடமாடுவதைக் கண்டு கொள்ளாமல் விடுகிறோமே. அது போலவேயே, 'டை' அடிக்காத, அடிக்க விரும்பாத முழு தலையுமே நரையாகிப் போன இள வயதுக்காரர்களையும் கண்டு கொள்ளாமல் விட வேண்டும். அனைவருக்கும் மத்தியில் நரையைப் பற்றிக் காரணம் கேட்பதையோ, விமர்சனம் செய்வதையோ, ஆலோசனை பேறுவதை தவிர்த்து விடுங்கள்.

இயல்பாக வாழ்வதுதான் சிறந்த வாழ்க்கை முறை. பிறருக்கு அள்ளி அள்ளிக் கொடுப்பது மட்டுமல்ல, மற்ற வரை மனம் நோகாமல் வாழச் செய்வதும் ஓர் உதவிதான்.

— ஆமினா

**அவர்களுக்கு என்ன கஷ்டமோ, என்ன வேலைப் பளுவோ; யார் கண்டது? திடுதிப்பென்று போய் நின்று அவர்களை தர்ம சங்கடத்தில் ஆழ்த்த வேண்டாம்.**

# உருகுதே மௌனம் 16



**ச**ங்கரய்யர் தன்னிடம் ஆலோசனைக்கு வந்த பெண்ணிடம் கண்கள் மூடிக் கொண்டு பேசினார்.

"இன்னொரு கேள்வியும் வருதும்மா. அப்படி நீ என்ன பணக்காரி? என்ன ராஜ பரம்பரை? அப்பா பெரிய வைதீகம். அதே சமயம் தகிடுதத்தம். 'உனக்குத் திருஷ்டி இருக்கு; தோஷம் இருக்கு'ன்னு காசு பிடுங்கிண்டு சம்பாதிச்ச ஆம்பளை. அப்போ பலன் இருந்தது. அந்தப் பலனை அனுப விச்சுட்டு செத்துப் போனார். உங்கப்பா எப்படி செத்துப் போனார்னு ஞாபகம் இருக்கோன்னோ. அதனாலே மறுபடியும் சொல்றேன். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். மாமியாரைக் கண்ணுக்குள்ள வைச்சுக் காப்பாத்து. நான் என்ன பண்ணட்டும்னு கேளு. உங்களுக்குப் பிடிச்சது ஏதாவது பண்ணட்டுமா அப்படின்னு பேசு. உங்கம்மாவோட எப்படிப் பேசறியோ, அப்படிப் பேசு."

"நான் பேசினேன் மாமா. அவங்க ஏத்துக்கலை." அந்தப் பெண்மணி வேகமாய் மறுத்தாள்.

"பேச்சிலே குழைவா இருக்கறதுங்கறது ஒரு கெட்டிக்காரத்தனம். நான் குழைவா பேச மாட்டேன். கேள்வியா கேட்பேன். நீ பதில் சொல்லுன்னா அந்த மாதிரி பொம்மனாட்டிகளுக்குச் சரியா பதில் சொல்ல முடியாது. நாக்கு ஒட்டிண்டுடும். பதில் சொல்லலைலேன்னா கோவம்னு நினைச்சுப்ப. அவளுக்குக் குழப்பம் இருக்குங்கறதைப் புரிஞ்சுக்கலை. என்னடா மருமகள் கன்னுனு கேட்கறாளேன்னு அவ பயந்து போய் நாக்கு ஒட்டிண்டு உட்கார்ந்திருக்கான்னு உனக்குப் புரியலை. 'உன் பொண்டாட்டி விரட்டிப் பேசறாடா. எனக்கு முடிய லைடா' அப்படின்னு அம்மா சுருண்டு படுத்துக்கும் போது ஆம்படையானுக்குக் கோபம்


**அவர் பேச்சில் கண்டிப்பு இருந்தது. மெல்லிய காரம் இருந்தது. அதே சமயம்...**

வருது. ஏன் இப்படிப் பேசறன்னு உள்ளே நுழைஞ்சவுடனேயே கேட்கிறான். உனக்கு அதுக்குமேல கோவம் வருது. எப்படி இருக்கும் குடித்தனம்? சின்ன விஷயம். ஒருத்தர் அனுசரிச்சா சகலமும் சரியாப் போயிடும். ஏன் அனுசரிக்க மாட்டேங்கறே?

"உன் மாமியார்க்கிட்டே சொல்லியிருக்கேன். உங்க மருமகள் இரண்டுங் கெட்டான். பெரிசு படுத்தாதிங்கோன்னு சொன்னேன். உனக்கு இரண்டு முகம். இங்கே வந்து விசும்பி விசும்பி அழறே. வெளியே போனா உனக்கு வேறே முகம். சிடு சிடு முகம். இது எனக்குத் தெரியும். என்னை ஏமாத்த முடியாது. நான் சொல்றதை அப்படியே கேட்க வேண்டாம். யோசனை பண்ணு. உங்கிட்ட என்ன தப்புன்னு யோசனை பண்ணு. நீயா, சரியான வழியைத் தேர்ந்தெடு. இவ்வளவுதான், நான் சொல்ல முடியும். இதுக்கு மேலே உனக்குப் புரியலைன்னா நீ இங்கே வர வேண்டாம். உன்னுடைய வார்த்தை குளிப்பாட்டலுக்கு, கொண்டு வர்ற சீடை, கை முறுக்குக்கு நான் மயங்கிட மாட்டேன்; இங்க நீ கொண்டு வந்த ஆயிரத்தொரு ரூபாய் தட்சணையை, நீ திருப்பி எடுத்துண்டு போலாம். நீ நல்லவளா மாறுகிறபோது அந்தக் காசு எங்கிட்ட வந்து சேரும். போயிட்டு வா. சௌக்கியமா போயிட்டு வா."

அவர் பிரியமாக விடை கொடுத்தனுப்பினார். அவர் பேச்சில் கண்டிப்பு இருந்தது. மெல்லிய காரம் இருந்தது. அதே சமயம் கருணையும் இருந்தது.

அந்தப் பேச்சினால் அங்குள்ள எல்லோருக்கும் கணமாய் ஓர் அச்சம்



பாலகுமாரன்

பரவியது.

ரா தாகிருஷ்ணனும், பூரணியும் நாக்கு ஒட்டிக் கொள்ள அவரையே வியந்து பார்த்து நின்றார்கள்.

"உள்ளே வரலாமே" அந்தப் பெண்மணி வெளியேறியதும் அவர் அவர்களை

அழைத்தார். கால்கள் பின்ன இரண்டு பேரும் அவருக்கு முன்னால் போனார்கள். இரண்டு பேரும் விழுந்து வணங்கினார்கள். வணங்கிய பின்னர் காதில் கை வைத்து 'அபி வாதயே..' என்று அவர் தன்னுடைய குலம், கோத்திரம் பற்றிச் சொல்ல ஆரம்பித்தார். மறுபடியும் விழுந்து வணங்கினார்.

"தீர்காயுஷ்" மான்பவ, தீர்க சுமங்கலி பவ..." வாய் நிறைய உரத்த குரலில் ஆசிர் வாதம் காதில் கேட்டது.

"நேத்திக்கு அடிதடி ரகளையாக்கும்."

எடுத்தவுடன் சட்டென்று சங்கரர் பேச ஆரம்பித்தார்.

ரேவதிக்கும், ராதாகிருஷ்ணனுக்கும் தூக்கி வாரிப் போட்டது.

"என்னடா... எப்படித் தெரியும் இவ னுக்கு, அப்படின்னு யோசனை பண்றேளா? ஆஹா... மாமாக்கு மந்திரசக்தி ரொம்ப ஜாஸ் தியா இருக்கு. இங்க உட்கார்ந்தபடி உல கத்துல இருக்கற எல்லாத்தையுமே சொல்லி டறாளே அப்படின்னு ரேவதிக்குத் தோன்றது இல்லியா ரேவதி?"

அப்பாவின் குரலிலுள்ள பாசம் போல - ஒரு வாஞ்சையைக் குழைத்து அவர் பேச ரேவதிக்குக் கண்கள் பனித்தன. ஆமென்று தலையாட்டினாள்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. எவனை அடிச்சுத் துரத்தினியோ அவன் இங்க வந்து அழுதான்! 'போடா...போடா வெளிய நாயேன்னு ஒரு ஐயரு துரத்தறாரு. நான் கேட் டுக்கிட்டிருக்கறதா, நான் அடிக்கற ஜாதி. அவர் துரத்தற ஜாதியா என்னங்க இது. அக் கிரமத்துக்கு அளவே இல்லியா. அப்படின்னு அழுதான். எத்தனை மணிக்கு அழுதான் தெரியுமோ. காலையில நாலே கால் மணிக்கு உட்கார்ந்து அழறான். மூணு மணிக்கு முழிஞ்சுண்டுருவேன். அவனுக்குத் தெரியும் நான் எப்போ வெளியே வருவேன்னு. கார்த் தால ஜபத்தை முடிச்சுட்டு ரோட்ல நடக்க லாம்னு கீழே இறங்கறேன். வாசப்படியில உட்கார்ந்துண்டிருக்கான். என்னடா அப் படின்னா ஒரே அழுகை. நம்மால அடி உதையைத் தாங்க முடியுமா. நீர் அடிக்கவும் முடியும். அடியும் தாங்கவும் முடியும். கொஞ் சம் பழக்கமானா, நாம எதுக்குப் பழக்கம் பண்ணிக்க முடியாது தெரியுமா? அவ மானத்துக்கு.

"சின்ன வயசுலேருந்து அவமானம் பட்டு பட்டு தேறினவா இதைப் பத்தி பெருசா கவலைப்பட மாட்டா. சின்ன வயசுலேருந்து 'ஐயோ அவமானப் படறோமே அவமானப் படக் கூடாதே' அப்படின்னு நாமும் நினைச்சு நம்பள சுத்தியுள்ள மனுஷாளும் இருக்க, அடிதடி நமக்கு முடியுமோ?

"அடிதடி ரகளை என்றால் வலி மட்டு மில்லை அவமானமும். நீ சண்டை போட் டேன்னு வச்சுக்கோ மத்தவன் அதை எப்படி வந்து சொல்லுவான் தெரியுமா. அவன் வந்து துட்டு கேட்டான் போல, இவரு மாட்டேன் னார் போல, அவன் சட்டையைப் பிடிச் சான் போல, இவரு கீழே வந்து இறங்கி போடா வெளியன்னு சொன்னாப்போல, அவன் முடியாதுன்னு சொன்னாப்போல, இவரு அறைஞ்சாப் போல, அவன் குத்தினாப் போலன்னு விலா வாரியா நீ அடிபட்டதைக் கூடவே சேர்த்துச் சொல்லுவான். எங்கிட்ட மட்டுமில்லை. இந்தத் தெருவுல ஒரு நூறு பேர் கிட்ட சொல்லுவான். உன்னை யார் பார்த்தாலும் நீ மூஞ்சியில குத்து வாங்கின ஆளாத்தான் தெரியுமே தவிர உன் படிப்பு, உன் அதி காரம், உன்னுடைய மரியாதை, உன் ஆங் கிலப் புலமை, உன் குடும்ப கௌரவம் எது வுமே அவர்களுக்குப் படாமல் போகும். ஒரேயொரு சண்டை உன்னுடைய நல்ல விஷயங்கள் அனைத்தையும் அழித்து விடுமெனில் அந்தச் சண்டையைப் போட வேண்டுமா? அது நல்லதுதானா?

"இதை ஒதுக்கி வைச்சுட்டு வேற விஷ யத்துக்கு வருவோம். அவனுக்கு அதை விக் கணும். மூணாவது தலைமுறையா கிடைக் கறது. அவன்கிட்ட காசு இல்லை. அவன் வாலிபன். இதை வித்தா பெரிய காசு கிடைக்கும். வேற இடத்துல ஒரு ப்ளாட் வாங்குவான். ஏதோ தொழில் பண்ணுவான். அவனை, முன்னுக்கும் போக விடாத, பின்னுக்கும் போக விடாத இந்தச் சொத்து தொந்தரவு பண்றது. இந்த சொத்துலே நீ உட்கார்ந்துண்டு தொந்தரவு பண்றே. அவன் அதை விடுவானா? என்னென்ன தொந்தரவு உண்டோ அத்தனையும் உனக்குப் பண்ணத்தான் பண்ணுவான்.

"உங்களைக் காலி பண்ணவும் சொல்

**"என்ன திமிர் இருந்தா இப்படிக் கேட் பான்?"**

**"என்னாச்சு?"**

**"நீ எந்தக் கட்சின்னு கேக்குறுதுக்குப் பதிலா, கஞ்சியா, முட்டை பிரியாணியா, இல்லை பெட்ரோல்பங்க்காங்குறான்!"**

**- டி. காமாட்சி**

லலை. காலி பண்ண வேண்டாமம்னும் சொல்லலை. என்ன பண்ணப் போறீர் அப்படின்னு கேட்கறேன். அந்தக் காரியத்தை எப்படிப் பண்ணினால் ஜெயிக்கும்னு யோசனை பண்ணனும். காலி பண்ண மாட்டேன்னு சொன்னா அதுக்கு வேற வழி இருக்கு. காலி பண்ணனும்னா அதுக்கு வேற வழி இருக்கு. காலி பண்ணாம இங்கயே உட்கார்ந்துண்டு நீ என்ன பண்ணப் போறே. கம்பெனியில உனக்கு வேலை கிடையாது. கீழே கம்பெனி மாடியில வீடு. அதுக்குக் கீழே இன்னொரு கடை. அந்தக் கடை நடத்தின நாடார் மாட்டேன்னு சொன்னா அதுலே அர்த்தம் இருக்கு. கோர்ட், காது கொடுத்துக் கேட்கும். என்னப்பா அவன் வயித்துலே ஏன் அடிக்கறேன்னு கேட்கும். அவன் வேறே எங்க போவான் அப்படின்னு சொல்லும். அப்படியொரு விஷயம் உன்னுதுலே இல்லை. நாடாரே காசு வாங்கிண்டு கடையைக் காலி பண்றபோது நீ என்ன பண்ணப் போறே?"



"நீங்க என்ன பண்ணச் சொல்றேளோ அதைப் பண்றேன்."

"அப்படியா. நான் என்ன சொன்னாலும் செய்வியா?"

"எனக்கு வேற வழி தெரியலை. என்ன பண்றதுன்னு புரியலை. அதனால நான் முடிவு பண்றதைவிட எனக்காக நீங்க அந்த முடிவு பண்ணுங்கோ."

ராதாகிருஷ்ணன் மிருதுவாகப் பேசினார். சங்கரன் கண்கள் மூடிக்கொண்டார்.

"ராதாகிருஷ்ணன்..."

"சுவாமி" அவர்குனிந்து வாய் பொத்திக் கொண்டார்.

"நீங்க யாருன்னு உங்களுக்குத் தெரியுமோ?"

ராதாகிருஷ்ணனுக்குப் பதில் சொல்ல முடியவில்லை.

"தெரியலை ஸ்வாமி" என்று ஈனஸ்வரத்தில் சொன்னார்.

"ரேவதி."

"மாமா."

அவள் குனிந்து அவரைப் பார்த்தாள்.

"உன் புருஷன் யாருன்னு தெரியுமோ?"

"தெரியும் மாமா."

ராதாகிருஷ்ணனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

தனக்கே தான் யார் என்று தெரியவில்லை. ரேவதிக்கு தான் யார் என்று தெரியுமா? இது அதிகப் பிரசங்கித்தனமில்லையா.

"சொல்லு. உன் புருஷன் யாருன்னு சொல்லு."

"அது குழந்தை மாமா. இரண்டுங் கெட்டான். என்னுடைய அபிப்ராயத்துல அவருக்கும் பன்னிரண்டு வயசு. பன்னிரண்டு வயசு பிடிவாதம். பன்னிரண்டு வயசு கோபம். அந்த ஆங்காரம், அதே மாதிரியான அன்பு, ஈடுபாடு, இழையல், நம்பிக்கை எல்லோரோடயும் குதூகலமா இருக்கணும்கற ஆசை எல்லாம் இருக்கு. அவர் சில இடங்கள்ல வளரவே இல்லை. ஆனா, ரொம்ப நல்லவர். இப்படிப் பண்ணக்கூடாது. இது தப்பு. இது உங்களுக்குக் கெடுதல் தரும். நம்ம குடும்பத்துக்கு வேதனை தரும் அப்படின்னா டக்குனு என்னவா இருந்தாலும் விட்டுருவார். யாருக்கும் போய் கெடுதலை பண்ணனும்னு அவருக்குத் தெரியாது. ஒரு வேகத்துல மிதிச்சுடுவாரே தவிர என்ன இப்படி மிதிச்சிட்டேளே நியாமான்னு கேட்டா, ஆமாம். தப்பு பண்ணிட்டேன்னு கொஞ்சம் கூட வெட்கப்படாமல் தப்பை ஏத்துக்கற பெரிய மனுஷர். யாராவது தூண்டி விட்டாதான் கோபம் வருமே தவிர, யாராவது தூண்டிவிட்டா தான் சண்டைக்குப் போவாரே தவிர அவருக்கா என்ன பண்ணனும்னு தெரியாது."

"அடாடா... ரேவதி என்ன அழகாச் சொல்ற. எவ்வளவு தெளிவா புரிஞ்சு வச்சுண்டிருக்கே. ராதாகிருஷ்ணன், ரேவதி சொல்றதுல ஒப்புதல் உண்டோ?"

"தெரியலை ஸார்."

"ஒரு தடவை ஸ்வாமி. ஒரு தடவை ஸார். ஏதாவது ஒருவிதமா கூப்பிடேன். மாத்தி மாத்திப் பேசிண்டிருக்கியே."

"எப்படிக் கூப்பிடறதுன்னு தெரியலை,

"நாங்களெல்லாரும் அவரை ஐயன்னு கூப்பிடுவோம்" ருக்மணி என்ற பெண் உரக்கச் சொன்னாள்.

அவர் திரும்பிப் பார்த்தார்.

(தொடரும்)

# பாதிக்கப் பட்டவர்கள்



**சா**ம்பாரில் உப்பில்லையென
புருஷனும்
சனிக்கிழமை சினிமாவுக்கென
பொஞ்சாதியும்
சண்டையிட்டுக் கொள்ள
ஞாயிற்றுக் கிழமை முழுதும்
தேம்பிக் கதவடியில்
தேடலுக்குப் பிறந்த புள்ளை

எந்தச் சாதி என்றறியா எங்களூரு
அம்மனுக்கு
வந்த தேருத் திருவிழாவில்
வாச்சதொரு
சாதிச் சண்டை
வடம் பிடிப்பதெந்தச் சாதி?
வழக்குக் கோர்ட்டில் இருப்பதால்
சொந்தமற்றுத் தேரடியில்
அந்தம் ஆதி அற்ற மாரி

சென்ற ஆட்சியில் போட்ட அரிசியில்
நெல்லும்
வென்ற ஆட்சியில் போடும்
கோதுமையில்
கல்லும்
அவைக்குறிப்பில் நீக்கப்பட்ட
கவைக்குதவாச் சண்டையில்
என்றும் போல விடியல் தேடி
ஏக்கத்துடன் பாமரன்

அமெரிக்காவில் ஆயுதம்
வாங்குவதற்கு
அவரும்
ஐரோப்பாவில் ஆயுதம்
வாங்குவதற்கு
இவரும்
பட்ஜெட்டில் பாதியைப்
படைபலத்திற்கொதுக்க
இமைக்க மறந்த எமனின் பிடியில்
இவர்கள் சொந்தம் உட்பட

**நாகரத்தினம் கிருஷ்ணா**

சுவடுகள் : 35

# அருள் வாழ்வு வாழ்ந்த அ.ச.ஞா.



ஆர்யா தம் தொலைக்காட்சிப் பேட்டிக்காக ஒரு நிபந்தனை விதித்தார். அந்த நிபந்தனை ஒப்புக் கொள்ளப்படாததால் பேட்டி வாய்ப்பை நிராகரித்தார். (அந்த விந்தையான நிபந்தனை பற்றியும் அவர் கொடுக்காத பேட்டி பற்றியும் அடுத்த வாரம்.) ஆன்மிகச் செல்வர்களாகவும் விளங்கிய தமிழ்ப் பிரமுகர்களில், மகேஷ் யோகியின் ஆழ்நிலைத் தியானத்தில் ஈடுபட்டு வாழ்ந்த ஆர்யா ஒருவர். தெ.பொ.மீ.யை குருவாய்க் கொண்டு துறவி போல் வாழ்ந்த பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் இன்னொருவர். பொருள் வாழ்வு வாழ்வோர் மத்தியில் அருள் வாழ்வு வாழ்ந்த அ.ச.ஞா. அண்மையில் தம் 86ம் வயதில் காலமாகிவிட்டார்.

அவர் பார்வையற்றவர். ஆனால் அவரது மூளையின் அபார ஆற்றல், பார்வைப் பழுதைப் புறந்தள்ளிவிட்டது. தாம் பார்வையோடிருந்த காலங்களில் படித்த புத்தகங்களின் பக்க எண்ணைச் சொல்லி அவர் மேற்கோள் பாடலைச் சொல்லும்போது வியப்பு ஏற்படும். அவருக்கு பெரியபுராணம், கம்பராமாயணம் போன்ற பழைய இலக்கியங்கள் பல ஏறக்குறைய முழுவதும் மனப்பாடம்.

கூட்டங்களில் அவர் அருகே உட்காருவேன். பேச்சையும் தாண்டி நடக்கும் செயல்கள் பற்றி விவரிப்பேன். ஆனால் விவரிப்பதற்கும் முன்பாக அவர் நடப்பவற்றை ஊகித்து விடுவார். ஒருமுறை "என்னப்பா, புத்தகம் வெளியிடப்படும்ன்னாங்க மைக்கில. இவ்வளவு நாழி ஆகுது. கை தட்டலே கேக்கலையே. புத்தகக் கட்டின் மேல், ரிப்பனைப் பிரிக்கறதுல சிக்கலா?" என்றார். எனக்கு, ஆச்சரியமாக இருந்தது. எப்படிக் கண்டுபிடித்துவிட்டார் என்று. "ஆமாம்!" என்றேன். "நூல் வெளியீடு இல்லையா! நூல் இருக்கும் இடத்தில் சிக்கல் இருக்கத்தானே இருக்கும்!" என்றார்! தமிழ்நயம் செறிந்த உரையாடல் அவருடையது.

ஒரு கூட்டத்தில் அவர் அருகே அமர்ந்து சில விஷயங்களை விவரித்துக் கொண்டிருந்தேன். "என்ன இருந்தாலும் நான் திருதராஷ்டிரனை விட பாக்கியசாலி!" என்றார் திடீரென்று. "அவனுக்கு சஞ்சயன் தானே நடந்ததைச் சொன்னான். எனக்கு விளக்கம் கிருஷ்ணனிடமிருந்தே கிடைக்கிறதே!" என்றார். நான் ரசித்துச் சிரித்தேன்.

திருப்பூர் கிருஷ்ணன்

"சரி. அன்று நடந்தது போர். இன்று நடப்பது bore. வா. போகலாம்!" என்று புறப்பட்டு விட்டார். மேடைகளில் மட்டுமீறி நரஸ்துதி செய்வது அவருக்குக் கட்டோடு பிடிக்காது. இத்தகைய போக்கை அவர் கண்டிக்கவும் தயங்கியதில்லை. பக்தி இலக்கியச் சொற் பொழிவுத் துறையில் அவர் ஒரு முடிசூடா மன்னர். எதன் பொருட்டும் யாருடனும் சமரசம் செய்து கொள்ளாத உயர் நெறி கொண்டவர்.

ஒருமுறை என் மனைவியுடன் அவர் இல்லம் சென்றேன். (அ.ச.ஞா.வுக்கும் எனக்கும் பள்ளி ஆசிரியையின் கணவர் என்ற வகையிலான ஓர் ஒற்றுமை உண்டு.) என் மனைவியும் அவர் மனைவி திருமதி ராஜம் மாளும் தனியே ஆசிரியைப் பணி பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். "என்ன அங்கே பேச்சு? இங்கே வாருங்கள்!" என்று கூப்பிட்டார் அ.ச.ஞா. "நாங்கள் இருவரும் ஆசிரியைகள். எங்களுக்குள் தனியாய்ப் பேச ஆயிரம் இருக்கும்!" என்றார் அ.ச.ஞாவின் மனைவி செல்லமாய். அ.ச.ஞா பொய்க் கோபத்துடன் "அப்படியா! நாங்கள் இருவரும் இலக்கியம் படித்தவர்கள். எங்களுக்குள் தனியாய்ப் பேச இரண்டாயிரம் இருக்கும். வாருங்கள் கிருஷ்ணன். நாம் இரண்டாயிரம் வருஷத் தமிழ் இலக்கியம் பற்றிப் பேசலாம்!" என்றார்! பாரதிதாசன் எழுதிய முதியோர் காதலின் வாழும் வடிவமாக அவர்கள் இருவரும் இருந்ததைப் பார்ப்பதே தனி ஆனந்தம். அவர்கள் காதலித்துக் கைப்பிடித்தவர்கள். அ.ச.ஞா.வின் அத்தனை நல்லியல்புகளும் அவர் மனைவியிடமும் அப்படியே பிரதிபலிக்கும்.

என் மகனுக்கு சுமார் பத்து வயது இருந்தபோது ஒருமுறை அ.ச.ஞா. அவனிடம் சொன்னார்: "அடேய்! எண்பது வயசுக்கு மேல் வயசை ஒன்று இரண்டு மூன்று என்றுதான் கணக்கிட வேண்டும். எனக்கு இப்போது என்ன பத்து மூன்று வயசு என்றால் மூன்று வயசு என்று தான் அர்த்தம். உனக்கு வயசு பத்து. ஆகையால் நீ என்னை விட ஏழு வயது பெரியவர். நீ எனக்கு அண்ணா. நான் உனக்குத் தம்பி. சரிதானா?" என் மகன் "சரிதான்!" என்று ஒப்புக்கொண்டான். "அப்படியானால், உனக்கு ஒரு தம்பி இருந்தால் அவனிடம் எப்படிப் பேசுவாயோ அப்படித்தான் என்னிடம் இனி நீ பேச வேண்டும்!" என்று நிபந்தனை விதித்தார் அவர். சற்று யோசித்த அவன் திடீரென்று அவரிடம், "சரிடா ஞானசம்பந்தம்!" என்றான்! இதைக் கேட்டுக் கலகலவென்று சிரித்த அவர், அப்படியே என் மகனைத் தேடி வாரி அணைத்து முத்தமிட்டார்.

உயர்நிலைத் தமிழறிஞர்கள், பத்மா சுப்ரமணியம் போன்ற கலைஞர்கள், சுவாமி கமலாத்மானந்தர், சுவாமி விமூர்தானந்தர் போன்ற ராமகிருஷ்ண மடம் சார்ந்த துறவிகள் எனப் பலர் அவருடன் அடிக்கடித் தொலைபேசியில் பேசுவதுண்டு. இரவு எத்தனை மணியானாலும் இலக்கிய ரீதியிலான எந்த சந்தேகம் கேட்டும் தொலைபேசியில் அவரைத் தொந்தரவு செய்யலாம். சலிக்காமல் விளக்கம் தருவார்.

திருக்குறளின் கடவுள் வாழ்த்தைப் பற்றி ஒரு நூல் எழுதிக் கொண்டிருந்தார். எட்டுக் குறள் விளக்கங்கள் முடிந்தன. இரண்டு பாக்கி. திருமுருகாற்றுப் படைக்கு உரை எழுதத் தொடங்கியதும் மீதி நிற்கிறது. திருஞானசம்பந்தர் பற்றிய நூல் கையெழுத்துப் பிரதி முழுமையாய்த் தயாராகிவிட்டது. இந்த எல்லா நூல்களும் விரைவில் வெளிவர வேண்டும்.

முற்றும் துறந்ததாய்ச் சொல்லிக் கொள்ளும் துறவிகள் பலர் பத்திரிகைகளில் தங்களைப் பற்றிய செய்தி வெளிவரப் பறப்பதைப் பார்த்திருக்கிறேன். அ.ச.ஞா. புகழாசையைத் துறந்த தீரர். அவரைப் பற்றி நான் எழுதும் போதெல்லாம், "என்னைப் பற்றி ஏன் எழுதினாய்?" என அன்போடு திட்டுவார். சில வாரங்கள் முன்னால் கல்கியில் இதே சுவடுகள் வரிசையில் அவரைப் பற்றி எழுதிவிட்டு அவர் திட்டுக்காய்க் காத்திருந்தேன். தொலைபேசியில் திட்டினார். அவர் திட்டும்போதும் அந்த உச்சரிப்பும் கணீர்க் குரலும் கேட்க ஆனந்தமானவை. இதோ இப்போது அவரைப் பற்றி எழுதியிருக்கிறேன். இதன் பொருட்டுத் திட்ட அவர் இல்லையே என்ற நினைவில் கண்கள் கலங்குகின்றன. எனக்கும் என் மனைவிக்கும் ஓர் ஆசானை இழந்த துயரம் என்றால், உடன்பிறவாத் தம்பியை இழந்த துயரம் என் மகனுக்கு.

(தொடரும்)

---

"அந்த நடிகைக்கு பந்தா அதிகம்னு எப்படி சொல்றீங்க?"

"அவங்க வீட்ல இருந்த மரக்கட்டிலை பார்த்து, இது டீக்வுட்டா, ரோஸ் வுட்டானு கேட்டேன். அதுக்கு அவங்க ஹாலிவுட்னு பதில் சொன்னாங்களே!"

- எஸ்.முகம்மது யூசுப்



# அருவியாய் நெஞ்சே...



**கா**லையிலேயே வெயில் கொளுத்த ஆரம்பித்துவிட்டது. வண்டியில் வேகமாகப் போகும்போது கிடைக்கும் காற்றையும் மீறி ஏக வியர்வை. காலை பத்து மணிக்கெல்லாம் ஆபிஸில் இருந்தாக வேண்டும் என்ற எண்ணம் நினைவுக்கு வர ஆக்ஸிலரேட்டரை முறுக்கினேன்.

நான் பாலா என்கிற பாலசந்தர். தேசிய மயமாக்கப்பட்ட வங்கி ஊழியர். ஆபீசர் பிரமோஷன் என்று சுய முன்னேற்றத்தைப் பற்றியே வீணாக எண்ணாமல் சமூக சேவை செய்யும் ரகம். என் ஆபீசில் கூட சமூகப் பணிகளுக்காகத் தான் பிரபலம்!

க்ரீச்... தன்னிச்சையாகக் கால்கள் போட்ட பிரேக்கின் ஒலியால் என் கவனம் தடைப்பட்டது. எதிரே சாலையில் கும்பல் கூடி விட்டது. என் ஹாரன் ஒலிக்கு மரியாதையில்லை. வண்டியை ஓரமாக நிறுத்திவிட்டு நெருங்கினேன். கும்பலை விலக்கிப் பார்த்தேன். தலையில் காயத்துடன் தரையில் கிடந்தான் ஒருவன். நான் பதறி ஓடினேன்.

"ஏங்க, என்ன ஆச்சு?" அருகிலிருந்தவரிடம் கேட்டேன்.

"எதிரே வண்டி வேகமாக வரும்போது ரோட்டை கிராஸ் பண்ணியிருக்கார். வண்டிக்காரன் இடிச்சுட்டுத் திரும்பிப் பார்க்காமல் போயிட்டான்."

முகத்தருகில் கையை வைத்துப் பார்த்தேன். மூச்சு சீராக வந்து கொண்டிருந்தது. அடிபட்ட அதிர்ச்சியில் மூர்ச்சையாயிருக்க வேண்டும்.

"ஐயோ... ரத்தம் போகுதே! யாராவது ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்கிட்டுப் போகக் கூடாதா?" கூட்டத்தினரில் ஒரு சிலர் கேலியாகச் சிரிப்பது புரிந்தது.

"டிராஃபிக் சேர்ந்தால் அடுத்த ரோட்டில் இருக்கும் போலீஸ் வந்து பார்ப்பார்கள். அதுக்கப்புறம் ஆஸ்பத்திரி கொண்டு போறதுதான் நல்லது. அவங்க இல்லாமல் போனால் பிரச்னை" நடுத்தர வயதுக்காரர் ஒருவர் முணுமுணுத்தார். தரையில் கிடந்தவருக்கு முதல் உதவி

**"உங்களுக்குத் துணையாக வந்த எனக்கு இருக்கும் அக்கறை கூட உங்களுக்கு இல்லையே."**

**அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட வைட்டமின் சிறுகதை - 1**

செய்யும்போது அவர் அருகில் பர்ஸ் ஒன்று தென்பட்டது. அவருடையதாகத்தான் இருக்கும்.

பர்ஸைத் திறந்தபோது சில ரூபாய் நோட்டுகளோடு விஸிட்டிங் கார்டு ஒன்றும் தென்பட்டது. பெயர் கிருஷ்ணன். தனியார் கம்பெனி ஒன்றின் அதிகாரி. மணியைப் பார்த்தேன். ஒன்பதே முக்கால். நிச்சயம் அலுவலகம் திறந்திருக்கும். அவர்களுக்குத் தகவல் கொடுத்து விட்டு இவரை மருத்துவமனைக்குக் கொண்டு போனால் என்ன!

எதிரே இருந்த பொது தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டேன்.

"ஹலோ, நிரஞ்சனாஸ் லிமிடெட்?"

"எஸ்."

"உங்க ஆபிஸர் மிஸ்டர் கிருஷ்ணன் சம்பந்தமாக ஒரு முக்கியமான தகவல் சொல்லணும். யார்கிட்டே சொல்லலாம்?"

"கிருஷ்ணன் சம்பந்தமாகவா?" ஒரு சில விநாடிகள் தயக்கத்திற்குப் பிறகு.


"உம்...சரி... சொல்லுங்க" என்றார்.

"அவர் இங்கே ஆர்ம்ஸ் ரோடு பக்கத்தில் அடிபட்டுக்கிடக்கிறார். நிலைமை எப்படின்னு சரியா தெரியலை. யாராவது உடனே வர்றீங்களா?"

"இப்பவா... உடனே எப்படி?"

நான் பொறுக்க மாட்டாமல் வெடித்தேன்.

"என்ன ஆளுங்கய்யா நீங்க? உங்க



**ஜெ. ரமேஷ்பாபு**

அலுவலக சகா அடிபட்டிருக்கார்னு ஃபோன் பண்றேன். என்னவோ தயங் கறீங்களே? உங்களுக்கு மனிதாபிமானமே கிடையாதா?"

"சாரி சார், எங்க ஆபீஸ் ஆர்ம்ஸ் ரோடு பக்கம்தான். இடத்தைச் சரியாச் சொல்லுங்க. உடனே வர்றேன்."

நான் இடத்தைச் சொல்லிவிட்டு "வரும் போது சும்மா வராதீங்க. ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக ஏதாவது வண்டி கொண்டு வாங்க"என்றேன்.

**சி**ல நிமிடங்களுக்குப் பிறகு அம்பாசிடர் கார் வந்தது. அதிலிருந்து ஒரு நடுத்தர வயதுக்காரர் வெளிப்பட்டார். என்னை நெருங்கினார்.

"கொஞ்ச நேரம் முன்பு ஃபோன் செய்தது நீங்கள் தானே?"

'ஆம்' என்று தலையசைத்தேன்.

"பக்கத்தில் எனக்குத் தெரிந்த ஆஸ்பத்திரி இருக்கிறது. அங்கே அழைச்சிட்டுப் போகலாம்."

அடிபட்டவரை வண்டியில் ஏற்றினோம்.

"இனி பார்த்துக் கொள்வீர்கள் இல்லையா?"

"நீங்க தப்பா நினைக்கலைன்னா நீங்களும் கூட வருவது நல்லது. இந்த மாதிரி விஷயங்களில் எனக்கு அவ்வளவாகப் பழக்கமில்லை."

என் சேவை மனம் தாங்குமா?

"ஒரு நிமிடம்" என்று ஓடி, என்னுடைய பைக்கை பக்கத்திலிருந்த கடைக்காரரை பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு வந்து காரில் தொற்றிக் கொண்டேன்.

**வ**ண்டியை வேகமாக செலுத்திக் கொண்டே வந்தவர் கேட்டார் –

"சார், நீங்க என்ன பண்றீங்க?"

நான் என்னைப் பற்றிச் சொன்னேன்.

"இந்தக் காலத்தில் உங்களை மாதிரி சேவை மனப்பான்மை உள்ளவங்களைப் பார்ப்பது அரிது."

"என்னவோ தெரியலை, சோஷியல் சர்வீஸ் என் ரத்தத்தில் ஊறி விட்டது."

பேசிக் கொண்டே மருத்துவமனை போய்ச் சேர்ந்து விட்டோம். ஆஸ்பத்திரி ஊழியர்கள் அடிபட்டவரை மெதுவாக ஏற்றி உள்ளே கொண்டு போனார்கள். நாங்கள் இருவரும் வரவேற்புப் பகுதியை நோக்கிப் போனோம். ஒரு சில நிமிடங்களுக்குப் பிறகு ஒரு டாக்டர் எங்களை நோக்கி வேகமாக வந்தார்.

"உயிருக்கு ஆபத்தில்லை. தலையில் அடிபட்டிருப்பதால் டெஸ்ட் எல்லாம் செய்து பார்த்த பிறகு தான் எதுவும் சொல்ல முடியும். ஒரு தொகையை முன் பணமாக வரவேற்பில் செலுத்தி விடுங்கள்."

வந்தவர் அட்வானஸ் பணத்தைச் செலுத்தும்போது கேட்டார்_

"செலவு அதிகமா ஆகுமா?"

"சொல்ல முடியாது. கொஞ்ச நேரம் கழித்து டாக்டர் மறுபடி சொல்லுவார்."

"இல்லை... என் கையில் இருந்த பணத்தை வழியில் தொலைத்து விட்டேன். மேற்கொண்டு வேணும்னா பணத்துக்கு ஏற்பாடு செய்யணும்." எனக்கு எரிச்சலாக வந்தது. பணத்தைச் செலவழிக்க மனம் வராததை மறைக்க சால்ஜாப்பு! வெறுப்பாக முகத்தைத் திருப்பினேன்.

"எதற்கும் நீங்கள் இன்னும் கொஞ்சம் பணம் தயார் செய்து கொள்வது நல்லது" வரவேற்பு பெண் சொல்லிவிட்டு நகர்ந்து



கொண்டாள். வந்தவர் என்னிடம் "சார், நீங்க கொஞ்ச நேரம் பார்த்துக் கொள்கிறீர் களா? நான் அலுவலகம் வரை போய் வருகிறேன்."

நான் வெடித்தேன்.

"மிஸ்டர், நான் ஆரம்பத்திலிருந்து பார்க்கிறேன். உங்கள் போக்கு சரியில்லை. ஃபோன் செய்து விபத்து பற்றிச் சொன்ன போது முதலில் வரத் தயங்கினீர்கள். இப்போ, பணமில்லை போகட்டுமா என்கிறீர்கள். உங்களுக்குத் துணையாக வந்த எனக்கு இருக்கும் அக்கறை கூட உங்களுக்கு இல்லையே."

நான் போட்ட சப்தத்தில் அவருக்கு சங்கடமாகிவிட்டது.

"சாரி சார், ஆபீசுக்கு ஒரு போன் செய்து விட்டாவது வருகிறேன்" என்றார்.

நான் வேண்டா வெறுப்பாகத் தலை யசைத்ததும், வரவேற்பு அறையிலிருந்த ஃபோன் மூலமாகப் பேச ஆரம்பித்தார்.

"நிகிலா...? எஸ். நான் கிருஷ்ணன்தான் பேசறேன். நான் வர கொஞ்ச நேரம் ஆகும். அவசரமா பணம் தேவை. யார் மூலமாவது கொடுத்தனுப்பேன்."

அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டி ருந்த எனக்குக் குழப்பம். வந்தவரிடம் கேட்டேன் –

"உங்க பேர் கிருஷ்ணனா?"

"ஆமாம்."

"அடிபட்டவர் கிருஷ்ணன். நீங்களும் கிருஷ்ணனா?"

"நான் நிச்சயமா கிருஷ்ணன். அடிபட் டவர் யார்னு தெரியாது."

"என்ன சொல்றீங்க?" என் குழப்பம் அதிகரித்தது.

"இந்த பர்ஸைப் பாருங்கள். உங்கள் சக ஊழியர் கிருஷ்ணனுடைய விசிட்டிங் கார்டு. இது அவரிடம் இருந்ததால் அவர் தான் கிருஷ்ணன்னு முடிவு பண்ணி னேன்."

அவர் ஆவலாகப் பர்ஸைப் பிடுங்கிப் பார்த்தார். "எல்லாம் சரியாய் இருக்கிறது" என்று முணு முணுத்தவர் – "அடிபட் டவன் யார்னு எனக்குத் தெரியாது. இன்னிக்குக் காலையில் ஆபீஸ் வரும் போது யாரோ என் பர்ஸை கும்பலில் எடுத்து விட்டார்கள். அது அடிபட்ட வனாக இருக்கலாம்."



"அப்போ ஏன் என்னிடம் நீங்க தான் கிருஷ்ணன்னு சொல்லலை?

அவர் புன்முறுவல் பூத்தார்.

"உங்க முதல் கேள்விக்கு விடை – நீங்க என் பெயர் என்னவென்றே கேட்காததால் சொல்லவில்லை. இரண்டாவ தற்குக் காரணம் நீங்கள் அவ் வப்போது உங்களைச் சுட்டி காட்டி மனிதாபிமானத்தைப் பற்றி எனக்கு விடும் டோஸ் தான். என்னதான் என் பர்ஸைத் திருடி னாலும், அவனும் மனுஷன் தானே! அவனுடைய உயிர்த் துடிக்கும் சேதி தெரிந்ததும் பேசாமல் ஃபோனை வைத்து விட என் மனம் இடம் தரவில்லை."

சேவை மனப்பான்மை குறித்த என் கர்வம் அப்பளம் போல் நொறுங்கியது.



# சிவகாமியின் சபதம்

**மூன்றாம் அத்தியாயம்**

## உடன்படிக்கை

வாதாபிச் சக்கரவர்த்தியும் பாண்டிய மன்னனும் விரைவில் மனமொத்த சிநேகிதர்களாகி விட்டார்கள். ஜயந்தவர்மன் கொள்ளிடத்து வடகரைக்கு வந்து சிலநாள் தன்னுடைய விருந்தாளியாயிருக்க வேண்டுமென்று புலிகேசி கேட்டுக்கொண்டான்.

அவ்விதமே ஜயந்தவர்மன் தன்னுடைய முக்கிய மந்திரி பிரதானிகளுடன் மறுநாள் கொள்ளிடத்தின் வடகரைக்கு வந்தான். புலிகேசி ஆடம்பர இராஜோபசாரங்களுடன் ஜயந்தவர்மனை வரவேற்றதுடன், தன்னுடைய நால் வகைப் படைகளையும் ஜயந்தவர்மனுக்குக் காட்டி அவன் பிரமிக்கும்படி செய்தான். தடபுடலான விருந்துக்குப் பிறகு, வாதாபியின் வில்லாளிகள், வாள் வீரர்கள், மல்லர்கள் முதலியோர் அந்தப் பேரரசர்களின் முன்னிலையில் தத்தம் திறமைகளைக் காட்டினார்கள்.

பிறகு, வாதாபியின் அரண்மனைக் கவிஞர், சந்தர்ப்பத்துக்கேற்பத் தாம் புனைந்திருந்த புகழ்ச்சிக் கவிதைகளைப் பாடினார். கணக்கற்ற வெண்கொற்றக் குடைகளினாலும் வெண் சாமரங்களினாலும் அலையெறியும் திருப்பாற்கடலைப் போல் விளங்கிய வாதாபியின் சேனா சமுத்திரமானது துங்கபத்திரை நதிக் கரையிலிருந்து பொங்கித் தெற்கு நோக்கி வந்தது பற்றியும், அந்தச் சேனா சமுத்திரத்தைத் தூரத்தில் கண்டதுமே காஞ்சி மகேந்திர பல்லவன் நடுநடுங்கிப் போய்த் தனது சிறு குட்டையையொத்த படையுடன்

**அமரர் கல்கி**

காஞ்சிக் கோட்டைக்குள் ஒளிந்து கொண்டது பற்றியும், பிறகு வாதாபிச் சக்கரவர்த்தி அழகிய கயல்மீன்கள் துள்ளி விளையாடும் காவேரி நதியைக் காண ஆவல் கொண்டு தெற்கு நோக்கி வந்தது பற்றியும், காவேரிக் கரையில் மதுரைப் பாண்டிய மன்னனைச் சந்தித்து அளவளாவி மகிழ்ந்தது பற்றியும், வாதாபியின் யானைகள் காவேரியில் வரிசையாக நின்று பாலம் அமைத்த போது காவேரியின் நீரோட்டம் தடைப்பட்டு நின்றது பற்றியும், யானைகளின் மதநீர் நதியில் விழுந்ததனால் பிரவாகம் மேலும் பெருகிக் கரைகளை மோதியது பற்றியும் வர்ணித்திருந்த பாடல்களை வாதாபியின் இராஜகவி பாடியபோது, பாண்டியனும் மற்ற சிற்றரசர்களும் மது உண்டவர்களைப் போல் மதிமயங்கி நின்றார்கள்.

எல்லாம் முடிந்து ஜயந்தவர்ம பாண்டியன் புலிகேசியிடம் விடைபெற வேண்டிய சமயம் வந்தபோது, ''சத்யாச்சரயா! பல்லவனை முறியடித்துக் காஞ்சியைக் கைப்பற்றிய பிறகு, அப்படியே தாங்கள் திரும்பிப் போய்விடக் கூடாது. மதுரைக்கும் விஜயம் செய்து விட்டுப் போக வேண்டும்!'' என்றான்.

அந்த நாளில் காஞ்சிக்கு அடுத்தபடியாகத் தென்னாட்டில் பிரசித்தமாக விளங்கிய மதுரைமா நகருக்கும் புலிகேசி வந்தால் பாண்டியர்களின் சீர் சிறப்புக்களையெல்லாம் காட்டி அவனைப் பிரமிக்கச் செய்யலாம் என்பது ஜயந்தவர்மனுடைய எண்ணம்.

அதைக் கேட்ட புலிகேசி ஒரு பெருமூச்சு விட்டான். "ஆம், எனக்கு மதுரையையும் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் வெகு காலமாக உண்டு. காஞ்சியைப் பற்றி எழுதிய பிக்ஷு மதுரையைப் பற்றியும் எழுதியிருந்தார். ஆனால்...!'' என்று புலிகேசி சொல்லி வரும்போதே பாண்டியன் குறுக்கிட்டு, ''புத்த பிக்ஷுவைப் பற்றித் தங்களை நானே கேட்க வேண்டுமென்றிருந்தேன். அவர் எங்கே? தங்களுடன் அவர் இருப்பார் என்றல்லவா எண்ணினேன்?'' என்றான்.

''பிக்ஷுவைப் பற்றித்தானே தகவல் ஒன்றும் தெரியவில்லை! அவரைப் பற்றி நானே தங்களிடம் கேட்க வேண்டும் என்றிருந்தேன். மதுரைக்கு வந்திருந்தார் அல்லவா? அங்கே என்ன நடந்தது? தங்களிடம் என்ன சொல்லிவிட்டுக் கிளம்பினார்? எங்கே போவதாகச் சொன்னார்?'' என்று வாதாபி மன்னன் வினவினான்.

பிக்ஷு மதுரைக்கு வந்த சமயம் தன் தந்தை காலமானதும் அதனால் ஏற்பட்ட குழப்பத்தில் பிக்ஷு சிறைப்பட்டதும், தனக்கு முடி சூட்டு விழா நடந்த பிறகு பிக்ஷுவைத் தான் விடுதலை செய்ததும் ஆகிய விவரங்களைக் கூறிவிட்டு ஜயந்தவர்மன் மேலும் சொன்னதாவது: ''பிக்ஷு விடுதலையான உடனேயே, வாதாபிச் சைனியம் காஞ்சியை அணுகி விட்டதா என்று அவர் என்னைக் கேட்டார். 'இல்லை! இன்னும் வடபெண்ணைக் கரையிலேதான் இருக்கிறது' என்று நான் தெரிவித்ததும் அவர் பெரிதும் ஆச்சரியமடைந்தார். என்னைச் சைனியத்துடன் கொள்ளிடக் கரைக்கு வந்திருக்கும்படி சொல்லிவிட்டு, தாம் முன்னாலே போவதாக அவர் கிளம்பினார். பின்னர், தங்களை வந்து அவர் சந்திக்கவே இல்லையா?''

''இல்லை; அதுதான் மிக்க அதிசயமாயிருக்கிறது. அந்த மூடன் துர்விநீதனால் இருவருக்கும் ஏதாவது நேர்ந்து விட்டதோ, என்னமோ? ஒன்றுமே தெரியவில்லை. பிக்ஷு இல்லாதது எனக்கு ஒரு கை இல்லாதது மாதிரி இருக்கிறது'' என்றான் புலிகேசி.

இதற்குப் பாண்டியன், ''ஆமாம்! ஒரு சில நாள் பழக்கத்திலேயே பிக்ஷுவிடம் எனக்கு மிக்க

மதிப்பு ஏற்பட்டுவிட்டது. ஆனால் இந்தக் கங்க நாட்டான் எதற்காக இப்படி அவசரமாகச் சென்று அகப்பட்டுக் கொண்டான்? பிக்ஷு என்னிடம் சொன்னது ஒன்று. துர்விநீதன் செய்தது வேறொன்றாகவல்லவா இருக்கிறது? ஒருவேளை மகேந்திர பல்லவன் தப்பி ஓட முயன்றால் நான் கொள்ளிடக் கரையில் நின்று தடுக்க வேண்டுமென்றும் துர்விநீதன் மேற்கு எல்லையில் நின்று தடுக்க ஏற்பாடு செய்திருப்பதாகவும் பிக்ஷு சொன்னார். அப்படி இருக்க, துர்விநீதன் எதற்காக அவசரப்பட்டுக் காஞ்சியை நெருங்கினான்? அதனால் புள்ளலூரில் ஏதோ பிரமாத வெற்றியடைந்து விட்டதாகப் பல்லவன் பறையடித்துக் கொள்ள இடங் கொடுத்து விட்டானே? அதனாலேயல்லவா பல்லவ நாட்டு மக்களும் சோழ நாட்டுக் குடிகளும்கூட மிக்க கர்வம் கொண்டிருக்கிறார்கள்!" என்றான்.

"துர்விநீதன் விஷயம் பெரிய மர்மமாகத்தானிருக்கிறது! அவன் உயிரோடிருக்கிறானா, செத்துப் போய் விட்டானா என்றுகூட நிச்சயமாகத் தெரியவில்லை. அவனைப் பற்றித் தெரிந்தால் பிக்ஷுவைப் பற்றியும் ஏதாவது விவரம் அறியலாம். ஆனால், இந்தத் தரித்திரம் பிடித்த பல்லவ நாட்டுக் கிராமங்களில் யாரை என்ன கேட்டாலும், 'எங்களுக்கு ஒன்றும் தெரியாது' என்கிறார்கள். ஒவ்வொரு சமயம் எனக்கு வருகிற கோபத்தில், பல்லவரின் ஆட்சிக்கு உட்பட்ட கிராமங்களிலே ஒரு வீடு, ஒரு கூரை மிச்சமில்லாமல் எல்லாவற்றையும் கொளுத்தி பஸ்மீகரம் செய்துவிடலாமா என்று தோன்றுகிறது!" இவ்விதம் புலிகேசி கூறியபோது ஏற்கெனவே கோவைப் பழம் போல் சிவந்திருந்த அவனுடைய கண்களில் அக்னி ஜ்வாலை வீசிற்று.

"ஆமாம், ஆமாம், நானும் எல்லாம் கேள்விப்பட்டேன். ஏரிகளை எல்லாம் உடைத்துவிட்டு இந்த வருஷம் கோடைக் காலத்தில் சாகுபடியே செய்யாமல் பல்லவ நாட்டு மக்கள் இருந்து விட்டார்களாம். எந்தக் கிராமத்துக்குப் போனாலும் பஞ்சப் பாட்டுப் பாடுகிறார்களாம். தானியத்தை ஒளித்து வைத்துக் கொண்டு 'எங்களுக்கே சாப்பாடு இல்லை. பட்டினி கிடக்கிறோம்' என்று முறையிடுகிறார்களாம்! பொல்லாத ஜனங்கள்!" என்றான் பாண்டியன்.

"அவர்களுடைய பொல்லாத்தனத்தை அடக்க எனக்கு வழி தெரியும். ஒளித்து வைத்திருக்கும் தானியங்களை எடுத்துக் கொடுக்கும்படி செய்யவும் தெரியும். அதெல்லாம் இப்போது வேண்டாம் என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன்."

"இந்தச் சோழ நாட்டுத் திமிர் பிடித்த மக்களுக்கு நானும் ஒருநாள் பாடம் கற்பிக்க வேண்டும். காஞ்சிக் கோட்டை பிடிபடட்டும் என்றுதான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்... இருக்கட்டும்! துர்விநீதனைப் பற்றியல்லவா கேட்டுக் கொண்டிருந்தீர்கள்? என்னுடைய ஒற்றர்கள் ஏதோ சொன்னதாக ஞாபகம் இருக்கிறது. இதோ விசாரிக்கிறேன்" என்று ஜயந்தவர்மன் கூறித் தன்னுடைய ஒற்றர் படைத் தலைவனை வரவழைத்துக் கேட்டான்.


ஒற்றர் தலைவன் கூறியதாவது: "நம்முடைய சைனியம் காவேரியைத் தாண்டிக் கொள்ளிடத்தை நெருங்கிக் கொண்டிருந்தபோது, புள்ளலூர்ச் சண்டையைப் பற்றிய செய்தி வந்தது. உடனே சிலரை நான் அனுப்பி நிலைமையை விசாரித்து வரச் செய்தேன். புள்ளலூரில் தோல்வியடைந்து கங்க ராஜா தெற்கு நோக்கி ஓடி வந்தாராம். அவரை மாமல்லர் துரத்தி வந்தாராம். திருப்பாற்கடல் என்னும் பெரிய ஏரி உடைத்துக்கொண்டு மாமல்லரைத் தடை செய்ததாம். இதனால் கங்கராஜா தென் பெண்ணைக்கு இக்கரை வந்து, பாடலிபுரத்துச் சமணர் பள்ளியில் ஒளிந்து கொண்டாராம். பிறகு என்ன

நடந்ததென்று தெளிவாகத் தெரிய வில்லை. திருக்கோவலூர்க் கோட்டத் தலைவன் சமணப் பள்ளியைத் தாக்கி இடித்துக் கங்க மகாராஜாவைச் சிறைப்பிடித்துக் கொண்டு போனதாகச் சில ஜனங்கள் பேசிக் கொண்டார் களாம். திருக்கோவலூருக்குத் தெற்கே யுள்ள மலைப் பிரதேசத்தில் சிறை வைத்திருப்பதாகவும் வதந்தியாம்."

பிறகு பேரரசர்கள் இருவரும் கலந் தாலோசித்துப் பின்வரும் திட்டத்தை

கோட்டை பணிகிற வரையில் வாதா பிச் சைனியத்துக்கு வேண்டிய உணவுப் பொருள்களைப் பாண்டியன் அனுப்பிக் கொண்டிருக்க வேண்டியது.

கொள்ளிடத்தில் தண்ணீர் குறைந் ததும் பாண்டியன் தன் சைனியத்துடன் நதியைத் தாண்டி முன்னேறி வந்து தென் பெண்ணை நதி வரையில் கைப்பற்றிக் கொள்ள வேண்




வகுத்துக் கொண்டார்கள்: புலிகேசி காஞ்சிக்குத் திரும்பிச் சென்று கோட்டை முற்றுகையை இன்னும் தீவிரமாய் நடத்த வேண்டியது. காஞ்சிக்

டியது. திருக்கோவலூர்க் கோட்டத் தலைவனைப் பிடித்துக் கடுமையாகத் தண்டிப்பதுடன், அங்குள்ள மலைப் பிரதேசத்தில் துர்விநீதன் சிறைப் பட்

டிருந்தால், அவனை விடுதலை செய்து அனுப்பி வைக்க வேண்டியது.

இந்த உதவிகளையெல்லாம் பாண்டியன் செய்வதற்குக் கைம்மாறாகக்

மேற்கண்டவாறு இரு தரப்புக்கும் திருப்திகமான உடன்படிக்கையைச் செய்துகொண்ட பிறகு, ஜயந்த வர்ம பாண்டியன் வாதாபிச்



குமரி முனையிலிருந்து தென் பெண்ணை வரை உள்ள பிரதேசத்தின் மகா சக்கர வர்த்தியாக ஜயந்தவர்ம பாண்டியனைப் புலிகேசி அங்கீகரிக்க வேண்டியது.

சக்கரவர்த்தியிடம் விடை பெற்றுக்கொண்டு பழையபடி கொள்ளிடத்தின் தென்கரை போய்ச் சேர்ந்தான்.

## நான்காம் அத்தியாயம்

# வேங்கி தூதன்

ஜயந்தவர்மன் போய்விட்ட பிறகு புலிகேசி தன்னுடைய பிரதானிகளைப் பார்த்து, "யானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கு ஒரு காலம் வரும் என்பது எவ்வளவு உண்மை, பார்த்தீர்களா? அந்தப் பல்லவ நரி கோட்டைக்குள் ஒளிந்து கொள்ளப் போக, இந்தப் பூனைப் பாண்டியனின் தலை ஒரேயடியாக வீங்கிப் போயிருக்கிறது! உத்தராபதத்தின் ஹர்ஷவர்த்தன சக்கரவர்த்திக்கும், மத்தியப் பிரதேசத்தின் வாதாபிச் சக்கரவர்த்திக்கும் இணையாகப் பூனைப் பாண்டியனும் தக்ஷிண தேச சக்கரவர்த்தியாக விளங்க வேண்டுமாம்! ஆசையைப் பாருங்கள், ஆசையை! காஞ்சிக் கோட்டை மட்டும் தகர்ந்து விழட்டும்; பிறகு இந்த அற்பனுக்கும் தக்க புத்தி புகட்டி விட்டு வாதாபிக்குத் திரும்புவோம்" என்றான்.

இப்படிப் புலிகேசி சொல்லி முடிக்கும் தருவாயில், வேகமாகக் குதிரைகள் நெருங்கி வரும் சத்தம் கேட்டது. காஞ்சி முற்றுகையை நடத்திக் கொண்டிருந்த சளுக்க சேனாபதி அவசரச் செய்தியுடன் தூதர்களை அனுப்பியிருக்கிறார் என்றும், அவர்கள் வேங்கியிலிருந்து வந்த தூதன் ஒருவனையும் அழைத்து வந்திருப்பதாகவும் தெரிந்தது. தாமதமின்றி அவர்களைத் தன் முன்னிலையில் அழைத்து வரும்படி புலிகேசி சொல்ல, சேனாபதி அனுப்பிய தூதர்களின் தலைவனும் வேங்கி நாட்டுத் தூதனும் அழைத்து வரப்பட்டார்கள்.

வேங்கி நாட்டுத் தூதன் தன்னுடைய உடம்பெல்லாம் காயங்களுக்குக் கட்டுப் போட்டுக்கொண்டிருந்தான்.

தூதர்கள் இருவரும் சக்கரவர்த்திக்கு அடி பணிந்து எழுந்த பிறகு, சேனாபதி தூதன், "பிரபு! இவன் வேங்கியிலிருந்து முக்கியமான செய்தி அடங்கிய ஓலை கொண்டு வந்திருக்கிறான். காஞ்சிக்கு வரும் வழியில் இவனை வழி மறித்துச் சிலர் தடுக்க முயற்சி செய்தார்களாம். அவர்களுடன் சண்டையிட்டுத் தப்பித்துக் கொண்டு வந்தானாம். காஞ்சியிலிருந்து இங்கு ,வரும் மார்க்கத்தில் இவனுக்கு ஏதும் அபாயம் வரக்கூடாதென்பதற்காகச் சேனாபதி என்னையும் வீரர்கள் எழுவரையும் அனுப்பினார்!" என்றான்.

பிறகு, வேங்கியிலிருந்து வந்த தூதன் தன்னுடைய உடைவாளின் உறையில் பத்திரமாய் வைத்திருந்த ஓலையை எடுத்துப் பயபக்தியுடன் சக்கரவர்த்தியிடம் கொடுத்தான்.

புலிகேசி அதை வாங்கிக் கொண்டதும் சபையில் இருந்த விகிதனின் முகத்தைப் பார்க்க, அவன் விரைந்து ஓடி வந்து பணிவுடன் ஓலையை வாங்கிப் படிக்கலானான்:

"திரிபுவன சக்கரவர்த்தி சத்யாச்ரய புலிகேசி மகாராஜருக்குச் சகோதரன் விஷ்ணுவர்த்தனன் பக்தியுடன் எழுதும் விகிதம்.

"தாங்கள் காஞ்சிக்குப் போய்ச் சேர்ந்தபிறகு எவ்விதச் செய்தியும் தங்களிடமிருந்து வரவில்லை. நான் பல முறை அனுப்பிய ஓலைகளுக்கும் மறுமொழி இல்லை. ஒருவேளை என் ஓலைகள் தங்களுக்கு வந்து சேரவில்லையோ என்று சந்தேகிக்கிறேன்.

"தங்களுடைய கட்டளைப்படி குரு பூஜ்ய பாதரை வரவழைத்து விமரிசையாக மகுடாபிஷேகம் செய்து கொண்டேன். ஆனால், இன்னும் தொல்லைகள் தீர்ந்தபாடில்லை. வேங்கிப் படைகள் இன்னும் மலைப் பிர



''ஆஹா! இந்தப் பாழாய்ப் போன பல்லவ ராஜ்யத்தில் ஒற்றர்களைத் தவிர வேறு யாருமே இல்லை போலிருக் கிறது.

தேசங்களில் மறைந்து நின்று தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்கின்றன. குடி படைகளும் கறுமுறு என்று இருக்கிறார்கள்.

"இன்னும் ஒரு அதிசயமான விஷயம்! மகேந்திர பல்லவருடைய சிறிய தந்தை மகன் புத்தவர்மன் எங்கிருந்தோ ஒரு பெரிய சைனியத்துடன் முளைத்திருக்கிறான். கிருஷ்ணை நதியின் தென்கரையில் தண்டு இறங்கி நான் தங்களுக்கு உதவி செய்வதற்காகப் புறப்பட்டால் என்னைத் தடுக்கப் போவதாகக் கறுவிக் கொண்டிருக்கிறானாம்.

"வேங்கி யுத்தத்தில் ஏற்பட்ட காயங்களால் நான் அடைந்த தேக அசௌக்யம் இன்னும் தீரவில்லை. நாளுக்கு நாள் பலஹீனம் அதிகமாகி வருகிறது. குதிரை ஏறக்கூட முடியாதவனாயிருக்கிறேன்.

"இதெல்லாவற்றையும் விட முக்கியமான விஷயம்: மகேந்திர பல்லவன் கோட்டைக்குள் ஒளிந்து கொள்ளுவதற்கு முன்னால் உத்தராபதச் சக்கரவர்த்திக்கு உதவி கோரி ஓலை அனுப்பினானாம். ஹர்ஷ வர்த்தனர், தாங்கள் காஞ்சியிலும் நான் வேங்கியிலும் அகப்பட்டுக் கொண்டிருக்கும் இச் சமயம் பார்த்து, அசலபுரத்தின் மேலும் வாதாபியின் மேலும் படையெடுக்கத் தீர்மானித்து விட்டதாக வதந்தி உலாவுகிறது. கன்யாகுப்ஜத்திலிருந்து சமீபத்தில் நாகார்ஜுன மலைக்கு வந்த ஒரு யாத்ரிகன் இவ்விதம் சொன்னானாம். அஜந்தா குகைகளையும் சித்திரங்களையும் பார்க்க வேண்டும் என்ற ஆசையினாலேயே ஹர்ஷவர்த்தனர் மேற்படி யோசனை செய்திருப்பதாக வதந்தியாம்.

"இந்த நிலைமையில் அடியேனுக்குத் தாங்கள் என்ன கட்டளையிடுகிறீர்கள் என்பதைத் தெரிந்துகொள்ள ஆவலாய்க் காத்திருக்கிறேன். எது எப்படியிருந்தாலும், 'படையுடன் புறப்பட்டு வா' என்று கட்டளையிட்டால், உடனே புறப்படச் சித்தமாயிருக்கிறேன். என் அன்புக்குகந்த தமையனும் தந்தையும் குருவும் அரசனும் உற்ற நண்பனுமான தங்களுடைய வார்த்தையே எனக்குக் கடவுளின் கட்டளையைவிட மேலானது. என் உடல், பொருள் ஆவியனைத்தையும் தங்களுடைய சேவையில் அர்ப்பணம் செய்ய எந்த க்ஷணமும் சித்தமாயிருக்கிறேன்.

"இன்னும் வெகு காலம் சந்தேகத்திலும் குழப்பத்திலும் என்னை விட்டு வைக்காமல், "இன்னது செய்" என்று திட்டமாக ஆக்ஞையிடும்படியாக மன்றாடி வேண்டிக்கொள்கிறேன்.

மேற்படி ஓலையை விகிதன் படித்து வந்தபோது, ஆரம்பத்திலேயெல்லாம் புலிகேசியினுடைய கண்களிலே அனல் பறந்தது. மந்திரத்துக்குக் கட்டுப்பட்ட நாகப் பாம்புபோல அடிக்கடி பெரு மூச்சு விட்டான். ஓலையின் கடைசிப் பகுதியைப் படித்தபோது, அவனுடைய கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பெருகிற்று. "என் அருமைத் தம்பி விஷ்ணுவர்த்தனா, உன்னை மறுபடியும் எப்போது காணப் போகிறேன்!" என்று அலறினான்.

சபையில் வீற்றிருந்த தளபதி பிரதானிகள் முதலியோர் யாரும் அவனுக்கு ஆறுதல் கூற முன்வரவில்லை! தாங்கள் ஏதாவது பேசினால் அதன் காரணமாக என்ன விபரீதம் நேருமோ என்னவோ என்று அனைவரும் கதிகலங்கிக் கொண்டிருந்தார்கள்.

திடீரென்று புலிகேசி புலம்புவதை நிறுத்திவிட்டு, கண்களைத் துடைத்துக் கொண்டு சிம்ம கர்ஜனைக் குரலில், "இந்தப் படையெடுப்புக்கு நான் பார்த்துக் கொடுத்த ஜோஸ்யன் யார்? இங்கே நம்முடன் வந்திருக்கிறானா?" என்று கேட்டான்.

"நம்முடன் வரவில்லை. வாதாபியிலே தான் இருக்கிறான்!" என்று பிரதானிகளில் ஒருவன் சொன்னான்.

"அப்படியானால் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். வாதாபிக்குப் போனதும் முதற் காரியமாக அந்த ஜோஸ்யனை யானையின் காலால் இடறச் செய்ய வேண்டும்!" என்றான் புலிகேசி.

அதேசமயத்தில், புலிகேசியின் கோபத்திற்கு இரையாவதற்காகவே கொண்டு வந்ததுபோல் ஒரு மனிதனை மேலெல்லாம் கயிற்றால் பிணைத்து, கூடாரத்துக்குள்ளே கொண்டு வந்தார்கள். புலிகேசி, "இவன்



# அருள்வாக்கு

கர்மம் செய்கிறவனிடம் பகவான் பிரீதி அடைவானா, பூஜை செய்கிறவனிடம் பிரீதி அடைவானா? ஒரு பிரபுவிடம் இரண்டு வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். ஒருவன் வேலை எதுவும் செய்யாமல், அந்தப் பிரபுவை ஸ்தோத்திரம் செய்து கொண்டே இருக்கிறான். இன்னொருவன் வெகு நேர்த்தியாக வேலை செய்கிறான் என்றாலும் அந்தப் பிரபுவிடம் துளிக்கூட அன்போ, பாசமோ காட்டாமல் வேலையை மட்டும் கவனிக்கிறான். சாதாரணமாகப் பார்ப்பவர்களுக்கு அருகில் நின்று ஸ்தோத்திரம் பண்ணுகிறவன்தான் பிரபுவின் பிரீதிக்குப் பாத்திரமாக முடியும் என்று தோன்றும். பிரபு அசடாக இருந்தால் இப்படியே நடப்பான். ஆனால் அவன் புத்திசாலியாக இருந்தால் கண்ணில் படாமல் வேலை செய்கிறவனிடமே அதிகப் பிரியத்துடன் இருப்பான். ஈசுவரன் அசட்டுப் பிரபு இல்லை. தன்னை ஸ்தோத்திரம், பூஜை செய்கிறான் என்பதால் மட்டும் ஒருவனுக்கு அவன் அனுக்கிரகம் செய்துவிட மாட்டான். தான் விதித்த கர்மங்களைச் செய்கிறவர்களிடமே அதிக பிரீதி கொள்வான்.



ஆனாலும் அந்தக் கர்ம மார்க்கக்காரன் மனசில் அன்பே இல்லாமல் 'வெட்டு வெட்டு' என்று வேலை மட்டும் செய்தால், அவன் பகவத் பிரீதியின் ஆனந்தத்தைப் பூரணமாக அநுபவிக்க முடியாது. 'இது பகவான் செய்த லோகம். சர்வலோக ராஜாவான பகவானின் குடிமக்களே ஜனங்கள் அத்தனை பேரும். நாமும் அவனுடைய பிரஜை. எனவே, இவர்களெல்லாம் நம்மைச் சேர்ந்தவர்கள். நம் சகோதரர்கள். ராஜாவாக இருக்கிறதோடு, அவனே நம் அம்மையும் அப்பனும். நாம் அத்தனை பேரும் அவனுடைய குழந்தைகள்; ஆதலினால் ஒருத்தருக்கொருத்தர் சகோதரர்கள். இத்தனை குழந்தைகளும் இருக்கிற ஜன சமூகக் குடும்பம் ஒற்றுமையாக, சௌஜன்யமாக வாழ வேண்டுமென்றே நமக்கு வேத தர்மம் வெவ்வேறு காரியங்களைப் பிரித்துக் கொடுத்திருக்கிறது. அதை நம்முடைய சொந்த ஆசைகள், லாபங்களை நினைக்காமல் செய்து, பகவானின் குடும்பம் ஒழுங்காக நடக்கச் செய்வதே நம் கடமை' என்ற உணர்ச்சி உண்டானால்தான் நாம் செய்கிற கர்மம் துளிக்கூடக் குறைவு, ஒழுங்கீனம் இல்லாமல் சரியாக இருக்கும். இந்த உணர்ச்சி வருகிறபோது, அதிலேயே ஈசுவர பக்தியும் உட்புகுந்து நிற்கும். இப்படி பக்தி உணர்வோடு கர்மம் செய்தாலே பகவத் கிருபையைப் பூரணமாகக் கிரகிக்க முடியும்.

**— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சாரிய சுவாமிகள்**

யார்? இவன் யார்?" என்று கர்ஜிக்க, காஞ்சியிலிருந்து வந்த தூதர் தலைவன், "பிரபு! இவன் காஞ்சி ஒற்றன். நாங்கள் வரும்போது வழியிலே இவனைச் சந்தித்தோம். கட்டிப் பிடித்துக் கொண்டு வந்தோம்" என்றான்.

"ஆஹா! இந்தப் பாழாய்ப் போன பல்லவ ராஜ்யத்தில் ஒற்றர்களைத் தவிர வேறு யாருமே இல்லை போலிருக்கிறது. நல்லது. ஜோஸ்யனுக்குப் பிரதியாக இவனை யானையின் காலால் இடறச் செய்யுங்கள்!" என்றான் புலிகேசி.

அத்தகைய கடுமையான ஆக்ஞைக்கு உள்ளான மனிதன் நமக்கு ஏற்கெனவே தெரிந்தவன்தான். ஆனால் இப்போது அவன் பழைய முரட்டுப் பட்டிக் காட்டுக் குண்டோதரனாயில்லை. நாகரிகமான உடையணிந்திருந்தான். புலிகேசியின் ஆக்ஞையினால் அவன் அதிக மனக்கலக்கத்துக்கு உள்ளானவனாகத் தோன்றவில்லை!

(தொடரும்)

# தெய்வ மணங்கமழும் திருத்தணியில் முருகனடியார்களுக்கு கிருத்திகை திருநாளன்று அன்னதானத் தொண்டில் ஈடுபட வாய்ப்பு!

பேரன்புடையீர்! வணக்கம். ஸ்ரீ முருகப்பெருமான் தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம்.

● முருகன், அழகன், கந்தன், கார்த்திகேயன் என்று மனமுருகி அழைப்பவர் முன்னால் ஓடிவந்து நிற்பவன் தமிழ்க்கடவுளாம் முருகப் பெருமான். அத்தகைய ஆறுமுகப்பெருமானின் ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருவருள் நிறைந்த திருத்தணிகை மலை. ஸ்ரீ வள்ளி தெய்வானை சமேதராய் அமர்ந்து அருளாட்சி செய்யும் திருத்தலத்தில் திருத்தணி மலைமீதில், வரம் வேண்டிவரும் பக்தர்களுக்கு, தெய்வப்பிரசாதமாக அன்னதானம் "ஆன்மீக அன்னதான அறக்கட்டளை" என்ற தனி அமைப்பின் மூலம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அன்னதான அரும்பெரும்பணியில் ஆன்மீக அன்பர்களும், முருகப்பெருமான் பக்தர்களும் பங்கேற்று மாதாமாதம் சிறப்புமிகு அன்னதான திருப்பணி திருத்தணியில் தெய்வீகப்பணியாக நடத்திட உதவுமாறு அன்புகூர்ந்து வேண்டுகிறோம். சிறப்புமிகு சிங்கார மலை 2000 ஆண்டுகளுக்கு முன்பு நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படை முதல் குமரகுருபரர், கச்சியப்ப முனிவர், கச்சியப்ப சிவாச்சாரியார், அருணகிரிநாதர், வள்ளலார், பாம்பன் சுவாமிகள், ஆகியோர் பாடிய அருட்பாடலின் சிறப்பு பெற்ற மலை திருத்தணிகை மலை. அத்தகைய திருத்தணியில் அன்னதானம் செய்வதன் மூலம் மனை நிறைய செல்வமும், மனம் நிறைய மகிழ்ச்சியும், வேண்டுதல்கள் நிறைவேறி, பிள்ளை வரமும், கல்வியில் உயர்வும் உங்கள் வாழ்வில் என்றும் நிலைத்திட, திருத்தணி முருகப்பெருமானை வேண்டுகிறோம்.

தாங்கள் எதை நினைத்து அன்னதானம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதை தெரிவித்தால் அதன்படி நாங்கள் கிருத்திகை அன்று உங்களுக்காக பூஜை, அர்ச்சனைகள், அன்னதானம் செய்து பிரசாதத்துடன் திருத்தணி ஸ்ரீ முருகன் படத்தையும் தங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.

✧ பிறந்தநாள் ✧ திருமணநாள் ✧ முன்னோர்கள் திதி நாள் ✧ வாழ்க்கையில் உயர்வு ✧ தொழிலில் முன்னேற்றம் பெற ✧ நிரந்தர வேலை பெற ✧ கல்யாண பாக்கியம் பெற, நல்ல வரன் அமைய ✧ புத்திர/பிள்ளை பாக்கியம் பெற ✧ கணவன் - மனைவி இடையே ஒற்றுமை நிலவ ✧ கஷ்டங்களும், கடன்களும் எதிர்ப்பு இடையூறுகளும் நீங்க ✧ புதிய முயற்சிகளில் முன்னேற்றமும் வெற்றியும் உண்டாக ✧ புதிதாக தொழில் தொடங்க ✧ புதிதாக வீடு/ மனை பெற ✧ வாகன யோகம் பெற ✧ நல்ல சிந்தனை பெற ✧ சிந்தனை வளம் பெருக ✧ உடல் ஆரோக்கியம் பெற ✧ நீண்ட ஆயுள் பெற ✧ தெய்வசக்தியுடன் திகழ ✧ குடும்ப ஒற்றுமை பெற ✧ உலக ஒற்றுமை பெற ✧ சமுதாய ஒற்றுமை பெற ✧ தேச ஒற்றுமைபெற ✧ எல்லா உயிர்களும் இன்புற்று வாழவும்.

- தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.
- ரூ.500/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.1000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.500, ரூ.1000, ரூ.5000 அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு பிள்ளையார்பட்டியில் பூஜிக்கப்பட்ட வெள்ளெருக்கு வேர் விநாயகரும், திருத்தணி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி வண்ணப்படமும், சிறிய அளவில் கந்தர் சஷ்டி கவசம் புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

★ ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்கள் சார்பாக, ஒவ்வொரு மாதமும் கிருத்திகை அன்று திருத்தணியில் அன்னதானம் செய்து தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்கு பிரசாதமும் 'ஆன்மீகம்' மாத இதழும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் தாங்கள் விரும்பும்போது சந்ததியினர் முகவரிக்கும் மாற்றம் செய்து தருகிறோம். ஆன்மீக அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் புனிதம் பெறவேண்டும் என்ற இறைசிந்தனையோடு ரூ.5000 செலுத்துபவர்களுக்கு 1024 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள அருணகிரிநாதர் அருளிச்செய்த "திருப்புகழ்" நூலை அனுப்பி வைக்கிறோம்.

● நன்கொடை அனுப்பும் முருகபக்தர்கள் (Aanmeeka Annadhana Charitable Trust, Chennai - 4) என்ற பெயரில் Cheque /D.D/ M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அன்னதான திருப்பணிகளை நலம்தரும் இறைபணி சேவைகளாக 'ஆன்மீக அன்னதான அறக்கட்டளை' ஆற்றிவர தங்களது ஒத்துழைப்பை என்றும் பேரன்புடன் வேண்டுகிறோம்.



நன்கொடைகளுக்கு 80 G பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.

*Cheque / D.D / M.O* அனுப்ப வேண்டிய முகவரி :

## ஆன்மீக அன்னதான அறக்கட்டளை

## AANMEEKA ANNADHANA CHARITABLE TRUST (Regd.)

68, Nadu Street, (Opp. Sri Kapaleeswarar Temple) Mylapore, Chennai - 600 004.

Tel : 4959302 Fax : (044) 4616311 E - Mail: sivasiva@vsnl.net

# ஸ்பெஷல்!



**ரஜினிகாந்த் :** இமயமலை அடிவார குகைகளில் உள்ள சில சித்தர்கள் தந்த அரிய பச்சிலைகளைச் சாப்பிடுவதால், 'பாபா' பசி இல்லாமல் பிசியா இருக்கார்.



**வைகோ :** நேற்றும் சரி, இன்றும் சரி, நாளையும் சரி, பிடித்த ஐட்டம் 'புலிப்பால்' காபிதான். எந்தவித மாற்றமும் இல்லை.



**கமல்ஹாசன் :** பிடித்ததைச் சாப்பிட்டு, நான் விடும் ஏப்பம், கலா ரசிகனின் சொப்ன சுகம். பாமர உதிரம் சொட்டும் நஞ்சு தடவிய அகோர மலர்களுக்கும் பசிதான். உணவு செரித்தாலும், உணர்வுகள் எதையோ தேடி...!



**கி. வீரமணி :** அம்மா எதைக் கொடுத்தாலும் கண்ணை மூடிக்கிட்டுச் சாப்பிடுவேன். 'தேவாமிர்தமா' இருக்கும்.

கருத்து : லிடியோ இம்மானுவேல்
படம் : செல்வம்





**டாக்டர் ராமதாஸ் :** நல்ல 'கூட்டு' இருந்தாலே போதும். தனியாக உணவு என்று எதுவும் தேவையில்லை. 'கூட்டு' அடிக்கடி மாற்றிக் கொண்டே இருப்பது ரொம்ப முக்கியம்.

**ஜி.கே.வாசன், இளங்கோவன் :** உணவு எதுவா இருந்தாலும், இரண்டு பேரும் சேர்ந்து, ஒரே இலையில் சாப்பிடறதுதான் இப்ப முக்கியம். அதுவும், சோனியா முன்னிலையில்.



**திருநாவுக்கரசர் :** டில்லியோ, அறந்தாங்கியோ, அண்ணா நகரோ மூன்று வேளையும் சப்பாத்திதான் செய்யணும்னு ஆர்டரே போட்டாச்சு.


**கலைஞர் :** கொஞ்ச நாளாகவே கஞ்சி ரொம்ப பிடிக்குது. தொண்டர்களுக்கும்தான்.

**ஜெயலலிதா :** அறுசுவை விருந்தானாலும் ஹைதராபாத் திராட்சை ஜூஸ் இருந்தால்தான் திருப்தி.





# ராக்கி காப்பாற்றுமா?



**ம**த்தியிலுள்ள மராத்திய மந்திரிகளுக்கு மந்த காலம் போலும்; ராம் நாயக்கை பெட்ரோல் பம்ப் ஊழல் வாட்டியது, மிஸ்டர் க்ளீனாக இருந்த சுரேஷ் பிரபுவிடமிருந்து 'பவரை' பிடுங்கிவிட்டார்கள். பார்த்தார் பத்திரிகையாளர் ஷிவானி பட்நகர் கொலை வழக்கில் மாட்டிக் கொண்டிருக்கும் பிரமோத் மகாஜன்; அரசியலைப் பொறுத்தவரை சுத்தம் சோறு போடாது; சத்தம் தான் சோறு போடும் என்று சப்திக்க துவங்கிவிட்டார். பிரபல மும்பை தினசரிக்குப் பேட்டி கொடுக்கையில், "அழகிய, கவர்ச்சிகரமான பெண்கள் என்னை ஈர்க்கவில்லை என்றெல்லாம் நான் பொய் சொல்ல மாட்டேன்; ஆனால் என் எல்லைகள் எனக்குத் தெரியும். ஷிவானி விஷயத்தில் என் மனசாட்சி 'சுத்தம்' ஆக இருக்கிறது; ஆனால் நானும் சட்டத்துக்குக் கட்டுப்பட்டவன்; நான் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டால் தண்டனை ஏற்கத் தயார்" என்றெல்லாம் பேசியிருக்கிறாரே? மிஸஸ் ஷர்மா ஏற்கெனவே டி.என்.ஏ. டெஸ்ட் அது இது வென்று கலாட்டா செய்யும்போது, இப்படி எல்லாம் இவர் வாயை விடலாமா?

**வா**யைக் கட்டத் தெரியாமல் அவதியில் மாட்டிக் கொண்டது மைசூர் 'ஜூ'வைச் சார்ந்த மான் ஒன்று. வேதனையில் வாடிக் கொண்டிருந்த அதற்கு என்ன நோய் என்றே டாக்டர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை; அது மரித்தபின் தான், போஸ்ட் மார்ட்டம் செய்ததில், வயிற்றில் சிக்கியது மூன்று கிலோ ப்ளாஸ்டிக்! இனி மிருககாட்சி சாலைக்குள், ப்ளாஸ்டிக் எந்த ரூபத்திலும் நுழையக் கூடாது என்று தடை விதித்து விட்டார்கள். பாவம், மற்றவர்களுக்கு நல்லது செய்ய, தன் உயிரையே விட்டு விட்டதே இந்த வாயில்லா ஜீவன்!

**"அழகிய, கவர்ச்சிகரமான பெண்கள் என்னை ஈர்க்கவில்லை என்றெல்லாம் நான் பொய் சொல்ல மாட்டேன்."**

**வா**யில்லா ஜீவன் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தோம்; ஆனால் நம்மை வாயடைக்க வைத்து விட்டாளே இந்தப் பெண்? போரிவிலி ட்ரெயினில் பாலியல் பலாத்காரத்துக்கு ஆளான அந்த பன்னிரண்டு வயது சிறுமியைத்தான் சொல்கிறோம்! செவிட்டூமை என்றார்கள். மூளை

சரியில்லை என்றார்கள்; பார்த்தால்... அந்தப் பெண் பளிச்சென்று பேசுகிறது; இருப்பிடம், உறவினர்கள் பற்றி சரியாக தகவல் தந்திருக்கிறது; போலீசார் தேடியதில், ரயிலையோ மும்பையையோ பற்றி ஒன்றுமே தெரியாத, கல்யாணி லிருந்து சற்று தொலைவிலிருந்த ஒரு பழங்குடி இனத்தைச் சார்ந்த, மூன்றாம் கிளாஸ் படித்த பெண் இவள் என்பது துலங்கியது. அடிக்கடி தொலைந்து போய் திரும்பியவள்; பெற்றோரற்றவள்; அத்தையும் சகோதரிகளும் உண்டு! உறவினர் அனுதாபிகள்; ஆனால் இவள் சிகிச்சைக்குப் பணமில்லாதவர்கள்; மீண்டும் ஆசிரமமோ விடுதியோதான்... முடிச்சுகள் அவிழுமென்று பார்த்தால் மேலும் மேலும் முடிச்சுப் போடுகிறார்களே?

(மூன்று) முடிச்சுப் போடும் வைபவத்தை "இது போல் கொண்டாடியவர்கள் இல்லை" என்ற விதத்தில் நடத்தப் போகிறாராமே, மும்பையின் பிரபல வைர வியாபாரியும் ஃபிலிம் ஃபைனான்சியருமான பரத்ஷா! லேட்டாக சவால் விட்டாலும், 'அம்மா'வுக்கு லேட்டஸ்டாக சவால் விட்டிருக்கிறாரே இந்த 'பா. ஷா?' அவரது அண்ணன் மகள் ப்ரீத்தியும், மகன் விஷால் ஷாவும் முறையே விஷால் மேத்தாவையும் ஷ்ரேயாவையும் ஆண்ட்வர்ப்பில் மணமுடிக்க இருக்கிறார்கள். மெஹந்தி இரவு, டாண்டியா நைட், ஃபாஷன் ஷோ நைட், ஃபிலிம் ஸ்டார் நைட், இசை விருந்து, நாட்டிய விருந்து என்று தொடர்ச்சியாக பத்து நாள் கொண்டாட்டமாம். இதற்கென பாலிவுட் நட்சத்திரங்கள், ஸூப்பர் மாடல்கள், டிரஸ் டிசைனர்கள், கேளிக்கை ஆட்டக்காரர்களை பெல்ஜியம் அழைத்துச் செல்கிறார் 'ஷா'. ஹூம்... அண்டர் வேர்ல்டுடன் தொடர்பு உள்ளதாக இவர் மீது இங்கு வழக்கு நடந்து கொண்டே இருக்கிறது... வெகு நாட்களாக... சுப்ரீம் கோர்ட் தயை காட்டினால்தான் இவரால் பெல்ஜியத்தை நினைத்துப் பார்க்கவே முடியும். எத்தனை நம்பிக்கையுடன் திட்டமிட்டிருக்கிறார் பாருங்கள் கொண்டாட்டங்களை!





## மும்பை மசாலா

கொண்டாட்டங்களெல்லாமே இப்போது புதிய பரிணாமங்களை எடுத்திருக்கின்றன. ரக்ஷாபந்தனென்றால், சகோதரிகள் தங்களைக் காக்கும் பொருட்டு சொந்த சகோதரர்களுக்கு ரட்சை கட்டுவார்கள், நாளடைவில் உளமுற்றவர்கள், பின் தங்கியவர்கள், சமூகத்தில் கீழ் நிலையில் உள்ளோர் தம்மைக் காத்து ரட்சிக்கும் பொருட்டு அரசியல் தலைவர்களுக்கோ, நட்சத்திரங்களுக்கோ, பெரிய மனிதர்களுக்கோ கயிறு கட்டுவது சகஜமாயிற்று; அப்புறம் சமூகத்தில் அமைதி காக்க, சமூக சேவகிகளெல்லாம் ஜவான்களுக்கும் கைதிகளுக்கும் கட்டினார்கள்! இப்போது என்னவென்றால்... இந்தக் குப்பை கூளத்திலிருந்து எங்களைக் காப்பாற்றி ஆரோக்ய வாழ்வு அளிக்க வேண்டுமென்று, முனிசிபாலிடியில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மும்பை பெண்கள் 'ராக்கி' கட்டியிருக்கிறார்கள்! இந்தப் புதிய உறவால், மும்பைக்கும் குப்பைக்குமுள்ள உறவு முறியுமா?

– ஜெயஸ்ரீ ராஜ்

# “வலிக்குதா அம்மா?”



வீடு வந்து சேரும் வரைக்கும் அம்மாவிடம் கேட்டுக் கொண்டே வந்தேன். துருவித் துருவி வாயைக் கிளறி அவள் வாயிலிருந்து வார்த்தை பிடுங்க அவளை இம்சை செய்து கொண்டுதான் வந்தேன்.

எனது இத்தனை தூர வற்புறுத்தலுக்கும் தொண தொணப்புக்கும் அவள் வெறுமனே இடம் வலமாய்த் தலையசைத்துக் கொண்டுதான் வந்தாளே தவிர, ‘உம்’ என்று வாய் திறந்து ஒரு சொல் உதிர்க்கவில்லை.

அழுத்தக்காரி... அழுத்தக்காரி... எத்தனை அழுத்தத்தை தன் இதழ்க்கடையில் முடிந்து கொண்டு இருக்கிறாள்... எனக்கு ஆச்சரியமும் கோபமும் ஒரு சேரப் பொங்கின.

அவள் வாய் திறந்து கேட்காவிட்டால் தான் என்ன...? முகம் தான் அகத்தை, அணு அணுவாய்க் கூறு பிரித்துக் காட்டும் கண்ணாடிக் குடுவை ஆயிற்றே... அவள் எதையோ நினைத்து உள்ளுக்குள் வெப்ப மேலீட்டால் புழுங்குகிறாள் என்பது எனக்குத் தெரியாமலா போய்விடும்...!

நாங்கள் மூவரும் கோயிலுக்குப் போகும்போது அவள் சந்தோஷமாகத் தானே வந்தாள். என்னோடும் என் மாமியாரோடும் குதூகலமாய் ஊர்க்கதை பேசிக் கொண்டு வந்தாள். வீட்டிலிருந்து கிளம்பி, மெயின் ரோடில் பஸ் பிடித்து, கோயில் வாசலில் இறங்கும் வரையிலும், பின் பிராகாரத்தைச் சுற்றி வருகையிலும் கூட ஏன், ஸ்வாமிக்கு நமஸ்காரம் செய்து விட்டுத் திரும்பிய போது கூட என்னைப் பார்த்து சிநேகிதமாகத் தானே புன்முறுவலைச் சிந்தினாள்.

**“எனது எந்தச் சொல் அவளைக் காயப்படுத்தியிருக்கும்?”**

பின் எப்போது அவள் உதடு

சுருக்கினாள்...? எப்போது அவள் முகம் பரங்கிக்காயாய் கனத்துப் போனது...?

இன்று மாலையின் நிகழ்வுகளை வரிசைக்கிரமமாய்ப் பின்னோக்கி அசை போட்டுக் கொண்டு வந்த எனக்கு, ஓர் இடத்தில் சிந்தனை தட்டி நின்றது.

**கோ**யிலினின்றும் வெளியே வந்து செருப்புப் பாதுகாவலனிடம், "மூன்று ஜோடிக்கு மூன்று ரூபாயா... போர்டில் ஜோடிக்கு ஐம்பது பைசா தானே போட்டிருக்கிறது. ஏய்யா இப்படிக் கொள்ளையடிக்கிறே?" என்று வயிறெரிந்து அவனுக்கு ஒரு பிடி சாபம் கொடுத்துவிட்டு பஸ்ஸு"க்காக நின்று கொண்டிருக்கிறோம். அந்த வழியில் திரும்பிப் போவதற்கு பஸ் கிடையாது என்கிற எண்ணம் கொஞ்சம் தாமதமாகத்தான் புத்தியில் உரைக்கிறது. அப்படியென்றால் அத்தனை தூரம் – வீடு வரை – இரண்டு கிழங்களையும் நடத்தியா அழைத்துச் செல்வது என்று நான் குழம்பி நிற்கிறேன். ஆட்டோக்காரர்கள் ஓரிருவர் எங்களை நோக்கி வந்து 'ஆட்டோ வேணுமா?' என்று கேட்டு விட்டு, என் மறுப்பான தலையசைப்பு கண்டு 'சாவு கிராக்கிங்க...' என்கிற ரீதியில் ஏதோவொரு தடிமனான வார்த்தைப் பிரயோகத்தை உதிர்த்து விட்டுச் செல்கிறார்கள்.



நந்தன்

எனக்குச் சங்கடம் மேலிடுகிறது. குமாஸ்தாவாகக் குப்பை கொட்டிக் கொண்டிருப்பவனின் மனைவிக்கெல்லாம் ஆட்டோ பயணம் என்பது கொஞ்சம் அகலக் கால். குறிப்பிட்டுச் சொன்னால் சிறிப் பாயும் ஆட்டோச் சப்தம் எட்ட நின்று ரசிக்க மட்டுமே முடிகின்ற கனி. ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்துக்கு, கூசாமல் இருபத்தைந்து ரூபாய் கேட்பார்கள். மூன்று நாளைக்கு சமையல் காய்கறி அம்பேலாகி விடும்.

நான் குழம்பித் தவித்து நின்ற வேளையில் தான் "ஒரே ஒரு ஸீட்... ஒரே ஒரு ஸீட்..." என்று கத்திக் கொண்டு அந்த ஷேர் ஆட்டோ என்னருகில் வந்து நின்றது. ஆரம்பத்தில் சிறிதே தயங்கினாலும் அடுத்த விநாடியே நான் தீர்மானமாய் முடிவெடுத்து என் மாமியாரை அந்த ஆட்டோவில் ஏற்றி, ஐந்து ரூபாயும் கொடுத்து அனுப்பி விடுகிறேன்.

"நாம ரெண்டு பேரும் நடந்தே போய்டலாம்மா..." என்றபடி நான் இரண்டு தப்படி எடுத்து வைத்தபோது கூட அம்மா சாதாரணமாக இருந்ததாகத்தான் நினைவு. அப்போது கூட அவள் என்னோடு இரண்டொரு வார்த்தை பேசிக் கொண்டு வந்ததாகத்தான் தோன்றுகிறது.

பின் எப்போது அவள் மௌனியானாள்? எப்போது தன் இயல்பு மறந்து

இறுக்கம் கொள்ள ஆரம்பித்தாள்?

**வீ**ட்டுக்கு வந்து மாமியாருக்கும் அம்மாவுக்கும் காபி கலந்து கொடுத்துக் கொண்டிருந்த எனக்கு மேனி வியர்த்தது. ஒரு வேளை உள்ளுக்குள் ஏற்பட்ட புழுக்கத்தின் பாதிப்பாக இருக்குமோ!

"சாரு... எனக்குத் தலையை வலிக்கறதுடி. நான் சித்தே உள்ள படுத்துக்கட்டுமா?" என்றபடி அம்மா உள்கட்டுக் கதவைத் திறக்கிறாள்.

"அம்மா... காபி குடிச்சுட்டுப் படுத்துக்கோயேன்" என்ற என் குரல் கூட அவள் காதில் விழுந்ததா தெரியவில்லை. அவள் உள்கட்டுக் கதவின் தாழ்ப்பாள் திறப்பதும், கதவை மூடுவதும், காலைக் குறுக்கிக் கொண்டு தரையில் படுத்துக் கொள்வதுமான சப்தங்கள் மாத்திரமே எனக்குக் கேட்டன.

எனக்குச் சங்கடம் மேலிட்டது.

கோயிலிலிருந்து நடந்து வரும்போது நான் அம்மாவிடம் என் செயலுக்கான காரணங்களைச் சொல்லிக் கொண்டு தான் வந்தேன். என் செயலுக்கான தன்னிலை விளக்கத்தை அம்மாவிடம் நேர்மையாக எடுத்து வைத்து விட்டதாகத்தான் எனக்குத் தோன்றுகிறது.

**அ**ம்மா கிராமத்துப் பெண்மணி. காடு, கழனி என்று சிறு வயது முதலே செருப்பில்லாமல் வளைய வந்தவள். கடலை பிடுங்கச் சென்றால் சூரியன் அஸ்தமிக்கும் வரையில் இடுப்பு நிமிராமல் பிடுங்குவாள். கரம்பக் கட்டியும் நெருஞ்சி முள்ளும் அவள் பாதத்துக்கு ஒன்றாய்த் தான் தோன்றுமோ என்று கூட எனக்கொரு எண்ணமுண்டு.

தத்திக் கொத்தி பையன்களைப் படிக்க வைத்து வெளியூருக்கு அனுப்பி, பெண்டு பிள்ளைகளை நகரங்களில் கட்டிக் கொடுத்த பின்புதான், அவர்களைப் பார்க்கும் சாக்கில் அவள் நகரம் பார்க்கிறாள். நகரத்து இரைச்சலும், புழுதியும் அவளுக்குப் புது அனுபவம். மற்றபடி அனுதினமும் குறித்த நேரத்திற்கு அரை மணி நேரமாவது பிந்தி வரும் ஒரே ஒரு பேருந்து தான் அவள் கிராமத்தில் விஞ்ஞானம் வளர்ந்து விட்டதற்கான ஆதாரம். அந்தப் பேருந்தை நம்பினால், 'அவசரத்துக்கு அசலூர்ப்பயணம் வாய்க்காது' என்று சொல்லி அந்தக் கிராமத்து ஜனங்கள் அத்தனையும் நடந்து நடந்தே பழக்கப்பட்ட

ஜென்மங்கள்.

இப்படிப்பட்டவளுக்கு ஒன்றரைக் கிலோ மீட்டர் நடையா ஒரு பெரிய விஷயம்... என்று நான் நினைத்து விட்டேன்.

என் மாமியாரின் கதையே வேறு. அவள் நகரத்துச் சிக்காளி. ஆஸ்துமா, இருமல், ரத்த அழுத்தம் என்று அத்தனை விஞ்ஞான வியாதிகளையும் தன்னுள்ளே கொண்டவள். அவள் வியாதிக்காரி என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். என் கணவர், வேண்டுமானால் சாதாரண குமாஸ்தாவாயிருக்கலாம். இவரது அண்ணன் தம்பிகளெல்லாம் ஓரளவு நல்ல நிலையில் இருப்பவர்கள் தான். அம்மாவை ஆட்டோவில் அனுப்பினால் கூட அதிர்வு அதிகமாயிருக்கும் என்று எண்ணி அவளை காரில் ஏற்றி அனுப்பத் தயாராயிருப்பவர்கள்.



"இரண்டு தலைவர்களும் சந்திச்சப்ப தோள் துண்டை இடுப்பிலே கட்டிக்கிட்டுப் பேசுனாங்களா... ஏன்?"

"மரியாதை நிமித்தம் நடந்த சந்திப்பாம்!"

— கே. நேசினி

அப்படிப்பட்டவளை எப்படி நடத்தியே அழைத்துச் செல்வது...? இந்த எனது சிந்தனை பிசகா...?

பிசகானதுதான் போலிருக்கிறது. அதுவும் இத்தனை விலாவாரியாய் அம்மாவிடம் எடுத்துச் சொன்னது அதைவிடப் பிசகு போலிருக்கிறது. செய்து விட்ட செயல் எத்தனை அறிவார்த்தமானதாய் இருந்தாலும் அதில் உணர்வு ரீதியான ஒரு விஷயம் ஒளிந்து கொண்டிருக்கிறது போலிருக்கிறது. எனது அறிவார்த்தமான ஒப்பீடு உணர்வு ரீதியிலான மெல்லிழையைத் தவற விட்டிருக்கிறது.

நான் பேசிக் கொண்டே வந்த போது உச்சுக் கொட்டிக் கொண்டேவந்தவள் ஒரு கணத்தில் தன் உச்சுக் கொட்டலை நிறுத்தியிருக்கிறாள். அவள் தன் தலையசைப்பை நிறுத்தி விட்ட பின்பும் நான் என் செயலுக்கான நியாயத்தை விலாவாரியாய் விளக்கிக் கொண்டே வந்திருக்கிறேன்.

அசடு... அசடு... பரம அசடு நான். எதிரானியின் மனவோட்டம் புரியாமல் ஏதேதோ பினாத்திக் கொண்டு வந்திருக்கிறேன்.

நான் பாதி பேசிக் கொண்டு வந்த போதே அவள் மனசு மூடிக் கொண்டு விட்டிருக்கிறது. நேரே பார்த்து நடந்து வந்தவள் ஏதோ பாரம் அழுத்த, தலையைக் குனிந்து கொண்டே வந்திருக்கிறாள்.

எனது எந்தச் சொல் அவளைக் காயப் படுத்தியிருக்கும்?

யோசித்து யோசித்து நான் செயலிழந்து போனேன். அம்மாவிடம் கேட்க, அவள் இதழ்களை இறுக மூடிக் கொண்டு இயந்திரமாய் நடந்து கொண்டிருந்தாள். கேட்டுக் கேட்டு பதில் கிடைக்காத எரிச்சலில், "என்ன இழவை நினைக்கறே... சொல்லித் தொலையேன்..." என்று நான் குரூரமாய் வார்த்தைகளைக் கொட்ட, அம்மாவின் முகம் கனத்துப் போயிருக்கிறது.

**கா**பி கலந்து மாமியாருக்குக் கொடுத்து விட்டு, இன்னொரு தம்ளரை எடுத்துக் கொண்டு அம்மா படுத்திருந்த அறைக்குப் போனேன். அம்மா சிறுத்துப் போன கோழிக் குஞ்சாய் உடல் குறுக்கிப் படுத்திருந்தாள்.

அவள் படுத்துக் கொண்டிருக்கிறாளா அல்லது ஆழ்ந்து உறங்குகிறாளா என்று எனக்குக் குழப்பமாயிருந்தது. அவள் நெற்றியில் கை வைத்துப் பார்த்தேன். மெலிதாகச் சுட்டது மாதிரி தோன்றியது.

'அம்மா'.. என்று அழைத்து அவளை எழுப்பலாமா என்று யோசித்தேன். பின்பு, வேண்டாமென்று அந்த எண்ணத்தைப் புறந்தள்ளினேன்.

ஆழ்ந்து கண் மூடிப்படுத்திருக்கும் அவள் முகத்தையே சில நிமிஷம் இமைக்காது நோக்கினேன். என்னிடம் அவள் ஏதாவது பேச மாட்டாளா என்று மனசு அலமலந்தது.

தன் பெண்ணின் வீட்டிலேயே தான் தனியாளாகிப் போனதான ஏக்கம் அவளது சிவந்த முகத்தில் விரவிக் கிடந்தது போல் எனக்குத் தோன்றியது.

அந்த எண்ணம் என் நரம்புக் குழலிடுக்குகளில் மெல்லிசான ஒரு வலியைப் பரப்ப, நான் கண்ணீர்த் துளிக்க அழ ஆரம்பித்தேன்.

# சுற்றுப்புறச் சூழலுக்கு ஒரு சுப்ரியா சாஹூ



நெகடிவ் செய்திகளையே எழுதி மக்களிடையே சோர்வைத் தான் மீடியா வளர்க்கிறது என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. மாறாக, மாவட்டங்களில் பாஸிட்டிவாக நடப்பனவற்றை அந்தந்த மாவட்ட ஆட்சியரிடமே பேட்டி கண்டு வெளி யிடலாமே என்று புறப்பட்டோம்.

சூழல்நட்புக் கொண்ட சுற்றுலாப் பகுதியான நீலகிரியிலிருந்து இந்தத் தொடரைத் தொடங்குவோம்.

**நீலகிரி மாவட்ட கலெக்டர் சுப்ரியா சாஹூ ஒரு குட்டிக் கதை சொன்னார் :**

ஒரு குழந்தைக்கு வைத்திருந்த பாலை, அங்கே வந்த பூனை குடித்து விட்டது. குழந்தை அழவே, பூனை பரிதாபப்பட்டு, பசுவிடம் போய், குழந்தைக்குப் பால் தருமாறு கேட்டது. புல் ஏதும் இல்லாமல் பூமி வறண்டு கிடப்பதால் பால் தர இயலாது; புல் தந்தால் பால் தருகிறேன் என்றது பசு. வறண்ட புற்களிடம் கெஞ்சியது பூனை. மழை இல்லாததால் செழித்து வளர முடியவில்லை; மழை பொழிய மரங்களிடம் சொல் என்றன புற்கள். 'இங்கே நாங்கள் மூன்றே மரங்கள்தான். நாங்கள் என்ன செய்ய முடியும்?' என்ற மரங்கள், மேகங்களிடம் கேட்கச் சொல்லின. பூமியில் மரங்கள் பெரும்பாலும் அழிக்கப்பட்டு வருவதால், மழை பெய்ய இயலாத சூழ்நிலையை மேகங்கள்

• பி.ஜே. கிருஷ்ணன் • எச்.எம்.ராஜு

**சுற்றுச் சூழல் பாதுகாக்கப்பட்டால், வளமை தானாக வரும்.**






வர்ணித்தன. பார்த்தது பூனை. நேராகக் கடவுளிடம் முறையிட்டது. மரங்களை வெட்ட மாட்டோம் என்று பூனை உறுதிமொழி தந்தால், மழை பெய்ய வைக்கிறேன் என்று கடவுள் சொல்ல, பூனையும் உறுதிமொழி கொடுத்தது. மழை பெய்தது. புல்பூண்டுகள் முளைத்தன. பசுவுக்குப் புல்லும், குழந்தைக்குப் பாலும் கிடைத்தன. இதை இளைய தலைமுறை உணர வேண்டும். சுற்றுச் சூழல் பாதுகாக்கப்பட்டால், வளமை தானாக வரும்.

**மக்களைச் சந்தித்து...**

இதுதான் சுப்ரியா சாஹூவின் ஸ்டைல். களத்தில் தாமே இறங்குகிறார். காரியத்தைச் சாதித்துக் கொண்டு விடுகிறார். பிளாஸ்டிக் இல்லா நீலகிரி மாவட்டம் சாத்தியமாயிற்று என்றால் இவரது உழைப்பும், உத்தியும்தான் காரணம். மக்களையும் தம்மோடு இணைத்துக் கொண்டு பிளாஸ்டிக் ஒழிப்பு முனைப்பு இயக்கம் நடத்தி, அரசு ஒதுக்கீடு செய்த தனி நிதியைப் பயன்படுத்தி, பல்வேறு விழிப்புணர்வுப் பணிகளை மேற்கொண்டவர் இவர். "அனைத்து வகை பிளாஸ்டிக்குகளால் விலங்கினங்களுக்கு ஆபத்தும், உதகை ஏரி மாசுபடுவதும் கண்டு, பிளாஸ்டிக்கைத் தடை செய்தோம். பள்ளி கல்லூரி மாணவ மாணவியர், பொது மக்கள், தொழிலதிபர்கள், மீடியா என்று எல்லோரையும் அழைத்து, எடுத்துச் சொல்லி, இயற்கை வளத்தைப் பாதுகாப்பது குறித்து, தீவிரமாகப் பிரசார இயக்கம் நடத்தினோம். வெற்றி கிடைத்தது."




மாவட்டத்தில் இரண்டு நகராட்சிகள், 13 பேரூராட்சிகள், 35 ஊராட்சிகள் என்று அனைத்திலும் பிளாஸ்டிக் தடை செய்யப்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில் இருந்த எதிர்ப்பு அப்படியே மறைந்தது. மக்களே நிர்வாகத்துடன் கைகோத்துச் செயல்பட்டனர். 'பிளாஸ்டிக் இல்லா நீலகிரிக்கு உங்களை வரவேற்கிறோம்' என்று போர்டுகள் இப்போது பயணிகளை எங்கெங்கும் வரவேற்கின்றன. இந்தியா முழுக்க இப்போது நீலகிரிதான் முன் மாதிரி மாவட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**கின்னஸ் சாதனை :**

கனடாவில் ஆல்பெர்ட்டா நகரில், 24 மணி நேரத்தில் 34,000 நாற்றுக்கள் நட்டதாக ஒரு கின்னஸ் சாதனை இருக்கிறது. அதை முறியடிக்க, மாணவர்கள், போலீஸ், இராணுவம், பழங்குடி இளைஞர்கள் என்று 300 பேரைத் திரட்டினார் சுப்ரியா. மழையோ கொட்டு கொட்டென்று கொட்டியது. குளிர் கைகால்களைத் தாளம் போட வைத்தது. இரவு பகலாக, 24 மணி நேரத்தில் 42,182 சோலைவன நாற்றுக்கள் நட்டு, இப்போது கின்னஸ் சாதனைச் சான்றிதழுக்காகக் காத்திருக்கிறார் சுப்ரியா!



• பசுமை விருது பெறுகிறார்

### மருத்துவக் கழிவுகள்...

நீலகிரியில் 63 நர்சிங் ஹோம்கள். இவை வெளியேற்றும் மருத்துவக் கழிவுகளைத் தினசரி அகற்ற, இரண்டு நவீன வேன்களை வாங்கி, உள்ளூர் டாக்டர்கள் அத்தனை பேரின் ஒத்துழைப்புடன், சுற்றுலா அமைச்சர் மில்லர் கையால் தொடங்கி வைத்து விட்டார். இதிலும் நீலகிரிதான் முதல் மாவட்டம்.



### மழைநீர் சேமிப்பு?

"யெஸ், பண்ணிவிட்டோமே!" என்கிறார் சுப்ரியா. "ரொம்ப சீப், ரொம்ப சிம்பிள்" என்கிறார். நகரத்தில் மட்டுமல்லாமல், கிராமப்புறப் பகுதிகளில் பாசனத்துக்கான நீரைச் சேமிப்பதிலும் அக்கறை காட்டியிருக்கிறார். தம்முடைய அலுவலகக் கட்டடத்திலேயே மழை நீர் சேமிப்பு வசதி செய்திருக்கிறார். (துறைச் செயலர் சாந்தா ஷீலா நாயரின் பாராட்டுக் கடிதம் பெற்றதில் வியப்பே இல்லை!)

### மகளிர் சுய உதவி + வெளியுதவி :

ரூரல் டெவலப்மென்ட், தாட்கோ, ஹார்ட்டிகல்சர், ரெவின்யூ, ஆவின், ஆதி திராவிடர்/பழங்குடியினர் நலவாழ்வு என்று எல்லாத் துறைகளும் ஒன்றிணைந்து சுமார் 2000 சுய உதவிக்குழுக்களுக்குக் கைகொடுத்திருக்கின்றன. "பள்ளிக் கட்டடங்கள், தொகுப்பு வீடுகள், ஆங்கன்வாடி மையங்கள், மதிய உணவுக் கூடங்கள், சமூக நலக் கூடங்கள், சாலைகள், பாலங்கள் எல்லாமே இந்த மகளிர் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதில் ஊழல் இல்லை என்பதோடு வேலைகளும் தரமாக இருக்கின்றன. உள்ளூர் மக்களையும் உட்படுத்தியதில், அவர்களும் ஆர்வத்தோடு பங்கு கொண்டார்கள். உதவித் தொகை இந்த சுய உதவிக் குழுக்களுக்கு தாட்கோ நூறு சதவிகிதம் வழங்கியது இந்த மாவட்டத்தில் தான். வங்கிகளும் இதைக் கண்டு நிதியுதவி செய்தன. கடனுதவிகளைத் திரும்ப அடைப்பதில் 90 முதல் 100 சதவிகிதம் என்று ஒரு சாதனை செய்திருக்கிறார்கள் இவர்கள். மகளிர் சோலைவனத் திட்டத்துக்காக நாற்றுக்கள் கொடுத்தோம். அரசுப் புறம்போக்கு நிலங்களை இவர்களுக்கு ஒதுக்கினோம். டூரிஸ்ட் வேன்கள், டாக்சிகள், ரோஜாப் பதியன்கள், மலை மூலிகைகள் என்று சுமார் 5 கோடி ரூபாய்களுக்கு மேல் இத்திட்டங்களுக்காகக் கொடுத்திருக்கிறோம்!" என்கிறார் கலெக்டர். (துறைச் செயலர் லட்சுமி பிராணேஷ் இதற்காக எழுதிய பாராட்டுக் கடிதத்தைப் பார்த்துவிட்டு, "கன்கிராட்ஸ்" சொன்னோம்.)

### பழங்குடியினர் :

"தமிழ்நாட்டிலேயே நீலகிரியில்தான் அதிகபட்ச மலைவாழ் பழங்குடியினர் இருக்கிறார்கள். ஆறுவகை பூர்வ குடியினர். வீடுகள், சாலைகள், குடிநீர், மின்சாரம், கல்வி, பெண்களுக்கான பொருளாதார உதவி, நில உரிமை என்று முழு முன்னேற்றத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம்" என்கிறார் இத்தோடு நிற்கவில்லை. விண்




ணப்பப் படிவம் அச்சிட்டு, ஒரு தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் அவற்றைப் பூர்த்தி செய்து, விசாரித்து, மீண்டும் சரிபார்த்து, கம்யூனிடி சர்டிஃபிகேட் தயாரித்து, அவரவர் குடியிருப்புகளுக்கே போய்க் கொடுத்திருக்கிறார்கள். "பழங்குடி மக்கள் எந்த அதிகாரியையும் போய்ப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. நயா பைசா செலவழிக்க வேண்டாம். ஊழல் என்ற பேச்சுக்கே இடமில்லை!"

'இது மிகப் பெரிய பணி. பாராட்டப்பட வேண்டியது' என்று அரசு முதன்மைச் செயலர் ஒரு பாராட்டுக் கடிதமே

எழுதியிருக்கிறார். (அது வெறும் கடிதமே அல்ல. பிரமாத சர்ட்டிஃபிகேட்!)

**ஊனமுற்றோர் நலனுக்கு :**

ஊனமுற்றோர் சர்வே நடத்தித் தகவல்கள் சேகரித்த முதல் மாவட்டம் நீலகிரி. "ஒரு பைசாகூட ஊதியம் பெறாமல் அரசு ஊழியர்கள் தங்கள் சமூகக் கடமையாக இதைச் செய்து முடித்தார்கள்" என்று மனதாரப் பாராட்டுகிறார் கலெக்டர். "அரசுத் திட்ட உதவிகள் பெற இவர்களுக்கு ஐ.டி. கார்டு, வருமான சர்ட்டிஃபிகேட், டாக்டர் சர்ட்டிஃபிகேட், கம்யூனிடி சர்ட்டிஃபிகேட், நேடிவிடி சர்ட்டிஃபிகேட் எல்லாம் வேண்டும். இவற்றை எல்லாம் ஊனமுற்ற ஒருவர் அலைந்து திரிந்து வாங்குவது சாதாரணமல்ல. எனவே எழுபதுக்கு மேற்பட்ட சிறப்பு முகாம்கள் நடத்தி, எல்லா




ஸ்பெஷலிஸ்ட்டுகளையும் முகாம்களுக்கே வரவழைத்து, அந்த இடத்திலேயே அத்தனை சான்றிதழ்களையும் வழங்கினோம்" என்கிறார். "நாங்கள் இதற்காகத் தயாரித்த திட்டம்தான் இப்போது இந்தியா முழுக்கக் கடைபிடிக்க முன்மாதிரியாகியிருக்கிறது. எங்கள் வழிமுறையைப் பாராட்டி, ஒரு கையேடு வெளியிட்டு, எல்லா மாவட்ட ஆட்சியருக்கும் அனுப்பியிருக்கிறது மத்திய அரசு." (பிடியுங்கள், இன்னொரு சபாஷ்!)

"சுற்றுப்புறச் சூழலில் மட்டும் நிறைய ஆர்வம் காண்பிக்கிறார் கலெக்டர்" என்று ஊட்டி சட்டமன்ற உறுப்பினர் எச்.எம். ராஜு சொன்னாலும், சுப்ரியாவை மனதாரப் பாராட்டுகிறார் மூத்த வழக்கறிஞரும், 'நீலகிரியைக் காப்போம் இயக்க'த் தலைவரும் ஆன பி.ஜே. கிருஷ்ணன் :

"இவர் இங்கே வந்து இரண்டு வருஷமாகிறது. சுற்றுச் சூழல் கோணத்தில் நீலகிரி முக்கிய நகரம். நீர் பிடிப்புப் பகுதி. 40 சதவிகித நீர் மின்சாரம் தயாரிக்கிறோம். ஈரோடு, கோவைக்கு இங்கிருந்து போகும் பவானி ஆறுதான் குடிநீர் தருகிறது. 10 லட்சம் ஏக்கர் பாசனத்துக்கும் பயன்படுகிறது. வேறு தொழிற்சாலைகள் வந்தால் மரம் வெட்ட வேண்டும். தண்ணீர் பாதிக்கப்படும். இது சூழல் நட்பு நகரம். மலைப் பிரதேசத்தை டெவலப் பண்ணுவதற்கும், மற்ற இடங்களை டெவலப் பண்ணுவதற்கும் வித்தியாசம் இருக்கு. பொதுவாக நிர்வாகம் இதை உணர்வ இல்லை. ஆனால் எங்கள் கலெக்டர் இதை நன்றாகப் புரிந்து கொண்டு, செயல்படுகிறார். உள்ளூர் நிர்வாகச் சட்டங்களை வைத்துக் கொண்டே பிளாஸ்டிக் பொருள் தடை கொண்டு வந்திருக்கிறார். மலைவாழ் மக்களின் தரத்தை உயர்த்தி, அவர்கள் கலாசாரம் கெடாமல், பொருளாதார ரீதியாக முன்னேறத் திட்டம்



* சிறந்த ஆட்சியர் விருது

வகுத்துச் செயல்படுத்தி வருகிறார். மக்களால் பெரிதும் நேசிக்கப்படுகிறார். எந்த வேலையிலும் மக்களையும் சேர்த்து அணைத்துக் கொண்டு போகிறார்."

பேட்டி, கட்டுரை : சாருகேசி

# வாழ்க வளமுடன்



கல்கி நிறுவன சேர்மன் வி. வைத்தியநாதன் - மீனாக்ஷி வைத்தியநாதன் தம்பதியின் பேத்தி,

## ஆர்த்தி

அசோக் - லக்ஷ்மி அசோக் தம்பதியின் செல்வ மகள் இவர்.

கானடா நாட்டைச் சேர்ந்த ஜான் பேஃபீல்ட் - மரியன் பேஃபீல்ட் தம்பதியின் அருமை மகன்

## மார்க் என்கிற சிவா

ஆர்த்தி - சிவா திருமணம் 21.8.2002 அன்று சென்னை, ராஜா முத்தையா அரங்கில், அழகும் அமைதியும் சூழ இனிதே நடந்தேறியது. முகூர்த்த நேரத்திலும் மாலை வரவேற்பிலும் கலைஞர்கள், சென்னைப் பிரமுகர்கள் கலந்து கொண்டு வாழ்த்தும் ஆசியும் கூறினர்.

மணமகன் வீட்டார் பலர், திருமண நிகழ்வுகளில் ஆவலுடன் பங்கேற்று மகிழ்ந்தனர்.

மாலை வரவேற்பில் சிக்கல் மாலா சந்திரசேகர் வழங்கிய இன்னிசையை அனைவரும் ரசித்து மகிழ்ந்தனர்.

*வாழ்க மணமக்கள்!*

# மீசை முளைத்த




"நதியரசே! கடலை நீதான் சென்று நிரப்புகிறாய் என்று மட்டும் நினைத்து விடாதே! அப்படித்தான் இந்த வையகத்தில் அரசு புரிவோர் நினைத்து விடுகிறார்கள். சமுத்திரத்து நீர், முகிலாக மாறியதால் நீ சந்தன வண்ண ஆறாக ஓடுகிறாய். ஆறு போல் தான் அரசு. ஜனசமுத்திரத்தின் படைப்பு. நிலை கெட்டு ஓடினால் அணை போட்டுத் தடுப்பர், நதியே உன்னை. நாடாளும் அரசுக்கும் அக்கதிதான்."

தாமும் ஒரு நாள் அரசு கட்டிலில் ஏறப் போகிறோம் என்று கற்பனை கூடச் செய்து பார்த்திருக்க முடியாத ஒரு கால கட்டத்தில், ஐம்பதாண்டுகளுக்கு முன்னால் கலைஞர் எழுதிய கவித்துவம் செறிந்த கற்பனை இது. 'மீசை முளைத்த வயதில்' என்கிற வைரமுத்து வழங்கிய கவர்ச்சித் தலைப்போடு வெளியாகியுள்ள நூலில் இடம் பெற்றுள்ள 'ஆறு' என்கிற தலைப்பிலான 'கவிதை'யில் வருகிற உருவகம் இது. 'கவிதை' என்று சொல்வதில் தவறில்லை. உரைநடை போல் அச்சிடாமல் மோனை ஒழுங்கோடு பிரித்து அச்சிட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.

சிறைக் கொட்டடிக்குள் இருந்து கொண்டு கலைஞர், பச்சைக்கிளி, விண்மீன், தளிர், மலை, வைகறை, கடல், காற்று, மலை, பிறை என்றெல்லாம் இயற்கையின் கூறுகளைச் சமுதாய நோக்கோடும் பார்த்து எழுதியுள்ள கவிதை வரிகள், ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகும் அதே இளமையோடு விளங்குவது கலைஞரின் ஆளுமைக்குச் சரியான அடையாளம்.

இரவு நங்கையைக் 'கறுப்புப் பெண்'ணாகப் பார்க்கும் கவிதையில் ஒரு நயம்.

*"உன் சகோதரன் சந்திரன்*
*வெண்துகில் ஒன்று கொடுத்தானே;*
*அதை யார் பிடுங்கிக் கொண்டது?*
*இயற்கையாண்டிதானே!*
*அப்பப்பா; அவன் ஒரு 'மாயக் கள்ளன்' தான்*
*உன் சேலையைத் திருடுவதிலே*
*அவனுக்கு ஒரு திருப்தி..."*

முழு நாத்திகராக இருந்த போதிலும் கவிதை என்று வந்துவிட்டால் கண்ணன் கை கொடுக்கிறானே!

**'மீசை முளைத்த வயதில்', கலைஞர் மு. கருணாநிதி, தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை - 4, விலை ரூ. 60/-**

— சுப்ர. பாலன்

காதில் விழுந்தவை

# பாதியில் நிற்கும் ஒப்பந்தங்கள்!



● கடந்த சில மாதங்களாகவே உயர்நீதிமன்றத்துக்கும் தமிழக அரசுக்கும் சுமுகமான உறவு இல்லையென சொல்கிறார்கள் கோட்டை அதிகாரிகள். "கே.ஏ.கிருஷ்ணசாமி, ஆலடி அருணா, பொன்னையன் போன்றோர் சட்டத்துறை பொறுப்பை வகித்தபோது உயர்நீதிமன்றத்தை எதற்கெல்லாம் கலந்தாலோசிப்பது என்பதைத் தெரிந்துகொண்டு, அதன்படி நடந்து, நல்ல உறவை வைத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் இப்போது இருக்கும் ஜெயக்குமார், அம்மாவின் பக்தரே தவிர சட்டத் துறையை வகிக்க பொருத்தமானவரல்ல" என்கிறார்கள் அதிகாரிகள்.

● தி.மு.க ஆட்சியில் ஒப்பந்தம் கொடுக்கப்பட்டு வேலை துவங்கிய காயிதே மில்லத் மணி மண்டபம், தமிழ் வளர்ச்சித் துறை அலுவலகம் ஆகியவை பாதியிலேயே நிற்கின்றன. இதற்குக் காரணம், தமிழக அரசு ஒப்பந்தக்காரர்களுக்கு, சொன்னபடி நிதி ரிலீஸ் செய்யாததுதானாம். "தமிழகம் முழுவதும் கிட்டத்தட்ட நூறு அரசு கட்டடங்கள் பணி முடியாத நிலையில் இது போல பாதியில் நிற்கிறதாம். சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்கள், 'மாமூலான கவனிப்பு உண்டு' என்று வாக்குறுதி கொடுத்த போதும் நிதி ரிலீஸ் செய்யப்படவில்லையாம். "அந்த ஒப்பந்தக்காரர்கள் அனைவரும் தி.மு.க.வினர். எனவே ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு, புது ஒப்பந்தம் விடலாமா?" என்று யோசிக்கிறோம்" என்கிறார் பொதுப்பணி அதிகாரி ஒருவர்.

— சஞ்சயன்

படம்: ராஜன்

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை P.R. ஜுவல்லரி

# P.R. JEWELLERY

**GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES**

**Old No. 102, New No. 138, USMAN ROAD,**

**T. NAGAR, CHENNAI - 600 017.**

**PH: 4344442., 4327764 TUESDAY HOLIDAY**

**(10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)**

**PROPRIETOR : P. RAVINDHIRAN**

எங்கு ஜோதிடம் பார்த்தாலும் P.R. ஜுவல்லரிக்கு வந்து ரூ. 400/-க்கு ராசிக்கல் மோதிரம் வாங்கி பயன்பெறுங்கள். கல் ஒரிஜினல் என முழு உத்திரவாதம் தருகிறோம். மொத்தம் 27 நட்சத்திரம் உள்ளன. 12 ராசிகள் உள்ளன. 9 ரத்தினங்கள் உள்ளன. நவரத்தின மோதிரம் அனைவரும் அணியலாம். 9 கிரகங்களின் பலனைத் தரும். 5 CENT வைரம் வைத்து (1பவுன்) 8 கிராம் தங்கத்தில் விலை ரூபாய் 8500/- ராசிக்கல் மோதிரங்கள் வெள்ளியில் அணிவது சிறந்தது. மேஷ ராசி, விருச்சிக ராசிக்காரர்கள் அணிய வேண்டியது பவழம். 2 CARAT பவழம் வைத்து வெள்ளி மோதிரம் விலை ரூபாய் 400/-. ரிஷபராசி, துலாம் ராசிக்காரர்கள் அணிய வேண்டியது வைரம். 5 CENT வைரம் வைத்து வெள்ளி மோதிரம் விலை ரூபாய் 2250/-. மிதுன ராசி, கன்னி ராசிக்காரர்கள் அணிய வேண்டியது மரகத பச்சை. 20 CENT மரகத பச்சை வைத்து வெள்ளி மோதிரம் விலை ரூபாய் 400/-. கடக ராசிக்காரர்கள் அணிய வேண்டியது முத்து. 2 CARAT முத்து வைத்து வெள்ளி மோதிரம் விலை ரூபாய் 400/-. சிம்மராசிக்காரர்கள் அணிய வேண்டியது மாணிக்கம். 20 CENT மாணிக்கம் வைத்து வெள்ளி மோதிரம் விலை ரூபாய் 400/-. மகர ராசி, கும்பராசிக்காரர்கள் அணிய வேண்டியது நீலம். 20 CENT நீலம் வைத்து வெள்ளி மோதிரம் விலை ரூபாய் 400/-. தனுசு ராசி, மீனராசிக்காரர்கள் அணிய வேண்டியது புஷ்பராகம். 1 CARAT புஷ்பராகம் வைத்து வெள்ளி மோதிரம் விலை ரூபாய் 400/-. தனுசு ராசி, மீனராசிக்காரர்கள் கனக புஷ்பராக மோதிரமும் அணியலாம். 50 CENT கனகபுஷ்பராகம் வைத்து வெள்ளி மோதிரம் விலை ரூபாய் 1000/-.

அனைவரும் அணியக்கூடியது கார்னெட் வெள்ளி மோதிரம் விலை ரூ. 400/-.

இதை அணிவதால் படிப்பு, ஞாபகசக்தி, வேலை வாய்ப்பு, வியாபாரம் செல்வ வளம் பெருகும். எல்லா ராசி மோதிரங்களும் வெள்ளியிலும், தங்கத்திலும் உடனடியாகக் கிடைக்கும். தங்கத்தில் ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூபாய் 1800/- முதல் 5000/-ம் வரை உடனே கிடைக்கும். எங்களிடம் ஜாதகம் பார்க்க எந்தவித கட்டணமும் கிடையாது. தபால் எழுதினால் முழு விவர பாம்லட் இலவசமாக அனுப்புகிறோம்.

எங்களது சிறப்புப் பேட்டி ராஜ் டீ.வி.யில் காலை 7 To 7.10 மணிக்குள் திங்கள், புதன், வியாழன், வெள்ளி, சனி அன்றும் ராஜ் டிஜிட்டல் டீ.வி.யில் புதன், வியாழன், வெள்ளி மாலை 5.15 To 5.30 மணிக்குள் பார்க்கலாம்.

# பொய்யில் பூத்த நிஜம் 22



குழந்தை பரத்தை க்ரெஷ்ஷில் விட்டுவிட்டுக் கிளம்பியபோது, ஆபீஸ் அறையில் அமர்ந்திருந்த மிஸஸ் மல்ஹோத்ரா கையை அசைத்துப் புன்னகை பூத்தாள். பதிலுக்குப் புன்னகை செய்து சகுந்தலா கையசைத்தபோது சுவரில் ஆளுயரத்துக்கு பாபா நின்றிருந்தார். அபயஹஸ்த முத்திரையுடன். புன்னகையுடன். பாபாவின் முகச்சாயலே மிஸஸ் மல்ஹோத்ராவுக்கு வந்துவிட்ட மாதிரி இருந்தது.

இப்போதெல்லாம் மிஸஸ் மல்ஹோத்ரா அவளை எந்தக் கேள்வியும் கேட்பதில்லை. உன் கணவரைப் பற்றி என்ன செய்தி என்று கேட்பதில்லை. 'நம்பிக்கை வையுங்கள் பெஹன்' என்று சொல்வதில்லை. "அவருக்கு பார்ஷியல் அம்னீஷியா. என் நினைவே போய்விட்டது. நினைவு திரும்புகிறவரை பெற்றோர்களுடன் இருப்பார்" என்று சொன்னபோது ராஜாவின் மறதியைப் பற்றித்தான் ஆச்சரியப்பட்டாள், அவன் சென்னைக்குச் சென்றது நல்ல ஏற்பாடு என்று நினைத்தவள்போல. பிறகு கொஞ்ச காலம் சேதி உண்டா என்று கேட்பாள். "சேதி வந்ததும் உங்களிடம் நானே சொல்வேன்" என்று அவள் சொன்னதும் குறிப்புணர்ந்து கேட்பதை நிறுத்திக் கொண்டாள். ஏதோ பிரச்னையிருப்பதை அவள் உணர்ந்திருக்கவேண்டும். காலனியில் உலவும் வதந்திகள் அவள் செவிகளை, எட்டியிருக்கலாம் – இவள் நாகரிகம் தெரிந்தவள்.

"சகுந்தலா பெஹன்" –

அவள் திரும்பினாள்.

மிஸஸ் மல்ஹோத்ரா அருகில் நின்றாள்.

"நீங்கள் தமிழரா?" என்றாள்.

"ஆமாம்" என்றாள் சகுந்தலா மெல்லிய வியப்புடன்.

"உங்களால் ஒரு சின்ன உதவி செய்ய முடிந்தால் ரொம்ப சந்தோஷப் படுவேன்."

"என்ன சொல்லுங்கள்?"

"உங்கள் பில்டிங்கில்தான் என்று நினைக்கிறேன், மிஸஸ் ராபின்ஸன் என்று ஒரு அம்மாள் இருக்கிறாள்."


**"பாட்டி, நான் கல்யாணம் பண்ணிண்டா தாலி கிடையாது!"**

"ஆமாம் தெரியும் – டாரத்தி ராபின்சன்."

"அவருக்குப் பாவம் பிரெய்ன் ட்யூமர். ஆபரேஷன் ஆகி இரண்டு மாதம் ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு வந்திருக்கிறார்."

சகுந்தலாவுக்கு அதிர்ச்சியாக இருந்தது. எதிர்த்த வரிசையில் இருந்தது ராபின்சன் வீடு. பால்கனியில் பூந்தொட்டிகளுக்கு தினமும் டாரத்தி நீர் விடுவது தெரியும். கூப்பிடு தூரத்தில் இருந்த ஒரு நபரைப் பற்றி மிஸஸ் மல்ஹோத்ராவிடமிருந்து அறிவது கூச்சமாக இருந்தது.

"அப்படியா? எனக்குத் தெரியாமல் போச்சே?"



மிஸஸ் மல்ஹோத்ரா அவள் தோளின்மேல் கையை வைத்தாள்.

"நீங்கள் ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்குமாக அலைந்து கொண்டிருந்தீர்கள். ஏகப்பிரச்னைகள் வேறு. நீங்கள் என்ன செய்வீர்கள்?"

"இப்பொழுது எப்படி இருக்கிறார்?"

"இந்த மாதிரி கேஸ்களில் என்ன செய்ய முடியும்? வீட்டிற்கே அழைத்துப் போய் விடுங்கள் என்றாராம் டாக்டர். ராபின்சன் பாவம், வீட்டோடு நர்ஸ் போட்டிருக்கிறார். எங்கள் சத் சங்கத்திலிருந்து தினமும் யாராவது சற்று நேரம் நோயாளியோடு இதமாகப் பேசிவிட்டு வருகிறோம். அவர்கள் தமிழர்கள். நீங்கள் ஒரு நாள் சென்று தமிழில் பேசினால் அந்த அம்மாளுக்கு ஆறுதலாக இருக்கும் என்று நினைக்கிறேன்."

"கண்டிப்பாகப் போகிறேன்" என்றபோது சகுந்தலாவின் குரல் நெகிழ்ந்தது.

**வாஸந்தி**

அலுவலகத்துக்கு வண்டியை ஓட்டும்போது டாரத்தியை நினைத்து மனசு திரும்பத் திரும்ப அதிர்ந்தது. வயது நாற்பதுக்குள் தான் இருக்கும். வெள்ளையாகச் சிரிப்பாள். சின்னப் பெண்ணாக எல்லாவற்றையும் ரசிப்பாள். "நீங்க தமிழ் பேசறவங்கன்னு என் வேலைக்காரி சொன்னா. உண்மையிலே சொல்றேங்க. காதிலே தேன் வந்து பாஞ்சமாதிரி இருந்துச்சு!" பால்கனியிலிருந்தே கத்துவாள்.

"என் ரோஜாச் செடியைப் பார்த்திங்களா? எவ்வளவு பெரிய பூ பார்த்திங்களா?" பாதி நேரம் பால்கனியில் நின்று ஆகாசத்தைப் பரவசத்துடன் பார்த்தபடி நிற்பாள். ராபின்சன் அவளைவிட இளைஞராகத் தோற்றமளிப்பார். டாரத்தி எங்கேயோ டீச்சராக வேலை பார்த்தாள். பால்கனியில் கண்டபோது இரண்டொரு வார்த்தை நின்று பேசுவதோடு சரி. நேரத்துக்கு ஆலாய்ப் பறந்து கொண்டிருந்த வாழ்வில் ஒரு ஞாயிறன்று கூடப் போய் பார்க்க முடிந்ததில்லை. அவர்களது நண்பர் வட்டமே வேறாகிப் போன நிலையில், பாளையங்கோட்டையைச் சேர்ந்த ஓர் எளிய தமிழ்ப் பெண்ணின் பால்கனி சிநேகிதம் ஆழமாகத் தொற்றிக் கொள்ளவில்லை.

மிஸஸ் மல்ஹோத்ரா ஓர் ஆச்சரியமான மனுஷி என்று தோன்றிற்று. சுபாவமாகவே கருணையுள்ளம் படைத்தவளாக இருக்க வேண்டும். ராஜாவின் அம்மாவின் இடத்தில் அவள் இருந்திருந்தால் அவன் இப்படித் தன்னை அம்போவென்று விட்டுப் போக விட்டிருக்க மாட்டாளோ? காமாட்சியை மிஸஸ் மல்ஹோத்ரா ரூபத்தில் கற்பனை செய்வது சுவாரஸ்யமாக இருந்தது. காமாட்சி எதிரில் நின்றாள். முகமே மாறியிருந்தது. கண்களில் ஓர் அசாதாரண காருண்யம் படர்ந்தது. புன்னகையில் நேசம் நெளிந்தது. "பிரியப்பட்டுப் சேர்ந்து வாழ்றீங்க. குழந்தை வேறே பிறந்தாச்சு. இதைவிட நிரூபணம் எதுக்கு? இந்துத் திருமணங்கள் நம்பிக்கையிலேதான் ஓடுது, நிரூபணங்கள்னால் இல்லே. அவனோட நீ இருக்கிறதுதான் நல்லது. இல்லே, அவளும் நம்ம கூட வரட்டும்."


பின்னாலிருந்து ஹார்ன் விடாமல் ஒலித்தது. அவள் சுய நினைவுக்கு வந்து நிமிர்ந்தபோது டிராஃபிக் சிக்னலில் அவளது வண்டி நிற்பது தெரிந்தது. பச்சை வந்து விட்டதால் பின்னால் இருந்த வாகனங்கள் பொறுமை இழந்திருந்தன. சகுந்தலா வண்டியைக் கிளப்பியபடி தனக்குள் சிரித்துக் கொண்டாள். கற்பனையெல்லாம் நிஜமாக முடியாது. அதுவும் கறுப்பை வெள்ளையாக்கப் பார்க்கும் ஃபேர் அண்டு லவ்லி கற்பனை. சின்ன வயசில் பார்த்த சினிமாக்களில் வந்த மாமியார்களின் சாயலில் காமாட்சி இருந்ததாகத் தோன்றிற்று. மகன் ஒருத்தியுடன் சேர்ந்து வாழ்ந்த விஷயம் தெரிவதற்கு முன்பே காமாட்சிக்கு அவளைப் பிடிக்கவில்லை. ராஜாவின் இப்போதைய நிலைமை அவளுக்குக் கிடைத்த எதிர்பாராத வெற்றி. மிஸஸ் மல்ஹோத்ரா நடத்தும் சத் சங்கத்தில் உறுப்பினராக இருந்திருந்தால் காமாட்சி வித்யாசமாக நடந்து கொண்டிருப்பாள் என்று சகுந்தலா நினைத்துக் கொண்டாள். ராஜாவுக்கு அவள் எழுதிய ஒரு கடிதத்துக்கும் பதில் வராததோடு எல்லாம் மறு தபாலில் திரும்பி வந்தன. அவன் பெற்றோர்களுடன் கிளம்பிச் சென்றபோதே அவர்கள் தொடர்பை அறுத்துவிடக் கூடும் என்று அவள் எதிர்பார்த்திருந்தாலும், கடிதம் திரும்பியபோதெல்லாம் மனசு துவண்டது. ராஜாவுக்கு நினைவு திரும்பினால் ஒழிய நிலைமை மாற வழியில்லை என்று தோன்றிற்று. அதற்குள் அவனுடைய அம்மா அவன் மனத்தை மாற்றாமலிருந்தால்.

"தாலி கட்டிக்கிட்ட பெண்டாட்டி கணக்கா இல்லே பேசறா!" கண்ட கண்ட நேரத்திலெல்லாம் இந்த வாக்கியம் தொடர்ந்து தாக்கியது. கல்லூரி நாட்களில் தமிழ் சினிமாவில் தாலிக்குக் கொடுக்கப்படும் மகத்தான முக்கியத்துவத்தைக் கேலி செய்து விவாதம் செய்ததெல்லாம் திருப்பி வந்து தன்னை அடிப்பது போல அவளுக்குத் திகைப்பேற்பட்டது. ஏதோ ஒரு கணக்கெடுப்பில் தில்லி ஜனத்தொகையில் கல்வி அறிவுள்ளவர்களில் ஒன்பது சதவீதம் அதாவது இரண்டில் இருந்து மூன்று லட்சம் பேர் சேர்ந்து வாழ்வதாகத் தெரிவிக்கப் பட்டது. அவர்களில் எத்தனை பேருக்குத் தன்னுடைய சிக்கல் இருக்கும் என்று அவள்

"புடைவை நாலாயிரம் ரூபாய்னுதானே போட்டிருக்கு. ஐந்தாயிரம் ரூபாய்னியே எப்படி!"

"போகவர ஆட்டோ, அதுக்கு வெயிட்டிங் சார்ஜ் யார் கொடுப்பாங்க!"

— சாயம் வெ. ராஜாராமன்



யோசித்தாள். ஸ்தாபனத்திலிருந்து விலகி வாழ்பவர்கள் தங்கள் பலத்தில் மட்டுமே வாழ வேண்டும். தெய்வம் கூட அவர்களுக்குத் துணையில்லை, அந்த பலத்திற்குச் சேதம் ஏற்பட்டால். 'ஊரோடு ஒத்துவாழ்' என்று இதற்குத்தான் சொன்னார்கள் போலிருக்கு.

சனிக்கிழமை என்பதால் நான்கு மணிக்குள் அலுவலகம் காலியானது. கிரெஷ்ஷுக்குச் செல்வதற்கு முன் டாரத்தி ராபின்சனைப் பார்த்துவிட்டு வரலாம் என்று தோன்றிற்று. அவள் ராபின்சன் வீட்டு மணியடித்ததும் ஒரு பெண் கதவைத் திறந்தாள். புதிய நர்ஸாக இருக்க வேண்டும். வசீகர முகமும் கவர்ச்சியான உடல்கட்டும் கொண்ட பெண்.

'ஹௌ ஆர் யூ?' என்று அவள் கேள்விக்குப் பதில் சொல்லுமுன் ராபின்சன் அவளைப் பார்த்து "வாங்க, வாங்க!" என்றார்.

சகுந்தலா கைகூப்பி நமஸ்கரித்து, "டாரத்திக்கு உடம்பு சரியில்லேன்னு இன்னிக்குத்தான் தெரிஞ்சுது. இதே பில்டிங்லே இருந்தும் இத்தனை நாள் தெரியாமல் போச்சு. ஸாரி" என்றாள்.

"அதனால என்னங்க பரவாயில்லே" என்றார் ராபின்சன்.

"உங்க ஹஸ்பெண்டுக்கும் ஆக்ஸிடெண்ட் ஆச்சுன்னு கேள்விப்பட்டேன். அந்த டென்ஷன்லே நீங்க இருந்திருப்பீங்க. உங்க ஹஸ்பெண்டு எப்படியிருக்காங்க? நல்லா ஆயிட்டாங்களா?"

"நல்லா ஆயிட்டார். சென்னையிலே அவங்க அப்பா அம்மா வீட்டுக்குப் போயிருக்கார் ரெஸ்டுக்கு." வார்த்தைகள் தன்னிச்சையாக உருண்டன.

"தாங்க் காட்!" என்றார் ராபின்சன்.

"டாரத்திக்கு எப்படி இப்படி திடீர்னு ஆச்சு? என்னால நம்பவே முடியல்லே!"

"எனக்கே நம்ப முடியல்லீங்க. நாம எத்தனை பலவீனமானவங்க, நம்ம கையிலே எதுவுமே இல்லேன்னு இந்த மாதிரி சமயங்கள்லேதான்ங்க புரியுது. திடீர்னு சாதாரண விஷயத்தையெல்லாம் மறக்க ஆரம்பிச்சா. அப்பத்தான் சாப்பிட்டிருப்பா. சாப்பிடல்லேன்னு மறுபடி சாப்பிட உக்காருவா. தலைவலின்னு படுக்க ஆரம்பிச்சா. டாக்டர் கிட்ட காட்டின உடனே ஏக டெஸ்ட் செஞ்சாங்க. மூளையிலே கன்டைக்கா அளவு கட்டி இருக்கு. உடனடியா ஆபரேஷன் பண்ணி எடுக்கணும்னாங்க. இரண்டு மாசம் ஆஸ்பத்திரியிலே இருந்தோமுங்கம்மா. மூணு லட்சம் செலவாச்சு."



''திருட வந்தவன் உங்களை அறைஞ்சானாமே...ஏன்?''

''பீரோவுல இருக்கற புடைவைகளைப் பாத்துட்டு மனைவிக்கு இவ்வளவு வாங்கிக் குடுத்தா பீரோவுல பணம் எங்கே இருக்கும்னு கேட்டான்!''

— அம்பை தேவா

ராபின்சன் குரல் தழுதழுத்தது. அந்த நர்ஸ் ஒரு டிரேயில் தேனீர் கோப்பைகளையும் பிஸ்கட்களையும் ஏந்தி வந்தாள்.

"மேஜைமேல வெச்சிடு லில்லி, தாங்க்ஸ்" என்றார் ராபின்சன்.

அவள் ஒயிலாக அவரைப் பார்த்துப் புன்னகை செய்து மேஜைமேல் டிரேயைக் குனிந்து வைத்தபோது ரவிக்கையின் இறங்கிய கழுத்தில் மார்பின் பிளவும் பூரிப்பும் தாராளமாகத் தெரிந்தன.

"டாரத்தி இப்ப எப்படியிருக்காங்க?" கவனம் கலைந்து ராபின்சன் சகுந்தலாவை மெல்லிய சோகத்துடன் பார்த்தார்.

"டாக்டருங்க செய்யக்கூடியதைச் செய்யறாங்க. பிரார்த்தனையிலே நல்லா ஆயிடுவான்னு நம்பிக்கை எனக்கு இருக்குங்க. நீங்களும் பிரார்த்தனை பண்ணுங்க."

"கண்டிப்பா. நான் டாரத்தியைப் பார்க்கலாமா?"

"அவசியம், வாங்க. தமிழ் பேசறவங்களைக் கண்டா அவளுக்கு ரொம்ப சந்தோஷங்க."

அவரைத் தொடர்ந்து அவள் படுக்கையறைக்குச் சென்றாள்.

படுக்கையில் இருந்தது டாரத்தி என்று நம்ப முடியவில்லை. தலை மொட்டையடிக்கப்பட்டிருந்தது. உடம்பு துரும்பாக இளைத்திருந்தது. சகுந்தலாவைப் பார்த்து முகம் மலர்ந்து, "வாங்க" என்று சிரித்தாள்.

அவள் படுக்கையில் எழுந்து உட்கார ராபின்சன் தலையணையை நிமிர்த்தி வைத்து உட்கார்த்தினார்.

"நீங்க பேசிக்கிட்டிருங்க" என்றார் ராபின்சன்.

"நீங்க எங்க போறீங்க?" என்றாள் டாரத்தி சந்தேகம் தொனிக்க.

"இங்கேதான், டாரத்தி அடுத்த ரூமுக்கு. கொஞ்சம் ஆபீஸ் வேலை இருக்கு."

நர்ஸ் வாயிற்படியில் நின்று நமுட்டுச் சிரிப்பு சிரித்தாள்.

"நர்ஸ் வைச்சிருக்கேங்க. ரொம்ப நல்லா பார்த்துக்கறா. நீங்க உக்காருங்க."

சகுந்தலா அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தாள். ராபின்சனைத் தொடர்ந்து நர்ஸும் பார்வையிலிருந்து மறைந்தாள்.

"வெறும் மேனா மினுக்கிங்க. எனக்கு ஒண்ணும் பிடிக்கல்லே" என்றாள் டாரத்தி அறைவாயிலைப் பார்த்தபடி. அவள் கண்களில் நிழலாடிய ஏதோ ஒன்று அடிவயிற்றைச் சில்லிட்டது. விரட்டப்பட்டிருந்த நினைவுப் பிசாசுகள் வாயு வேகத்தில் திரும்பி நெஞ்சில் கனமாக அமர்ந்தன.

"நீங்க அநாவசியமான கவலைகள்லே மனசைத் தளரவிடக் கூடாது. உங்க உடம்பை கவனிச்சுக்கறதுதான் இப்ப முக்கியம்."

"என்னங்க இருக்கு நம்ம கையிலே? ஒரு நோய் நொடி எனக்கு இருந்ததில்லே. அப்படி இருந்தவளுக்கு இரண்டு மாசம் ஆஸ்பத்திரியிலே இருக்கும்படி ஆயிடுச்சு. பணமா தண்ணிபோல கரையுது. நான்தான் வீட்டுக்குப் போயிரலாம்னேன். ஆனா ஒண்ணும் என்னாலே செய்ய முடியல்லே. பாழாப் போன பெண் ஜன்மம் பாருங்க. என்ன உடம்பானாலும், மாசா மாசம் தீட்டு காணறது மட்டும் கரெக்டா வந்துடுது. ஆண்பிள்ளை எவ்வளவுன்னு செய்ய முடியுங்க? நர்ஸ் வைச்சிருக்காங்க."

அவளுடைய தாபப் பிரலாபம் நிறுத்த முடியாததாக இருந்தது. ஒவ்வொரு வார்த்தையும் உண்மையில் குரூர வெளிப்பாடாக இருந்தது. பேச்சுக்கிடையே அவளுடைய பார்வை அடிக்கடி அறை வாயிலைத் தாண்டி எங்கோ துழாவுவதை சகுந்தலா கவனித்தாள்.

"நல்லா ஆயிடுவீங்க, கவலைப் படாதீங்க டாரத்தி!"

"எப்ப ஆவேனோ, அந்த ஜீஸஸ்ஸுக்குத்தான் தெரியும்." கண்களில் நீர் பெருகி கன்னத்தில் வழிந்தது. "எதுக்குங்க எனக்கு




சின்னத்திரை வட்டாரத்தில் திடீரென்று கிளம்பியது அந்தக் கிசுகிசு.

இப்படி வரணும்? நா யாருக்கும் தீங்கு நினைச்சதில்லேங்க. ஒரு ரோஜாச் செடி வாடினாலும் துடிச்சுப் போயிடுவேன்."

"எனக்குத் தெரியும் டாரத்தி" என்றாள் சகுந்தலா உடைந்த குரலில். "உங்க நல்ல மனசுக்கு எந்த சோதனையும் நீடிச்சு இருக்காது. என்னை நம்புங்க."

டாரத்தி அவளுடைய கரத்தைப் பற்றி முத்தமிட்டாள். உண்மையான நெகிழ்ச்சியோடு. "நீங்க வந்தது எனக்கு ரொம்ப மகிழ்ச்சிங்க" என்றாள்.

சகுந்தலா கூச்சத்துடன் சொன்னாள். "இதே பில்டிங்லே இருக்கேன்னு பேரு. இன்னிக்குத்தான் தெரிஞ்சது உங்களுக்கு உடம்பு சரியில்லேன்னு." டாரத்தி புன்னகைத்தாள்.

"பரவாயில்லீங்க, உலகம் சுருங்கிப் போச்சுங்கறாங்க. ஆனா நாம எல்லாரும் தனித்தனி உலகத்திலே இருக்கோம் இப்ப!"

"மறுபடி வரேன் டாரத்தி. தைரியமாயிருங்க."

டாரத்தி அவள் கையை மீண்டும் அழுத்தினாள். "நன்றிங்க" என்று விட்டு மெல்லிய குரலில் தொடர்ந்தாள். "ஏங்க, நர்ஸுன்னா சித்த வயசானவங்களா கிடைக்க மாட்டாங்களா?"

இரவு சகுந்தலாவுக்குத் தூக்கம்

''கோடீஸ்வரி' நிகழ்ச்சி நின்னு போச்சாமே!''

குஷ்பூவைக் கேட்டபோது அவரும் ''ஆமாங்க. கோடீஸ்வரி நின்னுடுச்சு'' என்று பதில் சொன்னார். ''ஆனா, நிறைய பரிசும், பெரிய தொகையுமா 'ஜாக்பாட்' என்கிற புதிய நிகழ்ச்சி ஜெயா டீவியில் தொடங்கப்போகுது. அதை வழங்கப் போவதும் சாட்சாத் நானேதான்'' என்றார் குஷ்பூ குஷியாக.

''குஷ்பூவா? அவங்க தமிழ் பேசி, தொகுத்து வழங்கினா காமெடியா இருக்குமே'' என்று நையாண்டி செஞ்சாங்க. ''இதெல்லாம் உனக்குத் தேவையா?'' என்று என்னை நேரடியாகவே கேட்டாங்க. ஆனால் அதையெல்லாம் மீறி எனக்குள் ஒரு நம்பிக்கை இருந்தது. எனக்கு உற்சாகமூட்டி, உச்சரிப்பு திருத்தி, உதவி செய்த, 'கோடீஸ்வரி' டீமுக்கு நன்றி'' என்கிறார் கிள்ளைத் தமிழில்.

கோடீஸ்வரியில் பெண்கள் மட்டுமே கலந்து கொள்ள வாய்ப்பளிக்கப்பட்டது. ஆனால் 'ஜாக்பாட்' நிகழ்ச்சியில் குடும்பம் மொத்தமும் கலந்து கொண்டு, பரிசு தட்டிச் செல்லலாம் என்பது உற்சாகம் தரும் செய்தி!

— அஜய்

வரவில்லை. டாரத்தியின் முகமே, எதிரில் நின்றது. 'ஒண்ணும் பிடிக்கல்லே' என்கிற வார்த்தைகள் ஜனித்த காலத்திலிருந்து கேட்டவை போல் இருந்தன. டாரத்தியின் முகம் மறைந்து புகை மூட்டம்போல் அம்மாவின் முகம் நின்றது. நிழல் போலச் சித்திரங்கள். இரவு வெகு நேரம் வாசலில் உட்கார்ந்திருக்கும் அம்மா.

''நீ போய் தூங்கு சக்கு. உங்கப்பா வரதுக்காக காத்துண்டிருக்கேன்.''

''அப்பா எங்கேம்மா?''

''எந்தக் கழிசடை பின்னாலாவது போயிருப்பார்.''

''கழிசடைன்னா?''

''எவளோ ஒருத்தி. புடவை கட்டினவ!''

அம்மாவின் கோபம் புரியவில்லை. தூக்கத்துக்கிடையில் கனவா நிஜமா என்று புரியாமல் செவியில் வார்த்தைகள் புரண்டன.

'நா புருஷன்டீ. நா அப்படித்தான் போவேன். உனக்குக் கேள்வி கேக்க அதிகாரமில்லே!'

'அப்ப, தாலிகட்டின பொண்டாட்டிங்கிறது எதுக்கு?'

'எனக்குப் பொங்கிப்போட! கழுத்தில் அது தொங்கறதனாலதான் மெதப்பா வளைய வரே தெரிஞ்சுக்கோ. அது இல்லேன்னா ஒரு பவிஷும் இல்லே உனக்கு.'

'எனக்கு வேண்டாம் இந்த மெதப்பும் பவிஷும். நா போறேன்!'

'எங்கேடி போவே? கூடப் பிறந்தவன் திருப்பி விரட்டுவான்.'

'செத்துப் போறேன். அப்பத்தான் என் அருமை தெரியும் உங்களுக்கு.'

'போயேன், யாரு தடுத்தா உன்னை?'

இப்படியாகத்தான் இருந்திருக்க வேண்டும் அவர்களிடையே – ஐந்து வயது ஞாபகத்தில் மிகத் தெளிவாக இருப்பது அம்மா நெருப்புப் பந்தாகச் சுழன்று சுழன்று நடுக்கூடத்தில் கெரசின் நாற்றமெடுக்க ஓலமிட்டது, பளிங்காக இருந்த முகம் கன்னங்கரேலென்ற பயங்கரத்துடன் ஆஸ்பத்திரியில் கதறித் தவித்தது. பாட்டி தாத்தா கையை இறுகப் பற்றி 'சக்குவைக் கைவிட்டுடாதீங்கோ' என்றது.

வெகு நாள் கழித்து அவள் பாட்டியைக் கேட்டாள்.

''ஏன் பாட்டி அம்மா சாகணும்? அப்பா அநியாயமா நடந்துண்டார்னா வந்துடவேண்டியதுதானே?''

''பயம்டியம்மா. பயந்து செத்தா. புருஷன்கிட்டேந்து வந்துட்டா அப்பா அம்மாவுக்கு பாரமாயிடுவோம்னு பயந்தா. ஊர் தூத்தும்னு பயந்தா. கடைசியிலே அவ பண்ண காரியத்தைப் பாரேன். கழுத்திலே இருந்த தாலியைத் தூக்கிக் கொல்லையிலே எறிஞ்சுட்டு, நெருப்பு கொளுத்திண்டா!''

**வெ**கு காலத்துக்குப் பல ஆண்டுகளுக்கு அம்மா கனவில் வந்தாள். பத்ரகாளியாய் – தாலியை வீசி எறிந்தாள். நெருப்புப் பந்தாய் சுழன்றாள்.

''பாட்டி, நான் கல்யாணம் பண்ணிண்டா தாலி கிடையாது!''

பாட்டி சிரிப்பாள், ''அப்பத் தமிழன் வேண்டாங்கறே.''

''தமிழனோ தெலுங்கோ, எனக்கு அந்த மாதிரி கல்யாணம் வேண்டாம்.''


''ரெஜிஸ்டராவது பண்ணிப்பியோ இல்லையோ?''

அது ஒரு பெரிய ஹாஸ்யம் போல அவள் பாட்டியை அணைத்துக் கொள்ள இருவரும் சிரிப்பார்கள்.

பாட்டி பார்த்த வரன் எதுவும் அவள் போட்ட ஷரத்துக்கு உடன்படாததால் அந்தக் குறையுடனேயே பாட்டி செத்துப் போனாள். அன்றுதான் ராஜா அவளுக்காகவே காத்திருந்தவன் போல அவன் வாழ்வில் நுழைந்தான்.

(தொடரும்)

# சொருகிய தொப்பி...



**சுங்கவரி ஏதும் செலுத்தாமல் இறக்குமதி செய்யப்பட அயல்நாட்டுச் சரக்கு:**

★ ராயல் டச் ஏர்லைன்ஸ் விமானத்தில் பயணம் செய்கிறவர்கள், இனி ஒழுக்கமாய் நடந்து கொண்டால்தான் போச்சு! இல்லையெனில், பிளாக் லிஸ்ட் பண்ணி விடுவார்கள். கொஞ்சம் பிரச்னை செய்தால் இனி ஒழுங்காக நடந்து கொள்ளுவேன் என்று உறுதிமொழி கொடுத்து விட்டு, பயணம் செய்ய வேண்டும். மறுபடி எல்லைமீறினால், அவர்களுக்குக் கட்டம்கட்டி, அப்புறம் விமான டிக்கெட்டே தர மறுத்து விடுவார்களாம்.

★ ருமேனியாவைச் சேர்ந்த லூசியன், வாரத்துக்குப் பதினைந்து டாலர்போல சம்பாதிக்கிறார். எப்படி? யார் யாருக்கு ஆத்திரம் வருகிறதோ, அவர்கள், இவர் முன்னால் வந்து நின்று கன்னா, பின்னா என்று தங்கள் ஆத்திரம் தீரக் கத்தலாம். கொட்டித் தீர்த்தவுடன், அவர்கள் மனசு இலேசாகி, சில நிமிடங்களில், சமா தானமாகி விடுகிறதாம். புத்தி சாலிப் பையன்தான்.

★ முன்னாள் அமெரிக்க அதிபர் கிளிண்டனுக்குச் சொற்பொழிவுகள் எழுதிக் கொடுத்துக் கொண்டிருந்தவர் ஜான் போலக். அவர், விரைவில் ஒரு புது முயற்சியில் இறங்கப் போகிறார். ஆம்! ஒரு படகு வடிவமைத்து, அதில் போர்ச்சுகல் நாட்டின் டியூரோ நதியில் பயணம் செய்யப் போகி

**"கோரம் கொட்டிக் கொள்ளும் இதெல்லாம் ஹேர்ஸ்டைலா?"**



றார். இதிலென்ன விசேஷம்? அவர் பயணம் செய்யப்போகிற படகு, முழுக்க முழுக்க பாட்டில்களின் மூடியாகப் பயன்படுத்தப்படும் 'கார்க்' கொண்டு உருவாக்கப்பட்டது. கடந்த முப்பது வருடங்களாக, பல்வேறு சைஸ் 'கார்க்' சேகரிக்கும் பழக்கமுடைய இவர், ஒரு லட்சத்து அறுபதாயிரம் கார்க் பயன்படுத்தி, தாம் பயணிக்கப் போகும் படகை உருவாக்கியிருக்கிறார்.

★ ஆஸ்திரியாவில், ரயில் பாதையை ஒட்டி, ஜாலியாக நடந்து போய்க் கொண்டிருந்தார் ஒருவர். திடீரென்று பலமாகக் காற்று வீச, அவர் தலையில் அணிந்திருந்த தொப்பி, காற்றில் பறந்து போய்விட்டது. அதனை எடுப்பதற்காக, தண்டவாளத்தைக் கடந்தவர், ரயில் வந்து கொண்டிருந்ததை கவனிக்கவில்லை. திடீரென ஒருவர் தண்டவாளத்தின் குறுக்கே பாய்வதைப் பார்த்த ரயில் டிரைவர் உஷாராகி, சடன் பிரேக் போட்டு ரயிலை நிறுத்தி விட்டார். தொப்பிக்காரர் தப்பி விட்டாலும் டிரைவர் 'சேது' போல ஆகி விட்டாராம். அதிர்ச்சியில் சித்தம் கலங்கிவிட்ட அவருக்குப் பதிலாக வேறு ஒரு டிரைவர் வந்து ரயிலை எடுக்க வேண்டியதாகிவிட்டது.

★ கால்பந்து வீரர் ரொனால்டோவின் ஹேர் ஸ்டைலை எல்லா இளங்காளை விடலைப் பசங்களும் பின்பற்ற ஆரம்பித்து விடவே அம்மாகளுக்குச் செம எரிச்சல். "கோரம் கொட்டிக் கொள்ளும் இதெல்லாம் ஒரு ஹேர் ஸ்டைலா?" என்று ஒரு சர்வேயில் கோபப்படவே "என் ஹேர் ஸ்டைலை விரைவில் மாற்றிக் கொள்கிறேன். என்னை மன்னித்து விடுங்கள்!'' என்று கேட்டுக் கொண்டிருக்கிறார் ரொனால்டோ.



★ படத்தில் இருப்பவர் ஜாய்ஸ் கோல்டிஸ். வயது 79. பிரிட்டனில் காலையில் நியூஸ் பேப்பர் போடும் பணியைச் செய்பவர்களில் மூத்தவர் இவர்தான்! அறுபத்தைந்தாம் வயதிலிருந்து இந்த வேலையைச் செய்து வரும் இவர், படத்தில் உள்ள தம் வாகனத்தை தாமே ஓட்டிச்சென்று வீடுவீடாக பேப்பர் போடுகிறார். பலே பாட்டிதான்!

★ இங்கிலாந்தில் வில்ட்ஷயர் என்ற பகுதியில் உள்ளது லாங்லிட் சபாரி பார்க். இது சிங்கங்கள் சுதந்திரமாய் உலவும் லயன் சபாரி. அதன் நடுவே ஒரு பெரிய கூண்டுக்குள் இரண்டு பேர் உட்கார்ந்திருப்பதைக் காண்பவர்கள் திகைக்கிறார்கள். உண்மையில் அவர்கள் நிஜ மனிதர்களில்லை. பொம்மைகள். அந்தக் கூண்டில் "இந்த மிருகங்கள், எங்களைக் கொல்கிறார்கள். சுற்றுச் சூழல் சீர்கேட்டை ஏற்படுத்துகிறார்கள்." என்று விலங்குகள் சொல்வதுபோல எழுதி வைத்திருக்கிறார்கள்!

— மானஸா

# கரு. பழனியப்பன்

# பார்த்திபன் கனவு



"இளமைக்காலத்தில் கனவுகளும், ஆசைகளும் குற்றாலமாய்ப் பெருக்கெடுக்கும். ஆனால் நிஜத்தில் அவை நிறைவேறாமல் கண்ணாமூச்சி காட்டும். நமது நாயகனும் கனவு காண்கிறான். ஆச்சர்யம்! அவன் காணும் கனவுகள், நிஜத்தில் நிறைவேறுகின்றன. கனவுகள் நிறைவேறுவதில் இருக்கும் சுவாரஸ்யத்தைச் சொல்லும் கதை இது" என்கிறார் 'பார்த்திபன் கனவு' படத்தின் அறிமுக இயக்குனர் கரு. பழனியப்பன்.

'நீங்கள் கண்ட கனவுகள் நிஜத்திலும் பலித்ததுண்டா?' என்றால்... "அப்படிப் பலிக்கவில்லையே என்ற ஆதங்கமும், ஏக்கமும்தான் இந்த படத்தின் கதையாக உருவானது" என்கிறார் பழனியப்பன்.

"வழக்கறிஞராகவோ பேராசிரியராகவோ வரவேண்டும் என்பதுதான் எனது கனவாக இருந்தது. அது நிறைவேறாமல் போய்விட்டது. இப்போது சினிமா இயக்குனராகி இருப்பது நிறையவே பிடித்திருக்கிறது" எனும் இந்த மதுரை இளைஞர், அமெரிக்கன் கல்லூரியில் படித்தது முதுகலை ஆங்கில இலக்கியம்.

இருபத்து இரண்டு வயதில் சென்னைக்கு வந்தபோது மாணவ பத்திரிகையாளனாக இருந்தவருக்கு வேலைக்குச் சேரும்படி ஆனந்த விகடனிலிருந்து அழைப்பு வந்தது. ஆனால் ஆரம்பத்திலேயே 'சினிமாவே சரி' என்று மறுத்துவிட்டாராம். பார்த்திபன், தரணி, எழில் போன்றவர்களிடம் உதவி இயக்குனராகப் பணி. இப்போது சத்தியஜோதி பிலிம்ஸ் தியாகராஜன் இவரது திறமை மீது

**கனவுகள் பலிக்காத ஆதங்கத்தில் உருவான கனவு இது!**

நம்பிக்கை வைத்து இயக்குனராக்கி இருக்கிறார்.

"அந்த நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டும்" என்று சொல்லும் பழனியப்பனின் கனவு ஹீரோ யாரென்றால், அவரது தந்தைதானாம்!

"நானும் பணம் அனுப்பமாட்டேன். நீயும் எனக்கு அனுப்ப வேண்டாம். சினிமாவில் முயற்சி செய்... முடியவில்லை என்றால் திரும்ப வந்துவிடு.. இங்கே வேறு வேலை நிறையவே இருக்கு..' என்று சொல்லி அனுப்பி வைத்தார். நான் நானாக அவர்தான் காரணம்" என்று மதுரை திசைநோக்கி மிலிட்டரி சல்யூட் வைக்கும் இவரது தந்தை, பாத்திரக்கடை அதிபர்.

• 'பார்த்திபன் கனவு' படத்தில் ஸ்ரீகாந்த் - சினேகா.



# அனுராதா - ஸ்ரீராம்

## இசைக் கனவு...



"ட்யூன்களை இருவருமே கம்போஸ் செய்வோம். ஒருவரது கற்பனையை மற்றொருவர் மெருகேற்றுவோம். சினிமா இசையைத் தொழில் ரீதியாக எடுத்துக் கொள்வோம் என்று நினைக்கவில்லை; எல்லாமே கனவுபோல இருக்கிறது" என்கிறார்கள் அனுராதா - ஸ்ரீராம் தம்பதி.

'அச்சம் அச்சம் இல்லை' எனப் பாட ஆரம்பித்து அநாயாசமாக ஆயிரத்து எண்ணூறு பாடல்களைத் தாண்டிவிட்ட அனுராதா ஸ்ரீராம், அவரது கணவர் ஸ்ரீராம் பரசுராம் இருவரும் இணைந்து 'ஃபைவ் ஸ்டார்' படத்துக்கு இசையமைத்திருக்கிறார்கள். இதன்மூலம் இந்தியாவின் முதல் சினிமா இசை அமைப்பாளர் தம்பதி என்ற பெருமையை அடைந்திருக்கிறது இந்த இசை ஜோடி.

"எனக்கோ, கணவருக்கோ கம்போஸிங் புதிதல்ல. நானும் அவரும் இணைந்து, கர்நாட்டிக், ஹிந்துஸ்தானி இரண்டையும் இணைத்து, உலகம் முழுக்க ஜுகல்பந்தி கச்சேரிகளை நடத்தியிருக்கிறோம்" என்று சொல்கிறார் அனுராதா ஸ்ரீராம்.

1997ல் வெளியிட்ட 'சென்னை கேர்ள்' தமிழ் பாப் ஆல்பம் தான் இவர்களுடைய முதல் இசை முயற்சி. அதன்பிறகு வெளியிடப்பட்ட 'சாவரியா' என்ற ஹிந்தி பாப் ஆல்பத்துக்கு, சிறந்த கம்போஸர், சிறந்த ஆல்பம் விருதுகள் கிடைத்தன. அந்த ஆல்பத்தை நட்பின் அடிப்படையில் மணிரத்னத்திடம் கொடுத்து கையோடு வாய்ப்பும் கேட்க, அடித்தது சான்ஸ். அவரது இணை இயக்குனர் சுசி.கணேசனிடம் அறிமுகப்படுத்த, தன்னிச்சையாக இவர்களைத் தேர்வு செய்தாராம் சுசி.கணேசன்.

**"ஒருவரது கற்பனையை மற்றொருவர் மெருகேற்றுவோம்"**

அமெரிக்காவின் வெஸ்லேயான் பல்கலைக் கழகத்தை நன்றியோடு நினைவுகூர்கிறார்கள் இவர்கள். இசையில் ஆராய்ச்சிப் படிப்புக்காக வந்திருந்த இருவரும் சந்தித்துக் கொண்டது அங்கேதானே!

# எஸ்.ஜே. சூர்யா!

## ஹீரோ கனவு



"திருநெல்வேலி மாவட்டம் வாசுதேவநல்லூரிலிருந்து சென்னை வந்து லயோலா கல்லூரியில் சேர்ந்தேன். படித்துக் கொண்டிருக்கும்போதே நடிக்க முயற்சித்தேன். பாண்டியராஜன் இயக்கி நடித்த 'நெத்தியடி' படத்தில் ஒரே ஒரு காட்சியில் நடித்தேன். இடையில் படிப்பு முடிந்து விட, எனக்கு ஊரிலிருந்து மாதந்தோறும் வந்து கொண்டிருந்த ஆயிரம் ரூபாயை வாங்க மனமில்லை. சொந்தக் காலில் நின்று நடிகனாகி விடுவதென உறுதிகொண்டேன். ஹோட்டல்களில் வேலை செய்து கொண்டே வாய்ப்புத் தேடியதில், பல ஹோட்டல்களுக்கு மாறிக் கொண்டே இருக்க நேர்ந்தது. இதனால் உடலைப் பராமரிக்க முடியவில்லை. நடிகனுக்கு முக்கியமே உடல்தான். எனவே முதலில் இயக்குனராகி விடுவோம் என்று முடிவு செய்தேன். உதவி இயக்குனராகி பிறகு 'வாலி' படத்தின் மூலம் இயக்குனரானேன்.

"இருபத்து நான்கு மணி நேரமும் கதையையும், கதாபாத்திரங்களையும் நினைத்துக்கொண்டு இருக்க வேண்டிய டென்ஷன் நிறைந்த பணி. இயல்பாகவே நான் டென்ஷனோடுதான் இயங்குவேன். அதனால்தான் ஒரு வெற்றிகர இயக்குனராக உயர முடிந்தது. இயக்குனரான பிறகு எனது நடிகன் கனவு ஞாபகம் வந்து விட்டது. அப்புறமென்ன 'நியூ' படத்திற்கு நான்தான் ஹீரோ, இயக்குனர், தயாரிப்பாளர் எல்லாம். எனக்கு நாயகி சிம்ரன். எல்லா மனிதர்களுக்குள்ளும் இருக்கும் குழந்தை உள்ளத்தை இந்தப் படத்தில் காட்டப்போகிறேன். ஒரு விசேஷ மருந்தைக் குடித்து விடும் இளைஞன், மனத்தளவில் எட்டு வயது சிறுவனாகி விடுகிறான். அவன் படும்பாட்டை காமெடி ப்ளஸ் காதல் கலவையோடு தரப் போகிறேன். இந்தப் படம் இளைஞர்களுக்கு மட்டுமல்ல, குழந்தைகளுக்கும் பிடிக்கும்..!" என்கிறார் ஹீரோ எஸ்.ஜே. சூர்யா.

**இயக்குனரான பிறகு எனக்கு அந்தக் கனவு ஞாபகம் வந்து விட்டது.**

# ட்ரீம்ஸ் நாயகன் தனுஷ்



"எனக்கு கனவு காண்பதென்றால் பிடிக்கும். அதுவும் பட்டப்பகலில் கண்களை அகலமாய்த் திறந்து வைத்துக் கொண்டு கனவு காண்பேன். எதிரிலிருப்பவர்கள் என்னிடம் பேசிக் கொண்டிருப்பார்கள். நான் அவர்களது பேச்சை சுவாரஸ்யமாய்க் கேட்பதுபோல் 'உம்' கொட்டிக் கொண்டிருப்பேன். ஆனால் என் மனம் கனவுச் சிறகுகளைக் கட்டிக் கொண்டு, எங்கோ பறந்து கொண்டிருக்கும். வகுப்பறையிலும் இதே நிலைதான்.

"ஒருமுறை உலக அதிசயங்களின் பின்னணிப் பற்றி சொல்லிக் கொண்டிருந்தார் ஆசிரியர். "தாஜ்மஹாலை உருவாக்கியது யார்?" என்ற உலகின் மிகச் சுலபமான கேள்வியை, 'திடு'மென என்னிடம் கேட்க.. நான் தட்டுத் தடுமாறி, "பாரதிராஜா" என்று பதில் சொன்னேன். வகுப்பறை மட்டுமல்ல, ஒட்டுமொத்த பள்ளியிலும் எனது புகழ் பரவிவிட்டது.

"அப்பா இயக்குனர் என்பதால் எனது கனவுகளில் சினிமா அதிகமாய் இடம் பிடித்திருந்தது. வளசரவாக்கம் புனித ஜான் பள்ளியில் பத்தாம் வகுப்பு முடித்து விட்டு இருந்த என்னை, அண்ணன் அழைத்து 'துள்ளுவதோ இளமை' படத்தின் கதையைச் சொன்னார். நான் கதையில் கரைந்து கனவில் மூழ்கினேன். பதினெட்டு வயதில் ஹீரோ ஆகிவிட்டேன். ஒரே படம், இத்தனை பெரிய வெற்றியோடு என்னைப் பிரபலப்படுத்தும் என்று நான் பகல் கனவு கூட காணவில்லை. இப்போது அண்ணன் செல்வராகவன் இயக்கத்தில் 'காதல் கொண்டேன்', அப்பா கஸ்தூரி ராஜா இயக்கத்தில் 'ட்ரீம்ஸ்' ஆகிய இரண்டு படங்களில் கதாநாயகனாக நடித்துக் கொண்டிருக்கிறேன்" என்கிறார் வெங்கடேஷ் பிரபுவாக இருந்து தனுஷ் ஆகிவிட்ட இந்த ஆவின் ஹீரோ.

**"ஒரே படம், இத்தனை பெரிய வெற்றியோடு என்னைப் பிரபலப்படுத்தும் என்று நான் பகல் கனவு கூட காணவில்லை."**

கனவுகள் தொகுப்பு : **ஜெ.ஜெ.**

# ஆத்ரேயா

★ ரெடிமேட் ரவிக்கைகள்
★ பெட்டி கோட்ஸ்
★ நைட்டீஸ்
★ Childrens Nighties and Tops

ஒரே நிமிடத்தில் உங்களை மிகவும் அழகானவர்களாக மாற்றி காட்டும்

கச்சிதமான பிட்டிங் – சரியான விலை – உயர்ந்த தரம்




**ATHREYA GARMENTS™**
House of Blouses

No.1, Jambulingam Street, (Valluvar Kottam High Road), Nungambakkam, Chennai-34. ☎ 8226586 Fax : 091-044-5360076
Website : www.athreyawoman.com E-mail : ols@md3.vsnl.net.in

ஆத்ரேயா ரெடிமேட் ரவிக்கைகள் கிடைக்கும் இடங்கள்

| | | |
|---|---|---|
| SINGAPORE | : | MUSTAFFA (OLD) NALLI Pvt. Ltd., |
| UAE | : | LULUCENTRE |
| KARAIKAL | : | EVE'S PARK, BARATHIYAR STREET, |

CHARY'S

# ப்ராசீன ஸம்ப்ரதாய கர்நாடக சங்கீத நூல்கள்

ஸ்ரீமுத்தையா பாகவதர் அபூர்வராக கீர்த்தனைகள் 5 தொகுதிகள் I - ரூ.75.00, II - ரூ.99.00, III - ரூ.60.00, IV - ரூ.90.00, V - ரூ.150.00

அபூர்வராக கீர்த்தனைகள் *(ஐந்து தொகுதிகளும்)* ரூ.449.00

ஸ்த்குரு ஸ்ரீ தியாகராஜஸ்வாமி கீர்த்தனைகள் முழுதும் *(கருத்துரையுடனும் பஞ்சரத்ன கீர்த்தனைகள் மாத்திரம் ஸ்வரத்துடனும்)* ரூ.150.00

ஸ்ரீ அன்னமாச்சாரியார் கீர்த்தனங்கள் *(பதிப்பாசிரியர் டி.எஸ்.பார்த்தசாரதி அவர்கள்)* ரூ.70.00

ஸ்ரீ கிருஷ்ண லீலா தரங்கிணி ரூ.36.00

ப்ராசீன ஸம்பரதாய ஹரி ஹர குஹ பஜனாம்ருதம் *(1000 பக்கங்கள்)* ரூ.165.00

ப்ராசீன ஸம்ப்ரதாய ஸ்ரீ சிவபஜனமாலா ரூ.30.00

ஸ்ரீ ஜெயதேவர் அஷ்டபதி கீதகோவிந்தம் ஸ்வரத்துடன் ரூ.24.00

ஸ்ரீ ஜெயதேவர் அஷ்டபதி ராதா கல்யாணத்துடன் ரூ.24.00

ஸ்ரீ ஆண்டாள் கல்யாணம் ரூ.24.00

ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரநாம ஸ்தோத்திரம் - *ஆதிசங்கரர் பாஷ்யம் தமிழ் உரையுடன்* ரூ.51.00

மனுதர்ம சாஸ்திரம் ரூ.75.00

குருபக்தி ஹரிதாஸ் சுவாமிகளின் வாழ்க்கையில் நிகழ்ந்த அற்புத சம்பவங்கள் நிறைந்த ஒரே நூல் ஆசிரியர் : குருபக்தரத்னம், ஆர்.கிருஷ்ணசாமி ரூ.75.00

மஹாகவி பாரதியார் கவிதைகள், கட்டுரைகள், கதைகள் பகவத் கீதை (4 இன் ஒன்) ரூ.125.00

மகாத்மா காந்தியின் 5 வினாடிகள் - *ரேடியோ நாடகம் ஜெர்மன் மூலம் தமிழில்* *ஜி.கிருஷ்ணமூர்த்தி* ரூ.25.00

விவரங்களுக்கு :
பாகவதரத்னம் பாகவத சிரோமணி, சூடாமணி, ரத்னம், பூஷணம்
**ஏ.கே.கோபாலன் பப்ளிஷர்**
9/2, சேது தெரு, நேரு நகர், சாலிகிராமம், சென்னை-93. தொலைபேசி : 3763055 / 4451673

# நாலுகால் டாக்டர்!


"வாங்க... டாக்டர்!"

**கா**லையிலிருந்தே குழந்தைகள் மத்தியில் உற்சாகம் பெருக்கெடுத்துவிட்டது. உற்சாகத்துக்குக் காரணம் டாக்டர் ஜம்பிள் இன்று வரப்போகிறார். 'வரப்போகிறது' என்று அஃறிணையில் சொல்வதுதான் சரி. ஆனால் டாக்டர் ஜம்பிள், குறைந்த பட்ச கன்சல்டிங் ஃபீஸ் கூட வாங்கிக் கொள்ளாமல் செய்துவரும் மருத்துவச் சேவைக்காக அவரை உயர்திணையாகக் கொள்ள வேண்டும்.

அப்பா, அம்மாவிடம் கூட அதிகம் பேச விரும்பாத ஆட்டிஸம் குழந்தைகளும், கற்றல் குறைபாட்டுடன் பிறக்கும் குழந்தைகளும் பயில்கின்ற சிறப்புப் பள்ளிகளில், ஒன்று, சென்னை எல்டாம்ஸ் சாலையில் உள்ள சரஸ்வதி கேந்திரா.

இங்கே தொடக்க நிலை வகுப்பில் பயின்று வரும் எட்டு வயது கிரிஸ், அடிக்கடி வகுப்பறையின் வாயிலையே பார்த்துக் கொண்டிருந்தான். இவன் இந்தப் பள்ளியில் சேர்ந்து இரண்டாண்டுகள் முடிந்து விட்டன. ஆனால் சக மாணவனைத் தொடவோ, ஆசிரியரோடு ஒருவார்த்தை பேசவோ கூட முடியாமல் தயங்கி ஒதுங்கி இருந்தவன், கடந்த ஏப்ரலில் டாக்டர் ஜம்பிளும், டாக்டர் பேப்பும் இந்தப் பள்ளிக்கு வரத் தொடங்கிய பிறகு, அவர்களோடு சந்தோஷமாய்ப் பழக ஆரம்பித்து விட்டான். விளைவு...? இன்று இவன் அரட்டை மன்னன்.

**'டா**க்டர் ஜம்பிள், டாக்டர் டாக் ப்ளூகிராஸ், சென்னை' என்ற அடையாள அட்டை கழுத்தில் தொங்கிக் கொண்டிருக்க, நான்கு கால்களாலும் நடந்து வந்து கொண்டிருந்தார் டாக்டர் ஜம்பிள். எஸ்! டாக்டர் ஜம்பிள் ஒரு நாய். அதுவும் ஒரு நாட்டுநாய். ப்ளூகிராஸ் டீ – சர்ட் அணிந்திருந்த சிவா என்ற தன்னார்வத் தொண்டர், சங்கிலியால் பிணைத்து அழைத்து வந்திருந்தார்.

> **அவரைத்தொட்டு, கட்டியணைத்து, முத்தமிட்டு, தூக்கி விளையாடி விழுந்து புரண்டு, அடடா! எத்தனை உற்சாகம்...**

பள்ளி வளாகத்திற்குள் டாக்டர் ஜம்பிள் நுழைந்துவிட்ட செய்தி பரவிய அடுத்த கணம்... "ஹேய்.... உய்ய்..." என்ற உற்சாகக் கூவலோடு ஓடி வருகிறார்கள் எல்லா வகுப்பு மாணவர்களும்... ஜம்பிளைச் சூழ்ந்து கொண்டு, அவரைத் தொட்டு, கட்டியணைத்து, முத்தமிட்டு,

தூக்கி விளையாடி விழுந்து புரண்டு, அடடா! எத்தனை உற்சாகம்... அன்பும், நட்பும் கும்மாளமிட, இந்தச் சிறார்கள் பண்ணுகிற அமளி, அன்புத் தொல்லை எல்லாவற்றையும் அமைதியாய்ப் பொறுத்துக் கொண்டு, எப்படி இந்த ஜம்பின் ஈடு கொடுக்கிறது!?

"அதனால்தான் அதை 'நாய் மருத்துவர்' என்று ப்ளூகிராஸ் அங்கீகரித்திருக்கிறது" என்கிறார் ப்ளூகிராஸ் தன்னார்வத் தொண்டர்களில் ஒருவரான வசந்தி ராஜீவ்.

"ஆட்டிஸம் மற்றும் கற்றல் குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு, கற்பிக்கப்படும் கல்வி முறையே சிகிச்சை மாதிரிதான் இருக்கும். காரணம், இத்தகையவர்களுக்குச் சமூகத்தில் மற்றவர்களோடு தொடர்பு என்பது குறைவு. குறிப்பாக மற்றவர்களைத் தொட, ஸ்பரிசிக்கத் தயங்குவார்கள். இதைப் போக்கினாலே சக மனிதருடன் கலபமாகப் பழகிவிடுவார்கள். இந்தக் குறையைப் போக்குவதற்கென்று கனடா மற்றும் ஆஸ்திரேலிய நாடுகளில், வீட்டு விலங்குகளுடன் பழகவிடும் சிகிச்சை முறையைப் பரிசோதனை முயற்சியாகத் தொடங்கி வெற்றி கண்டார்கள். இதை 'அனிமல் தெரபி' என்றும் குறிப்பிட்டார்கள். ஆட்டிஸம் குழந்தைகளை டால்ஃபின்களோடு பழகவிடும் அளவுக்குக் கூட வளர்ந்த நாடுகளில் வாழ்க்கைத் தரம் உள்ளது. வீட்டில் ஒரு குடும்ப அங்கத்தினர் போல நம்முடன் நட்புடனும் நன்றியோடும் பழகும் நாய்களைக் கொண்டு இந்த சிகிச்சை முறையைச் செயல்படுத்திப் பார்த்தால் என்ன என்று 1991-ல் தொடங்கியவர் டாக்டர் ஜில் ராபின்சன். இதய நோய், ரத்தக் கொதிப்பு நோயாளிகள், புற்றுநோய்க்காரர்கள், போன்றவர்களுடன் சாந்தமான நாய்களைப் பழக விட்டு, இந்த அமெரிக்க டாக்டர் மேற்கொண்ட முயற்சிக்கு கைமேல் பலன் கிடைக்க... 'டாக்தெரபி' இன்று உலகம் முழுக்க பிரபலமாகிவிட்டது. குறிப்பாக ஆட்டிஸம் குழந்தைகள் அதிலிருந்து மீண்டுவர டாக்தெரபியும் அற்புதமாக உதவுகிறது" என்கிறார் வசந்தி ராஜீவ்.



• ஜம்பிருடன் ஜாலியாக...

**த**மிழ் நாட்டுக்கு 'டாக்தெரபி' அறிமுகம் ஆனது எப்படி?

"கடந்த ஆண்டு நடைபெற்ற அனிமல் ஏசியா மாநாட்டில் கலந்து கொண்டு திரும்பினார் ப்ளூகிராஸ் தலைவர் டாக்டர் சின்னி கிருஷ்ணா. அந்த மாநாட்டில் 'டாக்தெரபி'பற்றி அறிந்து ஆச்சர்யப்பட்டவர், சென்னை வந்ததுமே செயலில் இறங்கிவிட்டார். இந்தியாவிலேயே முதன் முறையாக டாக் தெரபியை சென்னையில் தொடங்கியிருக்கிறார்கள். சென்னையில் உள்ள பத்து சிறப்புப் பள்ளிகளுக்கு மாதம் இரு முறை நாய் மருத்துவர் சென்று வருகிறார்" என்றார் வசந்தி ராஜீவ்.



• வசந்தி ராஜீவ்

**நா**ய் மருத்துவராகப் பயிற்சி பெற நாய்கள் தேர்ந்தெடுக்கப்படும் விதம் பற்றியும் சொன்னார்.

"பள்ளியின் அருகிலேயே இருக்கும் தன்னார்வத் தொண்டரிடம் நாய் இருந்தால், அது என்ன வகை என்று பார்க்கிறோம். லேப்ராடர் மாதிரி சாதுவான நாய்களில் அதிக சாதுவாகவும், அன்பாகவும் இருக்கும் நாய்களை எங்கள் டாக்டர் குழு சோதனைகள் மூலம் தேர்ந்தெடுத்து 'டாக்டர் டாக்' என்று அங்கீகாரம் தருகிறது. இத்தகைய நாய் மருத்துவருக்கு ரேபிஸ் தடுப்பு முதற்கொண்டு எல்லாவித சிகிச்சையும் வழங்குகிறோம்" என்கிறார் வசந்தி ராஜீவ்.

டாக் தெரபி தங்கள் மாணவர்களுக்கும் தேவை என விரும்பும் சிறப்புப் பள்ளி நிர்வாகிகளும், அன்பான தங்கள் நாயை இந்த சிகிச்சைக்கு அனுப்ப விரும்பும் தன்னார்வத் தொண்டர்களும் ப்ளூகிராஸ் அமைப்புடன் தொடர்பு கொள்ளலாம்.

— ஆர்.சி. ஜெயந்தன்

படங்கள்: ராஜன்

கலைஞருக்கு வந்திருப்பது

# காலம் கடந்த ஞானமா..?



* சிலையும் சிக்கலும்!

● எம்.சம்பத், வேலாயுதம் பாளையம்

? 'டி.என்.சேஷனுக்குப் பிறகு தேர்தல் கமிஷன் - அரசு மோதல்கள் அதிகரித்துவிட்டன. அரசுப் பணியில் தேர்தல் கமிஷன் தலையிடக் கூடாது' என்று ஜெயலலிதா சீறிப்பாய என்ன காரணம்?

! கடந்த கால அனுபவம்; எதிர்காலம் பற்றிய கவலை. குறிப்பாக, உச்சநீதிமன்ற ஆணையைச் சிரமேற்கொண்டு அண்மையில் தேர்தல் கமிஷன் நடந்து கொண்ட விதம். அதை மத்திய அரசு ஓர் அவசரச் சட்டம் மூலம் ஒழித்துக் கட்டியதும்தான் நிம்மதிப் பெருமூச்சு விட்டிருப்பார்.

● வளர்மதி ஆசைத்தம்பி, தஞ்சாவூர்

? நம் பக்கம் நியாயம் இருக்கும் போது காஷ்மீர் தேர்தலில் சர்வதேசப் பார்வையாளர்களை அனுமதிக்க மறுப்பது எதனால்..?

! குஜராத்தில் அம்னெஸ்டி இன்டர்நேஷனலை அனுமதித்திருக்க வேண்டும் என்று சொன்னதால் தானே இக்கேள்வி. காஷ்மீர் பாதுகாப்பும் தேர்தலும் உள்நாட்டு விவகாரம். அங்கே மனித உரிமை மீறல் எதுவும் இல்லை - குஜராத் போல, அரசு ஏற்பாட்டில் அமைதி குலையவில்லை; அண்டை நாட்டுத் தலையீட்டால் தான் கோளாறு.

● ஜி. ஜெயராமன், கூந்தலூர்

? அறிவு - ஞானம் இரண்டும் ஒன்றா..?

! இல்லை; பக்குவப்பட்ட அறிவு என்பதே ஞானம்.

● ஆர். அப்துல் சலாம், திருச்சி

? 'ராமதாஸைவிட்டு ரஜினியைத் தாக்கச் சொன்னவரே கருணாநிதி தான்' என்று எஸ்.எஸ்.சந்திரன் பேசியிருப்பது பற்றி...?

! இது பாபா - III - கதை, வசனம், இயக்கம் - எஸ்.எஸ்.சந்திரன்!

● வசந்தாகாந்த், கருப்பம்புலம்

? 'இரண்டையும் படி; அப்புறம் அவை பற்றி ஆழமாக யோசி! நீயே முடிவு செய்!' என்று தப்பித்துக் கொண்டால் எப்படி...? எங்களைத்

☐ ரூ.100 பரிசு பெறுபவர் :
இரா. கல்யாணசுந்தரம்,
7, நடுத்தெரு, அனுப்பானடி,
மதுரை - 625 009

தெளிவுபடுத்த வேண்டியவரே இப்படிச் சொன்னால், நாங்கள் எங்கே போய் முட்டிக் கொள்வது..?

! கல்கி தன் கருத்துக்களில் சந்தேகமின்றி தெளிவாகவும் உறுதியாகவும்தான் இருக்கிறது. பிரச்னைகளை அலசி வழிகாட்டவும் செய்கிறது. ஆனால், பிற பத்திரிகைகள் மாற்றுக் கருத்து வெளியிடுவதையும் அதை வாசகர்கள் படிப்பதையும் கல்கி எவ்வாறு தடுக்க முடியும்? எதை ஏற்பது எதை விடுவது என்பதை வாசகர்கள்தான் சிந்தித்து முடிவு செய்ய வேண்டும். இதற்குப் பெயர்தான் ஜனநாயகம்.

● வே. முருகேசன், சென்னை - 88

? குழந்தைகளை உயிரோடு மண்ணில் புதைத்து சற்று நேரத்தில் மீண்டும் உயிரோடு எடுத்த சம்பவத்தைப் பார்த்தீர்களா..?

• சீறலும் சாந்தியும்!



! அதிர்ச்சியூட்டும் இப்படிப்பட்ட ஆபத்தான மூட நம்பிக்கைகள் பல, நம் நாட்டில் உண்டு என்பதால் ஆச்சர்யப்படவில்லை. அவற்றுக்கு அமைச்சர்களின் - தலைவர்களின் அங்கீகாரம் கிடைத்து வருவதுதான் பேரதிர்ச்சி.

● ராஜிராதா, திருச்சி - 14

? கங்குலி - டெண்டுல்கர் - டிராவிட் அணி இங்கிலாந்தில் அசத்துகிறதே?

! இந்த டெஸ்டில் பெற்ற வெற்றி, மெத்தனத்தை அனுமதித்துவிடக் கூடாது; நம் அணிக்கு அந்த அபாயம் எப்போதும் உண்டு. தொடரை வென்று வாகை சூடட்டும்.

● ஆர். குட்டிபிரசன்னா, கரூர்

? 'வீரப்பனை ராட்சஸன் என்று ரஜினி சொன்னதை, ஒரு தமிழனைச் சொன்னதாகத்தான் நான் பார்க்கிறேன்' என்று ராமதாஸ் கூறியிருப்பது எதைக் காட்டுகிறது?

! ராட்சஸன் என்றுதான் மீண்டும் மீண்டும் நிரூபணம் ஆகிவருகிறதே! அப்புறம் மொழி பேதம் என்ன வேண்டிக்கிடக்கிறது! அத்தனை அனுதாபப்படும் ராமதாஸ், ரஜினியைத் தூதனுப்பக் கேட்பானேன்; தாமே போகலாமே!

• வெற்றி...





• ... மெத்தனம் ...

# நீங்கள் கேட்டவை • தராசு



• ... அபாயம்!

● எஸ். பாலச்சந்தர், திருவாரூர் - 1

? ஆயுத பேர ஊழல், சவப்பெட்டி ஊழல், பெட்ரோல் ஊழல், அடுத்து...?

! அரசு நிலங்களை வேண்டியவர்களுக்கு ஒதுக்கி ஆதாயம் அடைந்த ஊழல்; வேண்டுமானால் அதை இப்போது தர்மத்துக்கு எழுதி வைக்கத் தயார் என வெங்கையா நாயுடு வாய்ச் சவடால் பேசும் கேவலமான ஊழல்.

● இரா. கல்யாணசுந்தரம், மதுரை - 9 ❐

? பால் தாக்கரே அடிக்கடி அரசியலை விட்டே விலகப் போகிறேன் என்று சொல்லிவிட்டு, மீண்டும் அரசியல் பண்ணிக் கொண்டிருக்கிறாரே...?

★ திரைக்கதையும் வசனமும்...!



★ ஆதங்கமும் அறிவுரையும்!



! அரசியலிலேயே ஈடுபடாமல் வெளியே இருப்பவர்கள்கூட 'அரசியல் பண்ணுகிறார்கள்' என்னும்போது 'அரசியலை விட்டு விலகப் போகிறேன்' என்று சொல்லிக் கொண்டு ஒருவர் அரசியல் பண்ணுவதில் என்ன அதிசயம்?

● க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

**? சென்னை தேனாம்பேட்டை சந்திப்பில் கண்ணகி சிலை அமைக்கப்படும் என்று கருணாநிதி தெரிவித்திருக்கிறாரே...?**

! அனுமதி அவ்வளவு சுலபத்தில் கிடைத்து விடுமா என்ன? அப்படிக் கொடுத்துவிட்டால் 'ஜெ'யின் கிதாப் என்னாவது? அப்புறம் மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி திமுக. அதற்கு ஒரு போராட்டம் நடத்தலாம். இன்றைய அரசியலே இந்தத் தரத்தில் தானே இருக்கிறது!



★ சபதமும் சில்மிஷமும்!

● ஜி.ஜி. சரவணன், மயிலாடுதுறை ★

**? 'தி.மு.க.வின் எதிர்கால நடவடிக்கைகள் இனி இளைஞர்கள் கையில் ஒப்படைக்கப்படும்' என கலைஞர் அறிவித்திருப்பது காலம் கடந்த ஞானம் தானே?**

! 'நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய் குயவனை வேண்டி
கொண்டுவந்தான் ஒரு தோண்டி - அதைக்
கூத்தாடி கூத்தாடி போட்டுடைத்தாண்டி!'

என்ற பாடல் நினைவில், காலம் கடந்திக் கொண்டு வந்திருக்கலாம்.

● த. குணசேகரன், ஈரோடு

**? 'அரசுக் கல்லூரி ஆசிரியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு தி.மு.க. - கம்யூனிஸ்ட் கட்சிகளின் தூண்டுதலே காரணம்' என்று ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளாரே?**

! நாகப்பாவை வீரப்பன் கடத்திக் கொண்டு போனதும் திமுக. கம்யூனிஸ்டு தூண்டுதலால் தான் என்று ஜெயலலிதா சொன்னால்கூட வியப்படைய வேண்டாம். பிறர்மீது பழி போடுவதில் அவர் எக்ஸ்பர்ட்!

● முகவை முத்துசாமி, தொண்டி

**? 'அரசியல் தலைவர்களுக்கு நான் வைக்கிற வேண்டுகோள் - இப்பதான் நம்ம குழந்தைகள் கொஞ்சம் கொஞ்சமா சாதி வேறுபாடுகளை மறந்துக்கிட்டு வர்றாங்க. மறுபடியும் சாதி சாதின்னு நினைவுபடுத்தி சமுதாயத்தைப் பின்னோக்கி இழுத்துறாதீங்க - அது தான் நீங்க சமூகத்துக்குச் செய்ய வேண்டிய முக்கியமான உதவி' என்று நடிகர் கமல் கூறியுள்ளாரே?**

! சொன்னால் அவர்கள் கேட்டுவிடப் போவதில்லை என்றாலும் நல்ல அறிவுரை.

● உமரி பொ. கணேசன், மும்பை - 37

**? அநியாய வட்டியில் கடன் வாங்கிக் கொண்டு மக்கள் அவதிப்படுவதைத் தடுக்க அரசே வங்கி மூலம் சிறுசிறு தொகைகளைக் கொடுத்து தினசரி வசூல் செய்யலாமே...-உங்கள் கருத்து என்ன?**

! ஏன் கூடாது? தாராளமாகச் செய்யலாம். செய்யவும் வேண்டும். ஆனால் அரசியல் தலையீடு கூடாது! வியாபாரிகளுக்கு உதவும் வங்கித் தொழிலும் ஒரு வியாபாரமாகவே நடத்தப்பட வேண்டும்.

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
**ஜி.ஜி. சரவணன்,**
52, மேல வீதி, திருஇந்தளூர்,
மயிலாடுதுறை - 609 001.

# கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை

அன்புடன் அழைக்கிறது



# அமரர் கல்கி பிறந்த நாள் விழா

**திங்கட்கிழமை, செப்டெம்பர் 9, 2002**
**மயிலை, பாரதிய வித்யாபவன் அரங்கம்**
**மாலை 6:00 மணி.**

**கல்கி கிருஷ்ணமூர்த்தி** நினைவுப் பரிசும் விருதும் பெறுபவர்கள்:
*இளம் இசைக் கலைஞர்கள்* : **பாம்பே ஜெயஸ்ரீ ராம்நாத்**
**B.S. புருஷோத்தம்.**

தலைமை:
**இயக்குனர் சிகரம் திரு. கே. பாலசந்தர்**

மாலை 6:45 மணி : **இன்னிசைக் கச்சேரி:**

| | |
|---|---|
| பாம்பே ஜெயஸ்ரீ | : பாட்டு |
| எம்பார் கண்ணன் | : வயலின் |
| கணபதிராமன் | : மிருதங்கம் |
| பி.எஸ். புருஷோத்தம் | : கஞ்சிரா |

அனைவரும் வருக!

# கை கழுவினா தப்பே இல்லை!



'கை கழுவறது' ரொம்ப நல்லதுன்னு சொன்னா எல்லாரும் சண்டைக்கு வருவாங்க. ஆனா உண்மையிலேயே கையைக் கழுவிச் சுத்தமா வச்சுக்கிட்டா, நோய் ஓர் ஆள்கிட்ட இருந்து இன்னொருத்தருக்குப் பரவாதுன்னு ஹெல்த் கேர் ஸ்பெஷலிஸ்ட் எல்லாம் சொல்றாங்க. அதாவது, கிருமித் தொற்றுங்கற இன்ஃபெக்ஷன் தாக்காது.

மருத்துவமனைகள்ள, ஒரு நோயாளியைப் பரிசோதித்த பிறகு இன்னொரு நோயாளியைப் பார்க்கறதுக்கு முன்னால, டாக்டர் சோப் போட்டுக் கையைக் கழுவுறதைப் பார்த்திருக்கலாம். அதே மாதிரி வீடுகள்ளயும், சமையல் செய்யறதுக்கு முன்னால, குழந்தைக்கு டயாபர் மாற்றின பிறகு, டாய்லெட் போய் வந்த பிறகு எல்லாம் கையைச் சுத்தமாக் கழுவிட்டா, டயரியா (அதாங்க வயித்துப் போக்கு) ஹெபடைடிஸ் - ஏ எல்லாம் பரவாது.

இதை இன்னிக்கு, நேத்திக்கு யாரும் கண்டுபிடிச்சுச் சொல்லிடலே. கிட்டத்தட்ட நூறு வருஷத்துக்கு முன்னாலேயே, டாக்டர் இக்னாஸ் செம்மெல்வெல்ஸ் என்கிற மருத்துவர் வியன்னா ஹாஸ்பிடல்ல வேலை பார்த்தபோது சொல்லியிருக்கார்!

**மூணுல ஒரு பங்கு பேருக்கு, ஹார்ட் அட்டாக் வரபோது, எந்தவிதமான வலியும் தெரியாதாம்!**

டெலிவரிக்காக அட்மிட் பண்ற அம்மாக்கள் பல பேர் பிரசவத்துக்கு அப்புறம் இறந்து போன எண்ணிக்கை அதிகமாப் போன போது தான் இதைக் கண்டு பிடிச்சார் அந்த டாக்டர். மருத்துவக் கல்லூரி மாணவர்கள் எல்லாம் அனாடமி வகுப்பு முடிஞ்சு, இறந்து போனவர்களோட உடல் உறுப்புகளை எல்லாம் தொட்ட கையோட, பிரசவம் ஆன அம்மாக்களையும் போய்ப் பரி

சோதிச்சிருக்காங்க. மாணவனோட கையிலிருந்து நோய்த் தொற்றுக்கான பாக்டீரியா கிருமி பரவியிருக்குன்னு கண்டுபிடிச்சாராம் அவர். அப்புறம் ஒழுங்கா கையைக் கழுவ ஆரம்பிச்சப்பறம் பிரச்னை போயே போச்சாம்!

அதனால ஒரு வேலை முடிஞ்சா, கையைக் கழுவுறதுல தப்பே இல்லே.

● ஹார்ட் அட்டாக் வரபோது, மார்ல ஒரு இறுக்கம், அழுத்தமா இருக்கும். இது சில சமயம் கழுத்துல, கைல, தாடைல எல்லாம்கூட வந்துடும். இரண்டாவது, மூணாவது, நாலாவது அட்டாக் வந்தா எப்படி இருக்கும்?

மூணுல ஒரு பங்கு பேருக்கு, ஹார்ட் அட்டாக் வரபோது, எந்தவிதமான வலியும் தெரியாதாம்! நம்ப முடியலே, இல்லே? ஆனா ஜர்னல் அஃப் த அமெரிக்கன் மெடிகல் அசோசியேஷன் நடத்தின சர்வே-ல இந்த முடிவுக்குத்தான் வந்தாங்களாம்.

ஒருவித அறிகுறி தெரிஞ்சிட்டுதுன்னா, உடனே ஓடி ஆஸ்பிடல்ல அட்மிட் ஆகிடலாம். செஸ்ட் பெயின் வர ஹார்ட் அட்டாக் நோயாளிங்க, அதைப் பெரிசா எடுத்துக்காம இருந்துடறாங்களாம். இரண்டு மணி நேரம் தள்ளிப் போடறாங்களாம். இதையும் சர்வேல கண்டுபிடிச்சிருக்காங்க.

செஸ்ட் பெயினுக்கு அடுத்தது என்ன அறிகுறி?

மூச்சுவிட சிரமமா இருக்கும். இதுவே ஹார்ட் அட்டாக் வரதுக்கான சிக்னல்னு சில டாக்டர்கள் சொல்றாங்க.

வாந்தி வர மாதிரி இருக்கறது, ஒரேயடியா வேர்த்துக் கொட்டறது, மயக்கமாயிடறது எல்லாம் கூட அறிகுறிகள்தான்.


கார் இருந்தா, நீங்களே ஹாஸ்பிடலுக்கு ஓட்டிட்டு போயிட வேணாம். ஆம்புலன்ஸைக் கூப்பிடுங்க. ஆஸ்பிரின் மாத்திரையை மெல்லுங்க. 325 மி.கி. தேவைப்படலாம். இரத்த ஓட்டத்துல விரைவா கலந்துடும். பெரிசா பாதிப்பு வராம பாதுகாக்கும்.


"எனக்கா? செஸ்ட் பெயினா? வரவே வராது!"ன்னு சொல்லிக்கிட்டே இருக்காதீங்க.


அதை டாக்டர் சொல்லட்டும்!

- எஸ்.வி.என்







# நடக்குமென்பார்;

**மேஷம் :** இந்த வாரம் மனத்தில் தெளிவான சிந்தனை பிறக்கும். இதனால் சந்தோஷத்தில் இருப்பீங்க. தெய்வ காரியங்களில் ஈடுபாடு ஏற்படும். அலுவலகத்தில் நல்ல வரவேற்பு இருக்கும். சில தடைகள் அவ்வப்போது ஏற்படும். இருந்தாலும் அதுக்காக கவலைப்படத் தேவையில்லை. உங்க சமயோசிதப் புத்திசாலித்தனத்தால ஈஸியா சமாளிச்சிடுவீங்க. வியாபாரத்தில் லாபம் கொட்டும். சிலர் புதிய தொழில் தொடங்க வாய்ப்பிருக்கு. வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல் வந்து சேரும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு ஆதாயம் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். பெண்களுக்கு உற்சாகமான வாரம்.

**ரிஷபம் :** இந்த வாரம் பணத்துக்குப் பஞ்சமில்லை. நண்பர்கள், உறவினர்கள் உதவ வருவாங்க. எதிர்ப்புகள் விலகும். மனசு நிம்மதியா இருக்கும். அலுவலகப் பணியாளர்கள் முன்னணிக்கு உயருவாங்க. புதிய வேலை முயற்சிகள் வெற்றி தரும். உயரதிகாரிகளின் ஆதரவையும் பாராட்டையும் பெறுவீங்க. புதன் பலத்தால் மாணவர்கள் வெற்றி நடை போடுவார்கள். உணவு பொருட்கள், லாட்ஜ், ஹோட்டல், மருத்துவம், கெமிக்கல்ஸ், ஏற்றுமதி, இறக்குமதி, தொழில் பண்றவங்களுக்கு ஆதாயம் தரும். குடும்பத்தில் அமைதி நிலவும். திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடக்க வாய்ப்பிருக்கு.



**மிதுனம் :** இந்த வாரம் முக்கியமான காரியங்கள் நிறைவேறும். கோர்ட் வழக்கு விவகாரங்கள்ல அனுகூலமான திருப்பம் ஏற்படும். அலுவலகத்தில் சுதந்திரமாச் செயல்படும் நிலை ஏற்படும். மறைமுக எதிரிகள் மாயமாயிடுவாங்க. எதிர்ப்புகள் குறையும். கூடுதல் பொறுப்பும் ஆதாயமும் ஏற்படும். மனத்தில் உற்சாகம் நிறைந்து இருக்கும். சிலர் வெளிநாடு போக வாய்ப்பிருக்கு. குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். சுபகாரிய முயற்சிகள் கைகூடி வரும். பெண்களுக்கு உற்சாகமான வாரம்.

**கடகம் :** இந்த வாரம் பணம் பல வழிகள்ல வரும். இருந்தாலும் சுபகாரிய செலவுகள் அதிகரிக்கும். மனத்தில் தெளிவும் அமைதியும் பிறக்கும். உத்தியோகத்தில் சில சிக்கல்கள், தடைகள் ஏற்பட்டாலும் முடிவில் அனுகூலம் உண்டு. வேலையில்லாதவங்களுக்கு அதற்கான வாய்ப்பு ஏற்படும். வேலையிவிருப்பவர்களுக்கு இடமாற்றம், பதவி உயர்வு வரலாம். வாரக் கடையில் எதிர்பாராத நன்மை உண்டு. கொடுக்கல் வாங்கல் ஆதாயம் தரும். இதுவரை வராமல் இழுத்தடித்த பணம் இப்போ வந்து சேரும். சிலருக்குப் புதிய தொழிலில் ஈடுபடும் வாய்ப்பு வரும். குடும்பத்துல மகிழ்ச்சி உண்டாகும்.

**சிம்மம் :** இந்த வாரம் ராஜயோகப் பலன்கள் நடக்கும். எடுத்த காரியங்கள் வெற்றிதான். அமைதியான சூழ்நிலை நிலவும். உடல் ஆரோக்கியம் மேன்மை அடையும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு இடமாற்றம் ஆகியவை கிடைக்க வாய்ப்பிருக்கு. நிர்வாகத் துறைகளில் உள்ளவர்கள் முன்னணிக்கு உயருவாங்க. கொடுக்கல் வாங்கல் விஷயத்தில் கவனம் தேவை. மனை, வீடு, ரியல் எஸ்டேட் இனங்களில் ஆதாயம் உண்டு. பெண்களுக்கு அனுகூலமான திருப்பம் வரும். மாணவர்கள் உழைப்பு, வீண் போகாது.

**கன்னி :** இந்த வாரம் சரளமான பண வசதி இருக்கும். பயணத்தால் நன்மை உண்டு. வேலை, தொழில் வகையில் அனுகூலமான பலன்கள் உண்டாகும். அரசு பணியாளர்கள் முன்னணிக்கு உயருவாங்க. அரசியல் வாதிகளுக்குப் பெயர், புகழ் அதிகரிக்கும். எதிர்ப்புகள் மறையும். தொழிலில் முன்னேற்றம் உண்டு. கொடுக்கல் வாங்கல் வகையில் ஆதாயம் உண்டு. குடும்பத்துல மகிழ்ச்சி. சுபகாரிய நிகழ்ச்சிகள் நடக்க சந்தர்ப்பம் வரும்.

**அக்னிசர்மா பக்கம்**

# நடக்கும்!

**துலாம் :** இந்த வாரம் புதிய முயற்சிகள் கைகூடும். நிம்மதி நிறையும். உங்க புத்திசாலித்தனம், திறமை பளிச்சிடும். தெய்வ காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். அலுவலகப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு, இடமாற்றம் ஆகியவை உண்டாகும். தொழில் சம்பந்தமாக வெளியூர் / வெளிநாடு போக வாய்ப்பிருக்கு. சிலருக்குப் புதிய பொறுப்புகள் வந்து சேரும். இதுவரை இழுத்தடித்துக் கொண்டிருந்த பணம் இப்போது வந்து சேரும். சினிமா சங்கீதம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. பேச்சில் நிதானம் அவசியம்.

**விருச்சிகம் :** இந்த வாரம் எந்தவிதமான குறுக்கீடுகள், இடையூறுகள் வந்தாலும் குருபலத்தால சமாளிப்பீங்க. கோர்ட் வழக்கு விவகாரங்கள்ல அனுகூலம் உண்டாகும். உத்தியோகத்தில் நல்ல திருப்பம் உண்டாகும். புதிய பொறுப்புகள் வந்துசேரும். வியாபாரிகளுக்கு லாபம் கொட்டும். இரும்பு, எஃகு இயந்திர சம்பந்தமான பொருள்கள், வாகனம், போக்குவரத்து சாதனங்கள் லாபம் தரும். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். உறவினர்கள் வருகை, விருந்து, உபசாரம் போன்றவை நடக்க வாய்ப்பிருக்கு.


**தனுசு :** தடைகளைச் சமாளித்து வெற்றி நடை போடப் போறீங்க. எப்பாடு பட்டாவது எடுத்த காரியத்தை முடிச்சுடுவீங்க. ஆறில், ராகு, பன்னிரண்டில் கேது உலவுவதால் எதிர்ப்புகள் மறையும். செலவுகள் கட்டுக்கடங்காது. சொந்தத் தொழில் பண்றவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. வியாபாரிகளுக்கு இதுவரை வர வேண்டிய தொகை வந்து சேரும். வியாபாரத்தில் போட்டி, பொறாமை விலகும். வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி வரும். தொழில் சம்பந்தமாக வெளியூர் பயணம் மேற்கொள்ள வாய்ப்பிருக்கு. சிலர் வீடு கட்டவோ, வாங்கவோ நேரலாம். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது.


**உற்சாகமான வாரத்தை எழுத்தாளர் சுரேஷின் (சுபா) மனைவி ஜெயந்தி (கும்பம்) கொண்டாடுகிறார்.**


**மகரம் :** இந்த வாரம் எல்லாம் காரியங்களிலும் முன்னேற்றம் காண்பீர்கள். எதிர்ப்புகள் மறையும். மனத்தில் தெளிவான சிந்தனை அமைதி ஏற்படும். புதிய முயற்சிகள் வெற்றி தரும். வியாபாரிகள் புதிய தொழில் தொடங்க வாய்ப்பிருக்கு. மருத்துவம், கெமிக்கல்ஸ், ஜவுளி, ஆகிய இனங்கள் லாபம் தரும். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். சிலர் புதிய வீடு, வாகனம், வாங்க வாய்ப்பிருக்கு.

**கும்பம் :** உற்சாகமான மனநிலை, குடும்ப நலம், வாக்கு சாதுர்யம், முகவசீகரம் ஆகியவை உண்டாகும். அரசியல்வாதிகள் விழிப்போடு செயல்படுவது நல்லது. சில திடீர் அரசியல்மாற்றங்கள் காரணமாக அரசியல்வாதிகளின் சவாலை சமாளிக்க வேண்டி வரும். உஷார். வியாபாரத்தில் பொருளாதார பிரச்னைகள் ஏற்பட்டு விலகும். குடும்பத்தில் கணவன் மனைவிக்குள் சிறு சிறு சலசலப்பு ஏற்பட்டு விலகும். திருமணம் போன்ற சுபகாரிய முயற்சிகள் கைகூடும். பெண்களுக்கு உற்சாகமான வாரம்.


**மீனம் :** இதுவரை தாமதமாகிவந்த முக்கியப் பணிகள் நிறைவேறும். வழக்கு விவகாரங்களில் எதிர்பாராத அனுகூலம், அலுவலகத்தில் ஒற்றுமை, உற்சாகமான சூழ்நிலை உண்டாகும். குருவும், புதனும் உச்சபலத்துடன் ஜென்ம ராசியைப் பார்ப்பதால் எதிர்காலத்துக்கான வாழ்க்கை நலனுக்கு ஏற்ற வகையில் பலமான அஸ்திவாரமாக அமையும். வியாபாரத்தில் பொருளாதார நிலையில் அபிவிருத்தி உண்டாகும். பண நட மாட்டம் தாராளமாக இருக்கும்.







**செப்டெம்பர் 4 முதல் 10 வரை**







“

அடடா!
எவ்வளவோ சிரமப்பட்டுப்
போய்ப் பார்க்க வேண்டிய
எம்பெருமானை இங்கேயே
நாம் பார்க்கிறோமே.

”



# குறையொன்றுமில்லை 6

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

இங்கேயிருந்து எட்டுப் படிகள் கடந்து எம்பெருமானிடத்தில் போயாயிற்று. இவன் பகவானை அனுபவிக்க, பகவான் இவனை அனுபவிக்கிறான். இவன் பகவானைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறான். அந்த அனுபவம் எப்படிப்பட்டது என்பது அங்கே போனால்தான் தெரியும். இங்கே இருந்தபடி அதைப் புரிந்து கொள்ள முடியாது.

அடியேன் அதைப் பற்றி எத்தனையோ சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால் எத்தனை நேரம் சொல்ல முடியும்! அனுபவத்தை அனுபவித்தால் தான் தெரியும்.

நாம் சாமான்ய விஷயங்களையெல்லாம் பெரிதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம் உலகத்திலே. அல்ப விஷயங்களே பழகிப் போன நம் நெஞ்சுக்கு அந்த உயர்ந்த அனுபவம் என்பது அவ்வளவு சுலபமாகப் புரியுமா! மேலான விஷயம் அது. இங்கே இருக்கிற ஹ்ருதயத்துக்குப் புரியாத விஷயம்.

பகவானுக்குத் துல்யமான போக போக்யங்களை அடைகிறான் என்று சொன்னால் அதை இங்கேயிருந்து புரிந்து கொள்ள முடியாது.

உபநிஷத் சொல்கிறது: பரப்ரும்மத்துக்குத் துல்யமான போகம், ஞானம் எல்லாவற்றையும் சாமான்யமான இந்த ஜீவனும் பெறுகிறான்.

இப்படிச் சொன்னால் என்ன அர்த்தம்? பரப்ரும்மத்துக்குச் சமானமாக இவனும் ஆகிவிடுவானா...? இவனும் லக்ஷ்மிபதி ஆவானா? இவனும் சிருஷ்டி கர்த்தாவாகிவிடுவானா...?

இதை விரோத பரிகாரம் என்கிற ரகசியத்திலே ஸ்வாமி தேசிகன் அழகாக எடுத்துக் காட்டுகிறார். லௌகிக உபமானம் ஒன்று சொன்னால்தான் நமக்கு நன்றாகப் புரியும் என்று அப்படியே எடுத்துக் காட்டுகிறார்.

ஒரு தங்கக் கடைக்கு ஒருத்தர் போகிறார். நாலாயிரம் ரூபாய் கொடுத்து இதற்கு உண்டான தங்கத்தைக் கொடுங்கள் என்கிறார். வியாபாரியும் நான்காயிரம் ரூபாயை வாங்கி உள்ளே போட்டுக் கொண்டார். போட்டுக் கொண்டு, தராசை எடுத்தார். அதிலே ஒரு பக்கத்தில் தங்கத்தை வைத்தார்; ஒரு பக்கத்தில் குந்துமணிகளை வைத்தார். வைத்துவிட்டு, 'சரியா?' என்று கேட்டார். 'ரொம்ப சரி!' என்றார் வாங்க வந்தவர்.

தங்கம் ரொம்ப வியசனப்பட்டதாம். "என்னைப் போய் நான்கு குந்துமணி எடை, ஐந்து குந்துமணி எடை என்று சொல்கிறீர்களே. இதை நினைக்கிறபோது தான் ரொம்ப வருத்தமாக இருக்கிறது" என்றதாம்.

"என்னை நெருப்பிலே போட்டு வாட்டுகிறார்கள்; அதற்கும் கவலைப்படவில்லை; கம்பி – கம்பியாக இழுக்கிறார்கள்; அதற்கும் கவலைப்படவில்லை; சுத்தியால் அடிக்கிறார்கள், ரத்தினங்களையெல்லாம் பதிப்பதற்காக என்னைப் போட்டு நெருப்பிலே காய்ச்சுகிறார்கள். இதற்கெல்லாம் கவலைப்படவில்லை. கடைசியில் நான்கு குந்துமணி எடை என்று சொல்லிவிட்டார்களே; அதை நினைத்துத்தான் ரொம்ப வருத்தமாயிருக்கிறது... பெரிய மகாவித்வான், எல்லா சாஸ்திரங்களையும் கற்றறிந்தவர் – அவரை

## இதில் கூடவா!



அரசு ஊழியர்கள் என்றாலே அலட்சியம், அலட்சியம், எதிலும் அலட்சியம்தான். இது நாள் வரை சின்ன சின்ன விஷயங்களில் அலட்சியம் காட்டி வந்தவர்கள், தற்போது ரூபாய் நோட்டு அச்சடிப்பதிலும் அலட்சியம் காட்டி வருகின்றனர்.

நூறு ரூபாய் நோட்டு, ஒரு பிரபல நாட்டுடமையாக்கப்பட்ட, தேசிய வங்கியின் எங்கள் ஊர் கிளையில் நான் வாங்கிய நூறு ரூபாய் கட்டில் இருந்தது. இந்த ரூபாய் நோட்டில் அச்சு சரியான இடத்தில் இல்லாமல், கீழே இறங்கி உள்ளது.

இந்த நோட்டை ஒரு வெளிநாட்டுக்காரர் பார்த்தால் நமது நாட்டைப் பற்றி என்ன நினைப்பார்? அரசு ஊழியர்கள் எதில்தான் அலட்சியம் காட்டுவது என்று ஒரு விவஸ்தை கிடையாதா? இந்த மாதிரி தவறுதலாக அச்சிடப்பட்ட ரூபாய் நோட்டைப் புழக்கத்திலாவது விடாமல் இருந்திருக்கலாமே?

— எம். வினோத்

யும் ஸ்வாமி என்று சொல்லி, ஒன்றுமே தெரியாதவரையும் 'ஸ்வாமி' என்று அழைத்தால் எப்படி இருக்கும். அப்படிப்பட்ட நிலைமை இது..."

என்று தங்கம் மனது கஷ்டப்பட்டுக் கொண்டதாம்.

வியாபாரி பார்த்தார், தங்கத்தை எடுத்து உள்ளே போட்டுக் கொண்டு, தங்கம் வாங்க வந்தவரிடம் குந்துமணியை நீட்டினார். அவர் வாங்க மறுத்துவிட்டார்.

"என்ன அக்கிரமம்! நாலாயிரம் ரூபாயையும் வாங்கிக் கொண்டு நான்கு குந்துமணி கொடுக்கிறீரே...!" என்றார் கடைக்காரரிடம்.

"நீர்தான் சமம் என்று சொன்னீரே"_ என்றார் கடைக்காரர்!

"என்ன அக்கிரமம்! குந்துமணி தங்கமாகிவிட முடியுமா...?" என்கிறார் வாங்க வந்தவர்.

அதே மாதிரிதான்... குந்துமணி எப்படித் தங்கம் ஆகாதோ அப்படியே பகவானுக்குத் துல்யமான போகம், பகவானுக்குத் துல்யமான ஞானம் இவன் பெறுவானேயொழிய லக்ஷ்மிபதி ஸ்தானமும் ஸ்ருஷ்டிகர்த்ருத்வமும் **அவனுக்கே!** இதைத்தான் சாயுஜ்யம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஸாஷ்துசை என்றால் என்ன...?

பகவான் இவனை அனுபவிப்பதும் இவன் பகவானை அனுபவிப்பதும் எள்ளளவும் குறையாமல் சமமாய் இருக்க வேண்டும். – அதாவது அளவிலும் அனுபவத்திலும் சமமாக இருக்க வேண்டும்.

அதை நாம் தெரிந்து கொள்ள வேண்டுமானால், ஓர் உதாரணம் காட்டலாம்.

ஒருத்தர் அரைப்படி சர்க்கரைப் பொங்கல் சாப்பிடுகிறார்; இன்னொருத்தர் கால்படி சாப்பிடுகிறார். அளவிலே வித்தியாசம் வந்து விடுகிறது. சாப்பிடுகிற பதார்த்தம் இனிப்பு; – ஒரே பதார்த்தம் தான் என்றாலும் அளவிலே வித்தியாசம்.

வேறு ஒருத்தர் கால் படி புளியோதரை சாப்பிடுகிறார்; அதே நேரத்தில் இன்னொருத்தர் கால் படி சர்க்கரைப்பொங்கல் சாப்பிடுகிறார். அளவு சமமாயிருந்தாலும் சாப்பிடுகிற பதார்த்தத்தினுடைய ருசியில் வித்தியாசம் இருக்கிறது.

இப்படி இல்லாமல் இவரும் அரைப்படி அவரும். அரைப்படி – சர்க்கரைப் பொங்கலையே சாப்பிட்டால்...? அதைப் போன்றதுதான் பகவான் இவனை அனுபவிப்பதும் இவனை பகவான் அனுபவிப்பதும். எல்லா விதத்திலும் அது சமமாக அமைந்திருக்கிறது என்பதைத் தான் உபநிஷத் 'ஷாஸ்துசை' என்ற சப்தத்தினால் காட்டிக் கொடுக்கிறது.

இப்படி விவேக, நிர்வேத, விரக்தி, பீதி

என்று படிப்படியாகக் கடந்து போய்த் தான் பரமாத்மாவான எம்பெருமானை நாம் பார்க்க முடியும். அவ்வளவு சிரமப் பட வேண்டும். ஆனால், இங்கே பீஷ்மாச் சார்யர், 'பரமாத்மா' என்று சொல்கிற போதே அந்தக் கண்களால் எதிரே உட் கார்ந்திருக்கிற பரமாத்மாவை – கிருஷ்ண பரமாத்மாவைப் _ பார்த்தாராம். 'அடடா! எவ்வளவோ சிரமப்பட்டுப் போய்ப் பார்க்க வேண்டிய எம்பெருமானை இங்கேயே நாம் பார்க்கிறோமே' என்று எண்ணினாராம்.

எடுப்பார் கைப்பிள்ளையாக வந்து அப்படியே ஆட்கொள்கிறான் பரமாத்மா. எவ்வளவு உயர்ந்தவனாக இருந்தாலும் தன் உயர்த்தியையெல்லாம் குறைத்துக் கொண்டு, நாம் அனுபவிக்கும்படியாக வந்து தன்னைத் தாழ இட்டுக் கொள் கிறான். இவ்வாறு செய்வதனாலேதான் அவனிடத்திலே பரமாத்வத்வம் பிர காசிக்கிறது. இல்லையானால் அவன் கிட்டே யார் போக முடியும்...? தன்னைக் காட்டிக் கொடுப்பதனால்தானே அவனைப் பரமாத்மா என்று நாம் உணர்கிறோம்.

இதுதான் அவனுடைய சௌலப்ய சௌசீல்யாதி குணம். இதை சாஸ்திர ரீதியாகச் சொல்ல வேண்டுமானால்,

***'சொரூப நிரூபக தர்மம்***
***நிரூபித சொரூப விசேஷணம்'***

என்று சொல்லுவார்கள்.

இதை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்.


வைகுண்டத்திலே இருக்கிற எம்பெரு மான் நித்ய சூரிகளால் சூழப்பட்டிருக் கிறான். முக்தாத்மாக்கள் சேவிக்கிறார்கள் அவனை. அப்படியே ஆனந்தமாய் அங்கே இருக்கிறான். அதெல்லாம் அவனுடைய சொரூப, நிரூப குணங்கள்.

நிரூபித ஸ்வரூப விசேஷணம்...? அப்படியென்றால் என்ன?

யானையே பார்த்திராத ஒருவன், "யானை எப்படி இருக்கும்?" என்று கேட் டால், "பெரியதாய், கறுப்பாய் இருக்கும்" என்று பதில் சொன்னாராம் ஒருத்தர். உடனே இவன் எருமைக் கடாவைத்தான் யானை என்று நினைத்துக் கொண்டு விட்டானாம்! – அதுவும் பெரிதாக, கறுப் பாக இருக்கிறதே!

யானைக்கே உரிய சில தன்மைகளைச் சொன்னால்தானே சரியாகும். காது பெரி தாய், முறம் மாதிரி இருக்கும், துதிக்கை இருக்கும், ஆண் யானையாக இருந்தால் தந்தம் பெரிதாக இருக்கும் – இப்படி யெல்லாம் சொன்னால்தான் யானையை யானையாக உணருவார்கள்.

ஆகையினாலே, பரமாத்மாவைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், அவன் அவதார காலத்திலே சில விசேஷங்களைக் காட்டுகிறான் அல்லவா... அதுதான் நிரூபித ஸ்வரூப விசேஷணம் என்று பெயர் – அந்த விசேஷங்களை



"என்னங்க... நம்ம தலைவரின் பெயருக்குப் பிறகு 'இ.பெ.ரே'னு போட்டிருக்கு...? என்ன பட்டம் அது?"

"இடதுகை பெருவிரல் ரேகைன்னு அர்த்த மாம்..."

– நாமக்கல் பாலு

நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.

அவதார காலத்திலே தயை, காருண்யம், உயர்ந்ததான சௌசீல்யம் (உயர்த்தியாய்ப் பாராமல் சாமான்யருடன் கூட இரண் டறக் கலந்திருத்தல் என்பதுதான் சௌசீல் யம்), சௌலப்யம் (சுலபமாய் எல்லோ ருக்கும் கையிலே கிடைத்தல்) – அவதார காலத்தில் அவனுடைய இந்தக் குணங் களெல்லாம் காட்டியதால்தான் அவனு டைய பெருமையை நாம் உணர முடிகிறது.

பரமாத்மா என்பதால் அவன் பரன் தான்; உயர்ந்தவன்தான்; ஆனால், எளிய வனாய் நாம் காணும்படியான நிலையில் இருக்கிறான் என்பதையும் பரமாத்ம சப்தம் உணர்த்துகிறது.

(வளரும்)

# அமெரிக்காவில் பாபா!



அமெரிக்காவின் பன்னிரண்டு நகரங்களில், ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி பாபா ரிலீஸ் ஆனது. படத்தை அமெரிக்காவில் வெளியிட்டிருப்பவர் முருகேஷ் ஆறுமுகம். இவர் சுவாமி சச்சிதானந்தாவின் பேரன் என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்த இரண்டு மாதங்களில், அமெரிக்காவின் நூறு தியேட்டர்களில் பாபா திரையிடப்படவுள்ளது.

ரஜினியின் லோட்டஸ் இன்டர்நேஷனல் நிறுவனத்திடமிருந்து படத்தின் அமெரிக்க விநியோக உரிமையை வாங்கிய முருகேஷ் ஆறுமுகம், அதனை ட்ரீம்ஸ் இண்டியா என்ற நிறுவனத்தை நடத்திவரும் விஜய் ஆனந்த்துக்கு விற்றுவிட்டார்.

நம் ஊரைப் போலவே, அமெரிக்காவிலும் திருட்டு வீடியோ பிரச்னை இருக்கிறது. எனவே இன்டலக்சுவல் ப்ராபர்டி ரைட்ஸ் விதிகளின்படி 'பாபா' படத்தைத் திருட்டு வீடியோ பிரதியெடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

'பாபா' படத்தின் திருட்டு கேஸட், ஸீடி வைத்திருப்பவர்கள் குறித்து துப்பு கொடுத்தால் அன்பளிப்பாக நூறு டாலர் தரப்படும் என்று அறிவிப்பும் செய்யப்பட்டுள்ளது. தவிர, விநியோகஸ்தர்கள், திருட்டு வீடியோவை ஒழிக்க பல்வேறு அமெரிக்க மாநிலங்களின் காவல் துறையினரையும் நாடியுள்ளனர்.

— கௌதம்

படம் : யோகா

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Pvt. Ltd. Editorial Team : C. Egnath Raj, Anuradha Sekhar, Jesudoss. Layouts : S.Stephen, P.R. Rajan.
Editor : Seetha Ravi.
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Half Yearly Subscription : India : Rs. 165/-
Overseas (Air Mail) Annual : 62 U.S. Dollars, Srilanka Rs.2000/-

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No TN / Chief PMG-141 / 2002 *
Licensed to post without prepayment under PMG's Licence No WPP 37 * Registered as a Newspaper in Srilanka

# மாமிஸ்
## மசாலா




மாஸ்டர் மசாலா




சாம்பார் பொடி




பாயசம் மிக்ஸ்




கேசரி மிக்ஸ்



மாமிஸ் மசாலா இருந்தா அம்மாவே
கூட இருக்கிற மாதிரி....




**மாமி புட்ஸ் (பி) லிட்.,**

H.O : (New No)164, புல்லலக்கோட்டை ரோடு, விருதுநகர் 626 001.
Ph. : (04562) 367838, 343601 Fax: 344168
B.O : 2/1, சக்கரபாணி தெரு, மேற்கு மாம்பலம்,
ரயில்வே லைன் அருகில், சென்னை 33.
Ph. : (044) 4724500, E-mail:mail@maamis.com.
Visit : www.maamis.com

SITA